بسم الله الرحمن الرحيم

அல் கலாம்

AL-KALAM

பத்திராதிபர் :—கூ. அ. அப்துல் மஜீத்.

வால்யூம். 2	1925ஹு அக்டோபர்மீ	பகுதி. 10

திருநபியின் ஜனனம்.

(281-வது பக்கத்தொடர்)

இமாமுல் ஹிந்து மௌலானா அபுல்கலாம் ஆஜாத் அவர்கள் எழுதியது.)

3

மேற்கூறப்பட்டு வந்த உதாரணத்திற் கேற்ப ஈசவீ 6-வது நூற்றாண்டினூடே மானுஷீகத் தன்மையின் உலகத்தைச் சார்ந்த திறந்த வெளியில் ஆத்மார்த்தீகமான ஓர் பெரும் மாறுதலேற்பட்டது. இம்மாறுதலானது முழு உலகத்திற்கும் பொதுவாய்க் கிடைக்கப்பெற்ற தெய்வீக நன் கொடையாகும். இந் நன்கொடையின் மூலமாய் உலகமும், உலகத்தைச் சார்ந்த வஸ்துக்களும் செழித்து அவைகளுக்குச் சந்தோஷச் செய்தியும் அறிவிக்கப்பட்டது. இச்சந்தோஷச் செய்தியானது ஆத்மார்த்தீக உலகத்தின் வறட்சி, பஞ்சம், துரதிருஷ்டம், க்ஷீணதிசை ஆகியவைகளை யொழித்துவிட்டது. தூய்மையான அல்லாஹு தஆலா, தன் தெய்வீகத் தத்துவத்தை "தீ" "மின்னல்" ஆகியவைகளின் மூலமாய்த் தோன்றச் செய்வேனென்றும், ஆயிரக்கணக்கான பரிசுத்தமானவர்களோடு தன் தெய்வீக உணர்வை வெளியிடுவேனென்றும் "சீனா" வென்னும் மலையின் உச்சியிலிருந்து அறிவித்தவாறு கடைசி

யாய் அவைகள் வெளியாயின. அன்றியும் "ஸயீர்" "பாரான்" ஆகிய மலைகளின் உச்சியில் அல்லாஹுதஆலாவின் கிருபாகடாக்ஷ மென்னும் மழை பெய்தது.

இது உலகத்தாருக்கு நேரான வழியைக் காட்டத்தக்க தெய் வீக உண்மையின் பரிபூரணப் பொருளாகும். அன்றியும் இது உல கத்தாருக்கு அளிக்கப்பட்டு வந்த மார்க்க நெறியின் கடைசி பாக மாகும். உலகத்தவர் நன்னிலைமை அடையும் பொருட்டு அல்லா ஹுதஆலா அனுப்பிவந்த வேதம், செய்தி ஆகியவைகளின் முடி வான அங்கமாகும். மனுக்கள் முக்தியடைவதற்கான விளம்பரங் களின் முடிவான எச்சரிக்கையாகும். உலகத்தவர் என்னும் முறை யில் கிடைக்கப் பெற்றுவந்த வார்சுக் கிரம உரிமையுள் இதுவே கடைசி நன்கொடையாகும். இதுவே முஸ்லிம்வகுப்பார் தோன்றும் ஆரம்பதினமாகும். ஹஜ்ரத் கத்முல் முர்ஸலீன் வரஹ்மதுன்லில் ஆலாமீன் "முஹம்மதிப்பனு அப்துல்லாஹ்" ஸல்லல்லாஹு அலை ஹி வஅலா ஆலிஹீ வஅஸ்ஹாபிஹீ வசல்லம், அவர்களின் ஜனனமே இத்துணை நன்மைகளுக்கும் காரணபூதமாக விருக்கின் றது.

4

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் ஜனன தினமே இஸ்லாமிய பிரசாரத்தின் ஆரம்பதினமாகும். "ரபீஉல் அவ்வல்" என்னும் இம்மாதத்திலேயே முஸ்லிம் வகுப்புக்குரிய அஸ்திவார மிடப்பட்டது. இவ்வடிப்படையின் மூலமாகவே முழு உலகத்திற்கும் பொதுவான முக்திக்குரிய நேர்வழி பகிரங்க மாயிற்று.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஜனன தினம், "ஹிஜாஸ்" தேசத்தின் ஆக்ஷியை யொட்டிய ஆரம்பதின மல்ல. நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஜனன தினமானது அரேபியாவின் முன்னேற்றத்திற்குரிய மஹான் பிறந்ததினமல்ல. நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர் களின் ஜனனதினமானது, வகுப்பு, சமூகம், பலம் ஆகியவைகளைப் பகிரங்கப்படுத்தும் தினமல்ல. நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஜனனதினமானது ஜாதி, தேசம் ஆகியவை களின் உயர்வைப்பற்றிய செய்தியை அறிவிக்கும் தினமல்ல. ஆனால் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஜனன

தினமானது முழு உலகத்திலும் தெய்வீக ஆக்ஷியை ஸ்தாபிக்கும் மகானின் ஜனனதினமாகும். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஜனனதினமானது முழு உலகத்தோரின் முன்னேற்றத்திற்குரிய பெரியாரின் ஜனனதினமாகும்.

ஆதலின் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஜனன தினமே மிகப் பெரியதொரு முக்கிய தினமாகும். ஏனெனின்? இத்தினத்திலேயே உலகத்திற்கு வேண்டிய அரியவைகள் யாவும் தோன்ற ஆரம்பித்தன. நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஜனனதினத்தை ஞாபகம் மூட்டுவதற்குக் காரணம், வகுப்பு, ஜாதி, தேசம் ஆகியவைகளை யொட்டியதல்ல. ஆனால் சந்தேகமின்றி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஜனனதினமானது முழு உலகத்திற்கும் பொதுவாகக் கிடைத்த பெரும் நன்மையை ஞாபகம் மூட்டுவதற்குரிய நாளாகவிருக்கின்றது. ஆகவே உலகத்திற்கு சத்தியம், நன்மை ஆகியவைகள் அவசியமாக இருக்கும் வரை இந்நாளை உலகத்தவர் மறக்கவியலாது. நியாயம், உண்மை ஆகியவைகளை இவ்வுலகம் கோருவதாக இருக்கும்வரை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஜனனதினத்தை உலகம் மறந்து விடாது.

5

உலகில் பலபெரும் மாறுதல்களேற்பட்டிருக்கின்றன. இம்மாறுதல்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு குறிப்பிட்ட வகுப்பைச் சார்ந்ததாக இருக்கின்றன. ஆகவே இம்மாறுதல்களுக்குக் காரணமாக உள்ளவர்களின் ஞாபகார்த்தத்தை முன்னிட்டுத் தகுந்த ஏற்பாடுகளைச்செய்ய வேண்டுமென அவ்வகுப்பைச் சார்ந்தவர்கள் கருதுகின்றனர். ஒவ்வொரு வகுப்பாரும் தங்கள் முக்கியஸ்தர்களின் ஞாபகார்த்தத்தை யொட்டிச்செய்யும் காரியங்கள் அபரிதமாக விருக்கின்றன.

ஞாபகார்த்தமென்னும் பெயரால் நடைபெறும் காரியங்களுள் அரசர்களின் விலை மதிக்கத்தகாத சிம்மாசனங்கள், ஜயசீலர்களுடைய வாளாயுதங்களின் பிரகாசங்கள் பயமுறுத்தக்கூடிய படைத்தலைவர்களின் வீரச் செய்கைகள், வைத்தியத்தில் மிகவும் பிரசித்திப்பெற்ற பண்டிதர்களின் ஆச்சரியமான தந்திரங்கள், அறிவாளிகளின் கட்டுரைகள், பிலாசபர், கற்றோர் ஆகியவர்களின் கல்வித் திறமைகள், தேசாபிமானிகளின் உபதேசங்கள், சமூகத் தலைவர்

களின் தீரச்செய்கைகள், அவர்களின் தியாகங்கள், சிற்பிகளியற்றிய அபூர்வப் பொருள்கள் ஆகியவைகளே மலிந்து கிடக்கின்றன. மேற் கூறப்பட்டவை யாவும் அரியவைகளாகவே யிருக்கலாம். ஆனால் இவைகளில் முழு உலகத்தையும் ஞாபகம் மூட்டுவதற்கான செய்கை என்ன இருக்கின்றது ? இதில் முழு உலகத்திற்கும் நன்மை பயக்கத் தக்க அரும்பொருள் ஏதும் இருக்கின்றதா ?

6

பூவுலகில் பலபெரும் கண்டங்களைத் தங்கள் வாளின் முனையில் வைத்து ஆக்ஷிபுரிந்த பெரும் வல்லரசர்களை முதலாவதாகக் கவனிப் போம். இவர்கள் தங்கம், வெள்ளி, நவரத்தினங்கள் ஆகியவைக ளால் தயாரிக்கப்பட்ட ஆச்சரியமான அழகிய மாளிகைகளில் இருந்து உல்லாசமாய்க் காலம் கழித்தார்க ளென்பதுண்மையே. இவர்கள் ஏராளமான பொருளைச் சேகரித்திருந்தனர் என்பதை நாம் மறுக்க வில்லை. உயிருள்ளவைகளை இம்சிக்கவும், கொல்வதற்கு முரிய ஆயு தங்களை ஏராளமாய்க் கொண்டிருந்தார்க ளென்பதும் உண்மையே. இவர்களின் அடிமைகளாய் எண்ணிறந்த மனிதர்கள் இருந்துவந்தார் களென்பதையும் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். ஆதலின் இவ் வரசர்களின் பிறந்த தினத்தை மறந்துவிடாமல் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டுமோ ?

இவ்வரசர்களின் பிறந்த தினத்தை உலகத்தவர் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று கூறினால் இவர்கள் உலகத்திற் குப் புரிந்த நன்மையாது? இவர்கள் பல விசாலமான பூமிகளை ஜயித் திருக்கின்றனர். இவர்கள் தேசங்களைப் பாழ்பண்ணி கொள்ளையிட்ட பொருள் அளவிடற்பாலதே. ஆனால் இவ்வரசர்களின் பிறந்த தினத் தைச் சிந்தித்து உலகோர் விசுவாசிக்கத் தக்ககாரியம் இவர்களிடத் தில் என்ன இருக்கின்றது.? இவ்வரசர்கள் பெரும் ஜயசீலர்களென்று அறிவிக்கப்படின் இவர்களே பூமியின் பெரும்பாகத்தைப் பாழாக் கினவர்களென்று கொள்ளல்வேண்டும். இத்தகைய அரசர்களே கணக்கற்ற மனுக்களை வதைத்தவர்களெனக் கருதல் வேண்டும். இத்தகைய அரசர்களே உலகில் பெரும் இரத்த நதிகளை ஓடச்செய்த வர்களெனக் கூறல்வேண்டும். இத்தகைய அரசர்களே அல்லா ஹ்வுத ஆலாவின் ஏராளமான அடிமைகளைத் தங்களின் கீழ்ப்பட்ட அடிமைகளெனப் பகர்ந்து விகாரமான விலங்குகளை மாட்டியவர்களே னக் கருதல்வேண்டும். இந் நிலைமையில் உலகம் தன்னழிவு, தன்

கொலை, தன் நாசம் (அல்லாஹுத ஆலாவின் முனிவுக்கிலக்கான "இப்லீஸ்" என்னும் தீயாரின் ஆசியால் விளைந்த) தன்னடிமை வாழ்வு ஆகியவைகளையா உலகம் தன் க்ஷேமத்திற் குரியனவாக் கருதித்து ஞாபகத்தில் வைத்திருத்தல் கூடும்?

"சிகந்தர்" என்னும் அரசர் பூர்வகாலத்தில் பெரும் ஜயசீலராக இருந்தார். ஆதலின் இவர் தன் சிம்மாசனத்தை முழு உலகத்தாரும் பூஜிக்கவேண்டுமெனக் கருதினார். ஆனால் இவ் வரசரின் பிறந்த தினத்தை உலகம் தன் ஞாபகார்த்தத்திற்குரிய தின மென்று கொள்ளுமாயின் தந் நாசம், தன்னடிமை வாழ்வு ஆகியவைகளையே உலகம் ஞாபகம் வைத்திருக்க வேண்டுமல்லவா ?

உலகில் எத்தனை அரசர்கள் ஜனனமாகி யிருந்தாலும் அவர்களின் ஜீவிய சரித்திரத்தை நோட்டமிடுவோமாயின் இவ்வரசர்கள் தங்களின் பெருமைக்குத் தக்கவாறு மனிதர்களைத் தங்களின் அடிமைகளாக்கிக் கொள்ள முயன்று வந்தார்களென்னும் முடிவுக்கே வருவோமென்பது திண்ணம். இவ்வரசர்கள் தங்களின் கீர்த்தியினளவுக்கேற்றவாறு மனிதர்களின் இயற்கையான முன்னேற்றத்திற்குத் தடைக்கல்லாக விருந்தனர். இவ்வரசர்கள் தங்கள் பலத்தின் அளவிற்கேற்றவாறு மனிதர்களின் பிறப்புரிமையான சுயேச்சைக்கு விலங்குகளாக இருந்தனர். இவ்வரசர்கள் தங்கள் அந்தஸ்த்தின் அளவுக்கேற்றவாறு மனிதர்களின் கீர்த்தி, கௌரவம் ஆகியவைகளுக்கு உலைவைக்கும் பேராபத்தாகவிருந்தனர்.

ஆகவே உலகத்தின் நற்பெயரைக் கெடுக்கும் வடுவாக இருந்தவர்களின் ஜனன தினத்தை ஞாபகப் படுத்திக்கொள்வதால் உலகம் இழந்துவிட்ட நற்பாக்கியங்கள் கிட்டி விடுமா ?

7

வைத்தியத்தில் கீர்த்திபெற்ற பண்டிதர்களின் தந்திரம், பிலாசபர்களின் பிலாசபா, சிற்பிகளின் சிற்பங்கள் ஆகிய யாவும் சந்தேகமின்றி உலக சரித்திரத்தில் குறிப்பிடத்தக்கனவே. ஆனால் இவைகள் தங்களை உலகம் ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டுமெனக் கருதுமாயின் இதற்கு வேண்டிய நியாயத்தை எடுத்துக் காட்ட வேண்டு மல்லவா? பண்டிதர்களின் தந்திரம், பிலாசபர்களின் பிலாசபா, சிற்பிகளின் சிற்பம் ஆகியவைகள் முழுஉலகத்தின் விசனத்தைப் மொழிப்பதற்காகப் புரிந்த நன்மையாது ?

வானத்தின் திறந்த வெளியில் எண்ணமுடியாத நக்ஷத்திரங்கள் பரவியிருக்கின்றன. இவைகள் தோற்றத்திற்குப் புலப்படுவதுபோலன்றி உண்மையில் பெரும் உருவங்களாக இருக்கின்றன வென்றும், இந் நக்ஷத்திரங்கள் அளவற்ற பிரகாச முடையனவாக இருக்கின்றன வென்றும், இவைகள் வானத்தில் சுற்றித் திரியக் கூடியனவாக யிருக்கின்றன வென்றும், இவைகளின் ஓட்டமானது காலம், நேரம் ஆகியவைகளை கணிக்கத் தக்கனவாக யிருக்கின்றன வென்றும் முதலாவதாகக் கண்டுபிடித்து வெளியிட்டவர் சந்தேகமின்றி திறமையான பெரும் மூளையை உடையவரென்பதில் ஆக்ஷேபணையில்லை. ஆனால் நக்ஷத்திரங்களை யொட்டிய உண்மையை அறியாதிருந்த காலத்தில் உலகம் நோய்வாய்ப் பட்டிருந்ததுபோலவே இவ்வுண்மையை உணர்ந்தபின்னும் நோயாகவே யிருந்துவந்தது. வானத்தை யொட்டிய செய்தியை மனிதர்கள் அதிகமாய் அறியா திருந்ததை முன்னிட்டு உலகம் நோய் வாய்ப்பட்டிருக்கவில்லை. ஆனால் மனிதர்கள் தன்னையும் தன் உத்தமமான இயற்கையையும், தனக்கு அவசியமான நேரான வழியையும் அறியாதிருந்த ஒரு வியாதிதான் உலகத்தைப் பிடித்திருந்தது.

மனிதர்களுக்காக சிற்ப சாஸ்திரங்களை இயற்றியவர்கள் அழுத்தமான கட்டிடத்திலும், அழகிய மாளிகையிலும் வீற்றிருந்தால் அன்னவர்களைப் பெரியோரென மதித்தீர்களாயின் காடு, செடி முதலிய விடங்களிலும் விருக்ஷங்களினடியிலும் தங்கியிருந்தோர் உண்மையான நல்ல மனிதர்கள் அல்ல வென்று பகரவும் முன் வருவீர்களா ? அழகிய பெரும் மாளிகைகளில் வசித்திருந்தவர்கள் தாங்களிழந்து விட்ட உண்மையை அடைந்தனரா ?

மானுஷீகத் தன்மையின் உண்மை மறைந்து கிடப்பதே உலகத்தைப் பீடித்திருந்த வியாதியாகும். மானுஷீக வர்க்கத் தாருக்கு வேண்டிய முக்திக் குரியவழி, உலக சமாதானம் ஆகிய பெரும் பேற்றையே உலகத்தின்ஒவ்வொரு அணுவும் ஆரம்ப காலமுதற் கொண்டு தேடித் துடித்துக் கொண்டிருந்தது. இந்நிலைமையில், சிற்பிகளைப் பெரியாரென்று கூறப்படின், அவர்கள் தங்கள் சிற்பவன்மையால் தயாரித்துள்ள அரும்பொருள்கள், உலகத்திற்கு சமாதானம், சாந்தம், அமைதி, நேரானவழி ஆகியவைகளுள் எதை அளித்திருக்கின்றனவென்று வினவ வேண்டியதாக இருக்குமல்லவா? மானுஷீக வாழ்க்கையின் உண்மையை யறிந்து கொள்வதற்கும், மனிதர்கள்

நேரான வழியைக் கண்டு பிடித்துச் செல்வதற்கும் சிற்பிகள் இயற்றியவைகள் என்ன சகாயத்தைச் செய்திருக்கின்றன? அல்லாஹுத்தஆலாவுக்கும் அவனுடைய அடியார்களுக்கும் நல்ல சம்மந்தத்தை உண்டுபண்ணுவதற்கு சிற்பிகள் செய்த காரியம் யாது? மனிதர்கள் முக்தியடைவதற்கு அவசியமானவைகளுள் எதையும் செய்திராத சிற்பிகள் தங்களின் சாமர்த்தியத்தால் இயற்றிய ஆச்சரியமான வஸ்துக்களை உலகம் தன் பொக்கிஷத்தில் வைத்திருக்கக் கூடுமாயினும் இவைகளின் ஞாபகார்த்தத்தால் உலகம் சந்தோஷமடைய முடியாது. ஏனெனின்? உலகத்தைப் பீடித்திருக்கும் வியாதியைப் போக்கத்தக்க குணங்களை இவ்வஸ்துக்கள் கொண்டிருக்கவில்லை.

8

பூர்வ உலகத்தின் புராதன சரித்திரத்தைச்சார்ந்த "கில்தான்" "பாபல்" "யூனன்" "இஸ்கந்தரியா" முதலிய பேர் பெற்ற தேசங்களில் இருந்து தகர்ந்துபோன சின்னம், கோட்டை ஆகியவைகளை ஒதுக்கித் தள்ளிவிட்டோமாயினும்; இன்று "லண்டன்" "பர்லின்" "பாரிஸ்" ஆகிய தேசங்களின் ஆச்சரியமான நாகரிகத்திலும், பிரமிக்கச் செய்யும் அத் தேசத்தவர்களின் முன்னேற்றத்திலும் உலகத்தைப் பீடித்திருக்கும் வியாதியைத் தொலைப்பதற்கான ஔஷதம் ஏதேனும் இருக்கின்றதா?

மேல் நாட்டின் நாகரிகமும், முன்னேற்றமும் உலகத்திற்கு எத்தனையோ அறிக்கைகளை விடுத்து வருகின்றன. அவ்வறிக்கைகள் யாவும் நம்முன் நிற்கின்றன. இன்று மேல் நாடு அடைந்திருக்கும் முன்னேற்றம், பூர்வகாலத்து முன்னேற்றத்தைச் சார்ந்ததல்லவென்றும், பூர்வகாலத்தின் முன்னேற்றத்திற்கும் மேல் நாட்டின் இன்றைய முன்னேற்றத்திற்கும், சம்பந்தமில்லை யென்றும், இம்முன்னேற்றம் பூர்வகாலத்து முன்னேற்றத்தின் அடிப்படை, ஒழுங்கு, முறை, உண்மை ஆகியவைகளை யொட்டியதாகவில்லை என்றும், அம்முன்னேற்றம் மனிதர்களின் கல்வி, செய்கை முதலிய சகல துறைகளையும் ஏக காலத்தில் முற்றுப் பெறச்செய்ய சக்தியுள்ளதாக இருக்கவில்லை யென்றும், அம்முன்னேற்றமானது நடவடிக்கைக்கு அவசியமான அறிவை யடையத்தக்க சாதனம், சௌகரியம் ஆகியவைகளை யளிக்க வில்லையென்றும், தற்கால முன்னேற்றம் எப்பிரசாரத்தின் மூலமாய் முழு உலகத்தையும் கல்விக்களஞ்சியமாக்கியிருக்கின்றதோ அப்பிரசாரத்தைப் புரிவதற்கு வேண்டிய சாதனங்

களை பழைய முன்னேற்றம் கைகொள்ள வில்லையென்றும் கூறி மேல் நாட்டார் பறை சாற்றுகின்றனர். அன்றியும் இக்குறைகளே முற்கால முன்னேற்றம் நாகரிகம் ஆகியவைகள் சித்தி பெறாததற்குக் காரணமென்று எடுத்துக்காட்டி இன்றைய நாகரிகமும், முன்னேற்றமும் சித்தி பெறத்தக்க தல்லவென்று கூறுவது குற்றமென்று அறிவிக்கப் படுகின்றது. இத்தகைய வார்த்தைகளின் மூலமாய் உலகத்திற்குச் செய்யப்படும் உபதேசங்களின் சப்தம் வானத்தையளாவி நிற்கின்றது. அன்றியும் அல்லாஹுதஆலா உண்மையில் பெரும் சக்தியையுடையவனாக இருக்கும் ஸ்திதியில் இன்றைய நாகரீகம் முன்னேற்றம் ஆகியவைகளே பெரும் சக்தி படைத்ததென்று விளம்பரப்படுத்துகின்றனர்.

("அவர்கள் சந்தேகமின்றி இதனைப்பகர்ந்து தங்களுக்குள் பெரும் அகத்தை உண்டுபண்ணிக் கொண்டதோடு அளவற்ற பெரும் வழிகேட்டிற்கும் இலக்காகி விட்டனர்)............(அல்குர் ஆனின் வியாக்கியானம்)

நாகரிகமென்றும், முன்னேற்றமென்றும் அழைக்கப்படுகின்ற அகம்படைத்த பெரும் விக்கிரகத்தை உலகம் கௌரவித்து விசுவாசிப்பதற்காகச் செல்லும் வேளைகளில் உலகத்திற்கு அவ்விக்கிரகத்தின் மூலமாய்க்கிடைக்கும் விடையைச் சற்று சிந்திப்போம்.

நாகரிகம், முன்னேற்றம் என்னும் பொய்ப்போர்வையால் போர்த்துக் கொண்டிருக்கும் விகாரமான இவ்விக்கிரகங்கள் இன்று துண்டு துண்டாய் சிதறிக்கொண்டிருக்கின்றன. பூர்வகாலத்தில் முன்னேற்ற மடைந்திருந்த "தமூத்" "ஆத்" ஆகிய வகுப்பாரை சிக்ஷித்த அல்லாஹுதஆலாவின் சர்வ சக்தி வாய்ந்த காரணக்கரங்கள் இன்றைய புதிய முன்னேற்றக்காரர்களையும் சிக்ஷிக்கத் தோன்றி விட்டன. இக்கரங்கள் மேல்நாட்டைத் தீமயமாக்கிப் பெரும் திகிலை உண்டுபண்ணிற்று. கால்நடைகளைப் போலன்றி மனிதர்களென்ற முறையில் ஐரோப்பாவில் முன் நடைபெற்றதும் இன்று நடைபெறுவதுமான யுத்தங்களை நோக்குங்கள். மேல் நாட்டின் யுத்தம் நாகரிகம், அநாகரிகம் ஆகிய இரண்டிற்கும் இடையில் நடைபெறும் யுத்தமல்ல. மேல் நாட்டின் யுத்தம் கல்விக்கும், கல்வியின்மைக்கு மிடையில் நிகழும் யுத்தமுமல்ல. ஆனால் மேல் நாட்டின் யுத்தமானது சந்தேகமின்றி நாகரிகத்திற்கும், நாகரிகத்திற்கு மிடையிலேயே நடைபெறும் யுத்தமாகும். இந்த யுத்தத்தின் மூலமாய்க்

கல்வியே கல்வியைக் கொல்லுகின்றது. இந்த யுத்தத்தின் மூல மாகவே சிற்ப சாஸ்திரமானது சிற்ப சாஸ்திரத்தை அறைத்துத் தவிடுபொடி யாக்குகின்றது. சிற்பிகள் என்னும் அகம்படைத்த ஷைத்தான்களே மற்ற சிற்பிகளாகிய கொடிய ஷைத்தான்களைக் கொத்துகின்றன. முன்னேற்றம், நாகரிகம் என்னும் மமதையே நாகரிகம், முன்னேற்றம் என்னும் இதர மமதைகளை எறித்துச் சாம் பலாக்குகின்றது. ("தங்கள் இல்லங்கங்களைத் தங்களின் கரங்க ளாலேயே பாழாக்குகின்றனர்." அல்குர் ஆனின் வியாக்கியானம்).

முன்னேற்றத்தின் அரசராக இருந்தவர்களையும், நாகரிகம், கல்வி ஆகியவைகளின் அதிகாரிகளையும், சிற்பிகளென்னும் தேவதை களையும் மறந்துவிடாமல் சதா உலகம் ஞாபகப் படுத்திக் கொண்டு வரவேண்டுமெனக் கூறுகிறவர்களின் கையைப்பிடித்து இழுத்துச் சென்று மேல் நாட்டின் தீ, இரத்தம், விஷக்காற்று, புகை ஆகியவை களின் மத்தியில் அமைந்திருக்கும் சிம்மாஸனங்களையும், இடிந்து போன கட்டடங்களின் குட்டிச்சுவர்களையும், சிவந்த இரத்தநதிகளை யும், துடித்துக் கொண்டிருக்கும் மானுஷீகப் பிணங்களின் குவியல் களுக்கு மேல் நாட்டி வைக்கப்பட்டிருக்கும் விகாரமான சின்னங்களை யும் காட்டி, இவைகளுள் உலகம் தன் க்ஷேமத்திற் குரியதென்று கருதி மதிக்கத்தக்கதை எடுத்துக் காட்டுங்களென்று கூறவேண்டும். இத்துணை பெரிய நாகரிகம் படைத்த மேல் நாட்டினரும் சில சமயங் களில் தங்களின் வயிற்றுக்காக கோதுமை முதலிய தானியவகை களைக் கோரியழுவேண்டியவர்களாக இருக்கின்றனர். இவர்க ளடைந்த முன்னேற்றம், நாகரிகம் ஆகியவைகள் இவர்களுடைய பசிப்பிணியை போக்கத்தக்க வன்மையைக் கூடப்பெற்றிருக்க வில்லை.

மேற் கூறப்பட்டவைகளுள் எதையேனும் உலகம் தன் ஞாப கார்த்தத்திற் குரியதெனக் கொள்ளமுடியுமா? வெறுமனே கற்பிக்கப் பட்டு வந்த பிலாசபாவை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வந்து உபயோகமுள்ள முறைக்கு அடிகோலி அது முடிவில் மனிதர்களை இம்சித்துக் கொல்லத்தக்க கருவிகளை இயற்றுவதற்குக் காரணப் புருஷராய் "ஈஸவீ" 14வது நூற்றாண்டில் தோன்றிய "கேம்ஸ் டிரி," என்னும் பூதம் ஜனனமான தினத்தை உலகம் தன் ஞாப கார்த்தத்திற்குரிய தினமென்று குறித்துக்கொள்ள முடியுமா? இப்பூதத்தையே தற்கால நாகரிகம் விசேஷமாய்க் கொண்டாடுகின் றது. விஷக்காற்று, பாம் முதலிய அபாயகரமானவைகளால் மனி

தர்களைக் கொன்று குவிப்பதற்கு இப்பூதத்தின் ஜனனமே காரண மென்றும் கூறலாம்.

இமைப்பொழுதில் பலபெரிய பட்டினங்களை யழித்து விடுவ தற் கேற்ற கருவிகளைக் கண்டுபிடித்தவர்களையும் நீராவியின் சக்தி யைக் கொண்டு ஆச்சரியமான காரியங்களைச் செய்து முடிப்பதற்கு வேண்டிய சாதனங்களைக் கண்டுபிடித்தவர்களையும் உலகம் ஞாபகப் படுத்திக் கொள்வதால் உலகத்திற்குச் சந்தோஷம் உண்டாக வழி யுண்டா? சிருஷ்டிப்பொருள், மனுக்கள் ஆகியவைகள் ஜீவித்திருக்க வேண்டுமென்னும் அவாவைக் கொண்டிருக்கும் உலகம் மனுமுதலிய உயிர்ப்பிராணிகளை அழிப்பதற்கு வேண்டிய சாதனங்களுக்குக் காரணமாக உள்ளவைகளை எவ்வாறு நினைத்துத் துதிக்கக் கூடும்? நீராவி என்னும் தடுக்கமுடியாத ஷைத்தானுக் குள்ளேயே மனிதர் கள் அழிந்துபோவதற்கு வேண்டிய சக்திகள் நிறைந்து கிடக்கின் றன. நீராவியின் சக்தியே பல உருவங்களைக் கொண்டதாக யுத்த களத்தில் மனிதர்களைப் பிணக்குவியலாக்குகின்றது. நீராவியின் மூலமாய் விளையும் பேராபத்தை மனிதர்கள் தங்களின் அறிவு, கல்வி ஆகியவைகளாற் தடுத்துக்கொள்ள முடியவில்லை.

உலகத்தில் அமைதியுண்டாகி மனிதர்களுக்குள் சமாதானம் நிலவுவதற்கு வேண்டியவைகளில் எதையும் புரியாது மனிதர்களி னழிவுக்குரிய சாதனங்களத்தனைக்கும் காரணமாக உள்ள நாகரிகம், முன்னேற்றம், கல்வி ஆகியவைகளுக்கு ஆஸ்பதமான அகம்படைத் தவர்களின் பிறந்த தினத்தை உலகம் தன் ஞாபகார்த்தத்திற் குரிய தெனக் கொள்வதெங்ஙனம்? இவ்வகம் படைத்தவர்க ளிடத்தில் ஆகாயத்தில் பறக்கவும், ஜலத்திற்குள் செல்லவும், காந்தம், ஆகா யம் ஆகியவைகளைச் சுவாதீனப் படுத்தவும், மேளதாளங்கள் தானே முழங்கவும் ஆடிப்பாடி நடனம் புரியவும் தரையில் துரிதமாகச் செல்லுவதற்கு வேண்டிய கருவிகளும் ஏராளமாக உண்டு. ஆனால் மனிதர்கள் நேரானவழிச் சென்று முக்தியடைவதற்குரிய சாதனங் கள் இவர்களிடம் எதுவுமிருக்கின்றதா?

அல்லாஹு த ஆலாவின் உண்மை, சத்தியம் ஆகியவைகளால் உலகத்தைச் செழிக்கச் செய்யவும், சமாதானம், அமைதி ஆகியவை களை அடிப்படையாகக் கொண்ட அரசாங்கத்தை ஸ்தாபிக்கவும், அநி யாயம், துர்க்கிருத்தியம் ஆகிய கொடியவித்துக்களை விட்டு உலகத் தைப் பரிசுத்தப் படுத்தவும், எதேச்சாதிகாரம், பலாத்காரம் ஆகிய சேஷ்டையால் பலமற்றவைகள் நாசமுறாமல் காப்பாற்றவும் விஷஜந்

துக்கள், பகுத்தறிவற்ற காட்டுமிருகங்களைப்போலன்றி மனிதர்களைப் போல் மனிதர்களை உலகில் நிலையச் செய்யவும் இவ்வகம்படைத்தவர்களிடம் ஏதேனுமொரு நல்லறிவு இருக்கின்றதா ?

மேல்நாட்டின் நாகரிகம், முன்னேற்றம் ஆகியவைகளை விசுவாசித்து நாய்களைப்போல் நக்கித்திரிகிறவர்களே! ஞானமற்ற கால் நடைகளைப்போல் அவைகளை வணங்கிக் கொண்டிருந்தவர்களே! மறுமை, மறுமை யென்று மட்டும் எச்சரித்துக் கொண்டிருப்பதே மதம், சாஸ்திரம், தருமம் ஆகியவைகளின் கூற்றாக இருக்கிறதென்று கூறி அவைகளைப் பரிகசித்து வந்தவர்களே! உலகவாழ்க்கையின் க்ஷேமத்திற்கு வேண்டியவைகளை யடைவதற்கு மேல் நாட்டைப்போல் மதம், சாஸ்திரம் ஆகியவைகள் எவ்வழியையும் காட்டவில்லையென்று பிதற்றுகின்றவர்களே! நீங்கள் குர்ஆன் ஷரீபின் இந்த ஆயத்தை அறியும் சக்தியுள்ளவர்களாயின் உத்தமமாக யிருக்கும். இந்த ஆயத்தை ஓதுவதன் மூலமாய் கடை காலத்தைச் சார்ந்த இருளைவிட்டுத் தப்பிக்கொள்ளலாமென நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளியிருக்கின்றார்கள்.

அஃதாவது :—"சகலமனிதர்களைக்காட்டிலும் வீணர்களாயும், உபயோகமற்ற காரியங்களைப் புரிபவர்களாயும் இருக்கின்றவர்களை உங்களுக்குக் காட்டவேண்டுமா? உலக வாழ்க்கையைச் சீர்படுத்துவதிலேயே தங்களின் முழுபலத்தையும் வியர்த்தமாக்கிவிட்டு மிகப் பெரும் நன்மை பயக்கத்தக்க காரியத்தைச் செய்து வருவதாக உள்ள வெறும் மனத்தோற்றத்தைத் தங்களறியாமையால் உண்டு பண்ணிக் கொள்பவரே மேற்கூறப்பட்டுள்ள வீணர்களாகும். இத்தகையவர்களே அல்லாஹுத ஆலாவின் திருஷ்டாந்தம் சம்மந்தம் ஆகியவைகளை அறியாது அவைகளை மறுத்துவிட்டனர். ஆகவே இவர்களின் சகலகாரியங்களும் பாழாகிவிட்டன. இவர்கள் கியாம நாளன்று எப்பலனையும் எய்தமாட்டார்கள்."........(அல்குர் ஆனின் வியாக்கியானம்).

"குர்ஆன் ஷரீபு" காபர்களின் நடவடிக்கையைப்பற்றி வேறு இடத்தில் எடுத்துக் காட்டியிருப்பதாவது:—உலகவாழ்க்கையையொட்டிய வெளித்தோற்றமான ஒருபாகத்தை மட்டும் அன்னவர்கள் தெரிந்துகொண்டனர். அன்றியும் அவர்கள் மறுமை சம்மந்தமானவைகளை முற்றும் மறந்துவிட்டனர். (அல்குர் ஆனின் வியாக்கியானம்.)

மேல்நாட்டின் இன்றைய வாழ்க்கையை நோட்டமிடுவோமா யின், இந்நாடு உலகத்தை யொட்டிய க்ஷேமத்தை யடைவதற்கே தன்னை அர்ப்பணம் செய்துவிட்டதன் உண்மை வெளியாகும். உலகவாழ்க்கையில் அந்நாடு கொண்டிருக்கும் பேராசையானது மனிதர்களுக்கு அல்லாஹுதஆலாவோடு இருந்து வரவேண்டிய சம்மந்தத்தை யொட்டிச் சிந்திக்கக் கூட அவகாசம் பெறவில்லை. ஆதலின் அந்நாடு, முன்னேற்றம் நாகரிகம் என்று அழைக்கப்படும் ஒருவித வாழ்க்கையை அடைந்தது. இவ்வாழ்க்கையே மனிதர்களுக்கு வேண்டிய நேரான வழி முக்திக்குரியமார்க்கம் ஆகிய நற்சாதனங்களை யடைய விடவில்லை. ஆனதுபற்றியே இத்தகைய வாழ்க்கையை யொட்டிய இழிவான காரியங்களை சாஸ்திரம், மதம் ஆகியவைகள் கண்டிக்கின்றன. ஆனால் உலகம் உலகத்தை யொட்டிய எண்ணம், செய்கை ஆகியவைகளை முற்றும் துறந்துவிட வேண்டுமென்று மார்க்கம் கூறவில்லை.

9

தேகத்தின் ஆரோக்கியம் க்ஷேமம்ஆகியவைகளைமட்டும்விரும்பி வேலைசெய்தவர்களின் ஜனன தினத்தை ஞாபகார்த்த தினமாகக் கொள்ளுவதால் உலகம் மகிழ்ச்சியுற இயலாதென்று அறிவிக்கப்படும் போழ்து அத்தகையவர்களை ஒதுக்கித் தள்ளிவிட்டுப் பெரும் மதஸ்தாபகர்களை யடைந்து ஆதரவைப் பெறவும் அல்லாஹுதஆலாவின் பரிசுத்தத் தூதர்களாகிய மதஸ்தாபர்களின் உபதேசங்களில் அடங்கியிருக்கும் உண்மையை யடையவும் உலகம் முயற்சிக்குமாயின் உண்மையில் அதன் கஷ்டம் ஒழிந்து விடுமென்று கூறலாம். இம்முயற்சியால் உலகத்தின் சங்கடம், கவலை, துன்பம், கஷ்டம் ஆகியவைகள் அகன்று உலகத்திற்கு சாந்தம், சமாதானம், சுகம், சந்தோஷம் ஆகியவைகளுள்ள நல்ல ஜீவன் ஏற்படும். சந்தேகமின்றி உலகம் இம் முயற்சியால் தன் லக்ஷியத்தை யடைந்து விடும். உலகம் தந் நோயிலிருந்து மீக்ஷியடைதற்கு "குர்ஆன்ஷரீபு" புரியும் உபதேசத்தைச் சற்று கவனிப்போம். அரசர்களும், சமூகத் தலைவர்களும், ஜோஸியர்களும், கல்வி, மதம் ஆகியவைகளின் மதஸ்தாபகர்களெனத் தங்களைத் தாங்களே அழைத்துக் கொண்ட பொய்யர்களும், தங்களின் மமதையாலும், பலத்தாலும் மனிதர்களை அழித்துக் கொண்டிருந்தபோது, அல்லாஹுதஆலாவின் உண்மையான "ரஸூல்" என்னும் தூதர்கள் சென்ற வழியையறிந்து அவ்

வழிச் செல்லுங்களென்றும் அவர்களின் வாழ்க்கையை உங்கள் நடவடிக்கைகளுக்கு முன்மாதிரியாய்க் கொள்ளுங்களென்றும் "குர்ஆன் ஷரீபு" கூறுகிறது. ("யாஅல்லாஹ் ! நீ எங்களை நல்வழியில் நடத்துவாய். அந்நல்வழியாவது:—நபிமார்கள், சித்தீக்கீன்கள், ஷுஹதாக்கள், சாலிஹீன்கள் ஆகிய உன் நல்லடியார்களின் பாதையாகும்.")

இந்நான்கு அரியவகுப்பாரின் வாழ்க்கையில் எது? உலகம் சமாதானத்தையும் மனிதர்களுக்கு வேண்டிய முக்தியையும் அளிப்பதற்கு முற்றும் ஏற்றதாயிருக்கின்றது, என்பதைச் சிந்திக்கவேண்டும்.

உலகத்தில் இன்றுபரவியிருக்கும் பெரிய மதங்களைச் சமூகவாரியாய் வகுக்க வேண்டுமாயின் இம்மதங்களை இரண்டு பாகமாக வகுக்கலாம். இவ்விரண்டிலொன்று "ஸீமாதி" தொடர்பைச் சார்ந்ததாக இருக்கின்றது. இன்றுவரை உலகத்திலிருந்து வருகின்ற யூதமதம், கிரிஸ்துமதம் ஆகிய இரண்டும் "ஸீமாதி" என்னும் தொடர்புக்குட்பட்டதாக யிருக்கின்றது. இரண்டாவது பாகம் ஆரியன் தொடர்பைச் சார்ந்ததெனக் கூறலாம். "கௌதமபுத்தரும்," இந்தியாவின் மற்ற மதஸ்தர்களும், இவ்வாரியன் தொடர்பைச் சார்ந்தவர்களாக யிருக்கின்றனர்.

முதலாவது பாகத்தைச் சார்ந்த யூதமதத்தின் சரித்திரத்தை நோட்டமிடுவோம். யூதமதத்தை யொட்டிய பெரிய தூதராகிய ஹஜ்ரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் வாழ்க்கையைக் கௌரவித்து அவர்களின் ஜனனதினத்தை மிகப்பெரிய விசேஷ தினமாகக் கொள்ள வேண்டுமென்று யூதமதம் உலகத்தைக் கோருமாயின் ஹஜ்ரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் ஜீவியகால நடவடிக்கையில் முழு உலக அமைதிக்குச் சாதனமாக ஏதும் இருக்கிறதாவென்று ஆராய்ச்சிசெய்ய உலகத்திற்கு உரிமையுண்டல்லவா ? "எகிப்து" தேசத்தின் ஓர் எதேச்சாதிகாரமுள்ள அநியாய கரமான அரசாங்கத்தின் ஆதிக்கத்திலிருந்து வந்த "பனீ இஸ்ராயீல்" என்னும் வகுப்பாரை மீட்டு அவர்களின் கழுத்தில் கிடந்து வந்த விகாரமான அடிமை விலங்கைத் தகர்த்து இவர்கள் அரசாங்கம், அமைதி, அந்தஸ்து ஆகிய நல்வாழ்க்கையை அடையும்படிச் செய்ததே மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் ஜீவிய காலத்து அரிய செய்கையாகும்.

"பனீ இஸ்ராயீல்" என்னும் தங்களின் வகுப்பாரை அநியாய கரமான அரசாங்கத்தின் ஆதிக்கத்தை விட்டு மீட்பதற்காக மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் செய்த காரியம் பரிசுத்தமான ஜிஹாத்

என்பதில் சந்தேகமில்லை. மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் புரிந்த இச்செய்கை புகழுக்குரிய அழகான முன் மாதிரியான காரியமாதலின் இதை உலகம் கௌரவிக்கவேண்டியதே. ஆனால் மூஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் முழு உலகத்திற்கும் பொதுவாய்ச் செய்த நன்மை யாது? உலகத்தில் "பனீ இஸ்ராயீல்" களென்னும் வகுப்பார் மட்டும் வசிக்கவில்லை. அல்லாஹ் அல்லாதவைகளின் அடிமை யாக்குவதற்கான விலங்குகள் உலகில் "பனீ இஸ்ராயீல்"களின் கால் களில்மட்டும் போடப்பட்டிருக்கவில்லை. ஆனால் "பனீ இஸ்ராயீல்" களைத் தவிர முழு உலகத்தவரின் கால்களிலும் அல்லாஹ் அல்லா தவைகளின் அடிமை யாக்குவதற்குரிய விலங்குகள் மாட்டப்பட்டு, இவர்களின் கால்கள் அவ்விலங்குகளைச் சுமக்கமாட்டாமல் பெருங் காயங்கள் ஏற்பட்டு மிருந்தன. ஆகவே "பிர்அவ்ன்" என்னும் ஏதேச்சாதிகாரம் படைத்த "எகிப்து" தேச அரசனால் போடப் பட்டிருந்த விலங்குகளை மட்டுமின்றி, மற்ற கொடியவர்களால் போடப்பட்டிருக்கும் விலங்குகளையும் உடைத் தெறியக்கூடிய வாளா யுதத்தையே உலகம் நேசிக்க முடியும். எகிப்து தேசத்திலிருந்த ஒரு "பிர் அவ்னை" மட்டுமின்றி உலகத்தின் எல்லா பிர்அவ்ன்களு டையவும் சிம்மாசனங்களைக் கவிழ்க்கும் காரியமே முழு உலகும் மெச்சத் தக்கதாகும்.

உலகமுழுவதிலுமுள்ள எல்லா சமூகங்களும் அல்லாஹ் அல்லாதவைகளின் அடிமைகளாக யிருப்பதைவிட்டு சுயேச்சையை யடைய வேண்டுமென்ற பேராவலைக் கொண்டிருந்தபொழுது ஹஜ்ரத் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தங்கள் வகுப்பாராகிய "பனீ இஸ்ராயீல்" என்னும் சமூகத்தார் சுயேச்சை யடைவதை யொட் டிய காரியத்தைமட்டும் செய்துமுடித்தார்கள்.

"கிறிஸ்து" மதமானது "இஸ்ராயீலீ" என்னும் மதத்தைச் சார்ந்த இரண்டாவது பெரியமதமாகும். "கிரிஸ்து" மதத்தின் பிர சாரத்தை யொட்டிய உண்மையை நாம் அறிவோம். இவ்வுண்மைக்கு மாறாகத் தங்களைக் கிரிஸ்தவர்களென அழைத்துக் கொள்வோரின் வார்த்தைகளை ஹஜ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அருளிய தாகக் கூறுவதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. ஹஜ்ரத் மஸீஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கூறியதாவது:—யான் "தௌராத்" என்னும் வேதத்தை நிலைநிறுத்துவதற்காக மட்டும் தோன்றியிருக்கி றேன். சுயமாக வேறு நவீன பிரசாரத்தைப் புரிவதற்காக நான் வரவில்லை. (மத்தா. 5-17).

இதர சமூகத்தாரிடம் செல்லலாகாது. சாமிரீகளின் எந்த நாட்டிலும் பிரவேசிக்கக் கூடாது. ஆனால் "இஸ்ராயீல்" என்னும் இல்லம் இழந்து விட்ட கூட்டங்களினிடமே செல்ல வேண்டும்." (மத்தா 9—6).

பனீ இஸ்ராயீல் என்னும் சமூகத்தைச் சீர்திருத்துவது மட்டுமே என் மிஷனின் லக்ஷியமென்று ஹஜ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அறிவித்திருப்பதோடு இதரவகுப்பாரிடத்தில் பிரசாரம் செய்வதையும் தடை செய்திருக்கிறார்கள். "ஈஸா" அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தங்களின் நடவடிக்கை, உபதேசம், எச்சரிக்கை, படிப்பினை ஆகியவைகளை "பனீ இஸ்ராயீல்" என்னும் வகுப்பாருக்கு மட்டும் குறிப்பாய் செய்து வந்தார்கள். ஆகவே "பனீ இஸ்ராயீல்" என்னும் சமூகமாகிய ஒரு சீர் குலைந்த வகுப்பின் நன்மையை யொட்டி மட்டும் ஹஜ்ரத் ஈசா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஊழியம் புரிந்தார்களென்று கூறவேண்டியதாகவும், தீர்மானிக்க வேண்டியதாகவு மிருக்கின்றன. இந்நிலைமையில் முழு உலகத்தின் க்ஷேமத்திற்கு வேண்டியவை ஹஜ்ரத் ஈசா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் எதுவும் இருந்ததாகக் கூறுவதற்கில்லை.

"ரோம்" தேசத்தின் அநியாயகரமான அரசாங்கம் ஷாம் தேசத்து பரிசுத்த ஸ்தலங்களைக் கெடுத்து, விக்கிரகத்தைப் பூஜித்து வந்த சமூகத்தைச் சார்ந்த எதேச்சாதிகார அரசாங்கங்கள் உலகத்தின் பெரும் பாகங்களை தங்களின் அடிமைகளாகச் செய்து கொண்டிருந்த காலத்தில் ஹஜ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தோன்றினார்களாயினும் இவ் வநியாயங்களை ஹஜ்ரத் ஈசா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் எதிர்க்கவில்லை. அன்றியும் இவ்வநியாயங்களை யொட்டி யெதையும் பகரவுமில்லை.

மஸீஹின் முதலாவது நூற்றாண்டுக்குப் பிறகு உலகில் தோன்றிய யாவற்று கிரிஸ்தவ சமூகங்களுக்கும் ஹஜ்ரத் மஸீஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் பிரசாரம், உபதேசம் ஆகியவைகளுக்கும் எவ்வித சம்மந்தமுமில்லை மஸீஹின் முதலாவது நூற்றாண்டுக்குப் பிறகு கிரிஸ்தவர்களென்னும் நாமத்தோடு தோன்றியவர்கள் யாவரும் யூஞன் தேசத்து கல்விப்பயிற்சியுள்ள ஒரு யூதராகிய "போல்ஸ்" என்பவர் இயற்றிய நவீன மதத்தைப் பின்பற்றியவர்களே. கிரிஸ்தவ மதத்தைச்சார்ந்த "ஹவாரீ" களென்னும் பெரியார்களின் கொள்கைக்கு விரோதமாய் "போல்ஸ்" என்பவர் பனீ இஸ்ராயீல்களல்லாத இதரர்களுக்கும் "பேப்டிஸம்" (ஞான ஸ்நானம்) கொடுக்க

ஆரம்பித்தார். இதன் மூலமாய் "ரோம்" "கிரீஸ்" ஆகிய தேசங்களிலும், இதரதீவுகள் கிராமங்களிலும். ஒரு நவீனக் கூட்டம் தோன்றிற்று. ஹஜ்ரத் ஈசா அலைஹிஸ்ஸலாம் அவர்களை நோட்டமிட உலகம் முற்படுமாயின் ஹஜ்ரத் "மஸீஹ்" அலைஹிஸ்ஸலாம் அவர்களின் திவ்ய சரித்திரத்துள் இருபத்தைந்து வருடத்திய நடவடிக்கைகள் கிட்டலாம். ஹஜ்ரத் ஈசா அலைஹிஸ்ஸலாம் அவர்களால் பழக்கப்பட்ட "ஹவாரியூன்கள்" என்னும் நண்பர்களின் நற்செய்கைகளை இவ்விருபத்தைந்து ஆண்டுகளில் மட்டும் பார்க்க முடியும். இச்சில வருடங்களில் நிகழ்ந்துள்ளவைகள் எத்துணைப் பெரிய நற்காரியங்களாக இருப்பினும், இதன் மூலமாய் உலகத்திற்குப் பொதுவான க்ஷேமமேற்படுவதற்கு என்ன சாதனமிருக்கின்றது?

ஹஜ்ரத் ஈசா அலைஹிஸ்ஸலாம் அவர்களாலும், "ஹவாயூன்" களென்னும் நண்பர்களாலும் நிகழப்பெற்றிருக்கும் காரியங்களால் விளையக்கூடிய பயனைப்பற்றிச் சிந்திப்பதை நிறுத்திக்கொண்டு அவர்களின் விளம்பரம், பிரசாரம், உபதேசம், படிப்பினை ஆகியவைகளைக் கவனிப்போம். ஹஜ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் உலகத்தை அருவருத்தார்கள். சதா உலக வாழ்க்கையை உதைத்துத் தள்ளினார்கள். உலகத்தைச் சார்ந்தோர், உலகத்தை நேசிப்போர், உலக சம்மந்த முள்ளோர் ஆகியவர்கள் அல்லாஹுத ஆலாவுடைய அரசாங்கத்தின் தயவைப் பெற முடியாதென்று ஹஜ்ரத் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் முடிவான தீர்மானங்களையும் செய்திருக்கிறார்கள் அவையாவன:—"நீங்கள் உங்கள் ஆண்டவனுக்கு ஊழியம் புரிய வேண்டுமாயின் உலகத்திற்கு ஊழியம் புரிய முடியாது." (மத்தா 6—25)

"தனவந்தன் அல்லாஹுத ஆலாவின் அரசாங்கத்தைச் சாருவதைக் காட்டினும் ஊசித் துவாரத்தில் ஒட்டகை நுழைந்துவெளிப்படுவது இலகுவானதாகும்." (மத்தா 19—22.)

இவ்வசனங்களுக்குக் கூடியவரை நல்ல வியாக்கியானத்தைச்செய்துஏற்றுக்கொள்ளுவோம். "போல்ஸ்" என்பவரின் பிரசாரத்தை ஈசா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் பிரசாரத்தைச் சார்ந்ததென்றும் ஒப்புக்கொள்ளுவோம். கிறிஸ்தவமதத்தின் நாமத்தைச் சொல்லி பேப்டிஸத்தின் தண்ணீர் தெளிக்கப்பட எல்லோரையும் கிறிஸ்தவர்களென்றும் ஏற்றுக் கொள்ளுவோம். ஆயினும் கிறிஸ்து மதத்தின் பிரசாரத்தை யொட்டிய முழுசரித்திரங்களினுடையவும் நிலைமை என்னவென்பதை ஆராய வேண்டுமல்லவா?

உலகம் "கிரிஸ்து" மத ஆக்ஷிக்குட்பட்டிருந்த போதும், கிரிஸ்துவமதத்தின் அதிகாரத்திற்கு மனிதர்கள் கட்டுப்பட்டிருந்த போதும், "கிரிஸ்துமத" வழி காட்டிகளுக்கும், மதத் தலைவர்களுக்கும் அடிமையாக விருக்க உலகம் மறுக்காதிருந்த போதும், கிரிஸ்துவ மதம் உலகத்திற்காகவும், உலகத்தின் கல்வி நாகரிகத்திற்காகவும், முன்னேற்றம் சீர்திருத்தம் நல்லொழுக்கம் நன்னடக்கை ஆகியவைகளுக்காகவும், மனிதர்களின் இயற்கையான சுயேச்சை, மானுஷீகத் தன்மையின் உயர்வு ஆகியவைகளுக்காகவும் பெருந் தீங்காகவே யிருந்தது. அத்தீங்குகளாவன:—கிரிஸ்து மதமானது உலகத்தை எரித்துச் சாம்பலாக்கிற்று. இரக்கமின்றி உலகத்தைப் பாழ் பண்ணிற்று. இடித்து நாசமாக்கிற்று. கொன்று குவித்தது. சிறைச் சாலைகளை நிறப்பியது. நாக்களில் முத்திரையிட்டு மூளையின் உணர்ச்சியை ஒடுக்கிற்று. அன்றியும் மனிதர்களும், மானுஷீகத் தன்மையும், நல்வழியைப் பெற்ற முன்னேற்ற மடைவதற்காக ஓர் இமைப்பொழுதேனும் அவகாசங் கொடுக்கவில்லை. பிரசித்தி பெற்ற சரித்திர ஆசிரியர்களான "ஸைதியோ," "லாமாறே," "டிரைபர்" ஆகியவர்கள் இக் கூற்றுக்குத் தக்க சாக்ஷிகளாக இருக்கின்றனர்.

கிரிஸ்துவ மதத்திற்கிருந்து வந்தபலமும் செல்வாக்கும் ஒழிந்த பிறகே எம்மதத்திற்கும் சம்மந்த மில்லாத நாகரிகம் முன்னேற்றம் என்னும் காலம் ஆரம்பமாயிற்று. மதப்பிரசாரர்களுக்கும், மதத் தலைவர்களுக்கும் அடிமையாக விருந்து வந்த ஐரோப்பா விடுதலை பெற்று சுயேச்சையை யடைந்த பின்பே இன்றய நாகரிகத்திற்கு அடிகோலப்பட்டு கிரிஸ்துவ சமூகத்தார் முன்னேற்றமடைய ஆரம்பித்தனர்.

கிரிஸ்துவமதத்தின் ஸ்தாபகரிடமே உலகம் போற்றத்தக்க நற்சாதனங்கள் இருந்து வந்தனவென்று அறிவிக்கப்படின் அதை உலகம் அங்கீகரிக்குமா? கிரிஸ்துவ மதஸ்தாபகர் "விருக்ஷத்தை அவ்விருக்ஷத்தின் பழத்தைக்கொண்டு தெரிந்துகொள்ள முடியும்" என்று கூறியுள்ளார்கள். (முரக்கஸ் 19-16.)

ஆகவே கிரிஸ்தவ மதஸ்தாபகரின் ஜனன தினத்தை உலகம் கொண்டாடுவதற் குரியவைகள் கிரிஸ்துவமத சரிதையில் ஏதேனுமுண்டா? கிறிஸ்துவ மதத்தின் மூலமாய் விளைந்துள்ளவைகளைச் சிந்திப்போமாயின் உலகம் கோரியுள்ள அமைதி, சாந்தம், பிறப்புரிமையான சுயேச்சை, முக்தி, ஆகியவைகளுக்குப் பதிலாய்

42

கொலை, அமைதியின்மை, அடிமைவாழ்க்கை முதலிய ஏற்கத்தகாதவைகளே நமக்குப் புலப்படக் கூடியவைகளாக இருக்கின்றன. கிறிஸ்துவமத மென்னும் விருக்ஷத்தின் பழம், கொலை, அடிமைவாழ்க்கை முதலியவைகளாக விருந்திருக்கும் ஸ்திதியில் இத்தகைய பழத்திற்குக் காரணமாயுள்ள விருக்ஷத்தைக்கண்டு உலகம் களிக்கமுடியுமா? இத்தகைய விருக்ஷத்திற்குக் காரணமாயுள்ளவைகளைச் சிந்தித்து உலகம் சந்தோஷ மெய்தவியலுமா?

மேற் கூறப்பட்டுள்ள துக்க கரமானவைகள் கிறிஸ்துவ மதத்தின் பூர்வ சரித்திரத்தைச் சார்ந்ததென்று ஒதுக்கித் தள்ளிவிடினும் சென்ற இரண்டு நூற்றாண்டுகளாக முன்னேற்றம், நாகரிகமென்னும்பெயரால் மேல்நாட்டுக் கிறிஸ்துவர்கள் புரிந்துள்ள அநியாயகரமானவைகளைச் சிந்திக்கும்போது கூட உலகத்தின் விசனம் அளவற்றதாகி விடுமல்லவா?

ஆரியர்கள்.

மத உலகத்தில் ஆரியவகுப்பின் பிரசாரத்தை எடுத்துக் கொள்ளுவோம். இவர்களிடத்திலும் உலகத்திற்குப் பொதுவான சந்தோஷச் செய்தியை நோக்க முடியாமலிருப்பதற்காக வருந்த வேண்டும். பிரசித்தி பெற்ற "கௌதம புத்த"ரின் உபதேசம், படிப்பினை ஆகியவைகள் உலக சம்மந்தத்தோடு முக்திபெற முடியாதெனத் தீர்மானித்து விடுகின்றது. ஆகவே உலகத்தை அருவருப்பவர்களிடம் சென்று உலகம் சந்தோஷ மெய்துவ தெங்ஙனம்? "கௌதம புத்த"ரின் செய்கையும் உபதேசமும் சமூகம், தேசம் ஆகியவைகளுக் குட்பட்டதாக விருந்தன. கௌதமபுத்தரின் பிரசாரம் இந்தியாவில் தோல்வியுற்றதால் ஜப்பான், சைனா, ஆகிய தேசங்களில் சென்று, அத்தேசங்களில் மட்டுமே அடங்கிவிட்டது. இந்நிலைமையில் "கௌதம புத்த"ரின் ஜனனத்தால் முழு உலகத்திற்கும் நன்மை விளைந்ததாகப் பகர முடியுமா?

இந்தியாவைச் சார்ந்த மதசம்மந்தமான படிப்பினை, அதன் பூர்வாங்கமான சிரேஷ்டம் ஆகியவைகளை நாம் மறுக்கவில்லை. இந்தியாவின் மதப்பிரசாரகர்கள், இந்தியாவில் வசிப்பவர்களுக்கு மட்டுமே தங்களின் அறிவை ஒப்புவித்தனர். இந்நிலைமையில் இமயமலைக்கும், அரேபியன் கடலுக்கும் அப்பாலுள்ள உலகத்தவர் இம்மதஸ்தாபகர்களைச் சிந்தித்து சந்தோஷ மெய்துவதற்கு வழியுண்டா?

10

உண்மையாகவே உலகம் தன் க்ஷேமத்தைக் கோரி நிற்கு மாயின் அதற்கு நன்மை, சுகம் ஆகியவைகளை யளிப்பதற்குரிய செய்தி ஒன்றே. ஒரே ஒரு மஹானின் வாழ்க்கையிலேயே உலக க்ஷேமம் நிறைந்து கிடக்கின்றது. உலகத்திற்கு வேண்டியது நன்மை யொன்றே. ஆகவே முழு உலகமும் சந்தோஷமடைவதற் கான ஔஷதம் ஒன்றைக் காட்டினும் அதிகமாக இருக்கமுடியாது. உலகத்தைப் படைத்த நாயன் ஒருவனே. அந்த நாயன் தன் ஒரே சூரியனைக் கொண்டு கடல் தரை ஆகியவைகளை ஜ்வலிக்கச் செய்தான். மழையை யொட்டிய ஒரே ஏற்பாட்டின் மூலமாய் உல கத்தின் சகலபாகத்தையும் செழிக்கச் செய்கின்றான். ஆகவே உல கத்தவரின் முக்திக்குரிய பகலவனும் ஒன்றாகவே யிருக்கின்றது. இச்சூரியனின் ஒளியைப் பெற்று ஜ்வலிக்கும் நக்ஷத்திரங்கள் பல விருப்பினும் இந் நக்ஷத்திரங்களுக்கு மூலஸ்தானம் ஒன்றே.

"குர் ஆன் ஷரீபு" சூரியனைத் தீபமெனக் கூறியிருக்கின்றது. "நாம் வானத்தில் சூரியனென்னும் தீபத்தை பெரும் பிரகாசமுள்ள தாக்கினோம்." (அல் குர் ஆனின் வியாக்கியானம்) முழு உலகத்தின் இருளைப் போக்கி, நேர் வழி யென்னும் பிரகாசத்திற்குக் காரண மாக இருந்த நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை யும் அவ்வாறே தீபமென அல்லாஹுத ஆலா அறிவித்துள்ளான்.

ஓ! இஸ்லாமின் நபியே !! நாம் உங்களை உண்மையைக்கொண்டு சாக்ஷி சொல்லுகிறவர்களாயும், மனிதர்களின் முக்திக்குரிய சந்தோ ஷச் செய்தியை பிரசாரம் செய்கிறவர்களாயும், அல்லாஹுத ஆலா வின் சமூகத்திற்கு அவன் அடியார்களை அழைப்பவர்களாயும், உலகத் தின் இருளைப் போக்குவதற்கான ஒரு ஒளியுள்ள தீபமாகவும் இருக் கும்படி யனுப்பினோம்" (அல் குர் ஆனின் வியாக்கியானம்.)

முழு உலகத்திற்கும் நேர்வழி என்னும் பிரகாசத்தை யளிக் கும் சூரியன் இவ்வொன்றே. உலகத்தை வதைக்கும் இருள் நீங்கிபிர காச மேற்படுவதற்கான நற்செய்தியை இச்சூரியனின் மூலமாகவே உலகம் அடையக்கூடும். ஆனதுபற்றியே இச்சூரியன் உதயமான தினத்தை உலகம் மறக்கவியலாது. முழு உலகத்தையும் பிரகாசிக் கச் செய்த பகலவனை யின்று உலகம் மறந்து கிடப்பினும் அப்பகலவ னைப் பூரண விசுவாசத்தோடு நேசித்துத் தந் நம்பிக்கைக்குரிய கஃபாவாகச் செய்து கொள்ளவேண்டிய காலம் வெகு தூரத்தி லிருக்க முடியாது.

இப்பரிசுத்தமான ஜனனம் ''பிர்அவ்னி''ன் அடிமைகளாக் விருந்த ''பனீ இஸ்ராயீல்'' களை மீட்பதற்காக மட்டும் தாம் ஜனன மானதாய்க் கூறவில்லை. ஆனால் முழு உலகத்திலும் ''அல்லாஹ்'' அல்லாதவைகளின் அடிமைகளாகவுள்ள மானுஷீக வகுப்புகள் யாவற் றையும் மீட்பதே தம் ஜனன லக்ஷியமென்று அறிவித்தது. இப்பகல வன் ''இஸ்ராயீல்'' என்னும் இல்லம் இழந்து விட்ட பிரகாசத்தை மட்டும் நேசிக்கவில்லை. ஆனால் இது முழு உலகத்திலும் பாழாகிக் கிடந்தவைகளை யொட்டி விசன முற்று அவைகள் மீண்டும் செழிக்கு மென்னும் விளம்பரத்தைச்செய்தது. ''சீனா'' வென்னும் மலையின் சிக ரங்களிலோ, அல்லது இமயமலையின் பள்ளத்தாக்குகளிலோ இருப் பதாகக் கருதப்படும் ஆண்டவனை யடையும்படி அம்மஹான் மனுக் களையழைக்க வில்லை. ஆனால் முழு உலகத்தையும் படைத்து ரக்ஷிக் கின்ற ''ரப்பில் ஆலமீன்'' என்னும் ஒரே நாயனின் சமூகத்தை யடைவதற்காக அம்மஹான் சகல மனிதர்களையும் அழைத்தார்கள். முழு உலகத்தையும் ஜயித்துத் தன் செல்வாக்குக் குட்படுத்திக் கொள்ளக் கருதிய சிக்கந்தரை நாம் அறிவோம். ஆனால் முழு உலகத் தையும் பிடித்திருந்த வழிகேடென்னும் இருளை எதிர்த்து ஜிஹாத் செய்வதற்கான விளம்பரத்தை (அல்லாஹு த ஆலாவின் பரிசுத்த தூதராகிய) இம்மகானைத் தவிரவேறு எவரும் செய்ததாகக் கூற முடியாது. வகுப்பு, சமூகம், தேசம் ஆகியவைகளை மட்டும் உலக மென்று கூறமுடியுமா? மனிதர்கள் வசிக்கும் காண்டங்கள்யாவும் சேர்ந்ததே உலகமாகும். உலகம் தோன்றியது முதல் இம்மஹான் வெளியிட்ட விளம்பரம் ஒன்றே பொதுவாக முழு உலகத்தின் க்ஷேம மத்தைக் கோரியதாகும். ஆதலின் உலக முழுவதிலும் வசிப்பவர் கள் இவ்விளம்பரத்தைச் செய்த மகானின் ஜனன தினத்தைத் தங் கள் ஜீவிய காலத்திற்குரிய பெரிய தினமென்று நிச்சயிக்க வேண்டு மல்லவா?

'' தேசம், வகுப்பு ஆகியவைகளுக்கு மட்டுமின்றி முழு உலகத் தின் வழி கேட்டையு முன்னிட்டு அச்ச மூட்டத் தக்க தன் அரும் அடியாரின் மீது '' அல்புர் கான் '' என்னும் வேதத்தை இறக்கி வைத்த அல்லாஹு த ஆலா பரிசுத்தம், நன்மை ஆகியவைகளின் அடிப்படையாக இருக்கின்றான் '' (அல் குர் ஆனின் வியாக்கியானம்.)

அம்மகானைத் தவிர மற்ற சத்தியப் பிரசாரர்களின் விளம்பரங் களை உலகம் மறந்து விடுமாயின் இம்மறைதி வகுப்பு தேசம் ஆகிய வைகளின் நன்மையை மட்டும் மறந்து விட்டதாகும். ஏனெனின்

அப்பிரசாரர்கள் தேசம், சமூகம் ஆகியவைகளின் நன்மையை யொட்டியே ஊழியம் புரிந்திருக்கின்றனர். ஆனால் "ரபீஉல் அவ்வல்" என்னும் மாதத்தை ஜனங்கள் மறந்து விடுவார்களாயின் இவர்கள் முழு உலகத்தின் நன்மையையும் மறந்து விட்டவர்களென்று தீர்மானிக்க வேண்டும். ஏனெனில் "ரபீஉல் அவ்வல்" என்னும் மாதத்தில் வருஷித்த க்ஷேமம், குறிப்பிட்ட தேசங்களுக்காகவன்றி முழு உலகத்திற்கும் நன்மையைப் பயப்பதாகும்.

11

நாம் இதுவரை எழுதியது "இஸ்லாம்" முழு உலகத்திற்கும் க்ஷேமத்தை யளிப்பதற்குரியது என்பதை யொட்டிய ஒரு சிறிய முக உரையாகும். முழு உலகத்தையும் பிடித்திருந்த இருள் நீங்கி உலகம் பிரகாசம் அடைவதற்கு உண்மையில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் வாழ்க்கையில் அடங்கியுள்ள சாதனங்களென்ன வென்றும், மனிதர்கள் முக்தியடைவதற்கும், இயற்கையான முன்னேற்றத்தை எய்துவதற்கும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் காட்டிய வழி யாதென்றுமுள்ள கேள்விகள் பிறக்கின்றன. இப்பெரும் கேள்விகளைப் பொறுத்து போதியளவு விவரித்துக் கூற இப்போழ்து சாத்தியமில்லை, ஆனால் சிற்சில சாதாரண குறிப்புகளை மட்டும் மேலே வரைகின்றோம்.

ரபீஉல் அவ்வல் மாதமும், ஓர் அரிய உபதேசமும்.

(இமாமுல் ஹிந்து மௌலானா அபுல்கலாம் ஆஜாத் அவர்கள் எழுதியது.)

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஜனனதினக் கொண்டாட்டம்

ஒரு கவியின் சாரம்

(நெஞ்சத்துள் மறைத்துக் கொள்ளவேண்டியதாயும் வெளியிட முடியாததாயுமுள்ள அந்த இரகசியத்தை யொட்டி ஒரு சமயம் பேசவேண்டியதாக இருப்பினும் அது பகிரங்கமாகத்தக்கதாயில்லை.)

என் மதத்தைச் சார்ந்த நண்பர்களே! “ ரபீஉல் அவ்வல் என்னும் மாதத்தின் வருகை உங்களுக்குப் பொதுவான ஓர் பெரும் சந்தோஷத்தை யளிக்கக் கூடியதாக இருக்கின்றது. இஸ்லாமின் சத்தியப் பிரசாரர்களான நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஜனனத்தைக்கொண்டே உலகத்தை சதா பீடித்திருந்த விசனம் ஒழிந்துவிட்டது என்பதும், ரபீஉல் அவ்வல் மாத ஆரம்ப வாரங்களிலேயே அல்லாஹுதஆலாவின் அரிய கிருபாகடாக்ஷம் உலகில் வருஷிக்கத் தொடங்கிற்றென்பதும், இம்மாதத்தின் வருகையானது உங்களுக்கு ஞாபக மூட்டுகின்றது. ஆகவே நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஜனனத்தை முன்னிட்டு இம்மாதத்தில் நீங்கள் அளவற்ற சந்தோஷத்தை எய்துகின்றீர்கள், அல்லாஹுதஆலாவின்மீதும் அவனுடைய ரஸூலாகிய நாயகம்ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின்மீதும், உங்கள் ஹிருதயம் கொண்டிருக்கிற விசுவாசமானது பெரும் மகிழ்ச்சியை யுண்டுபண்ணிவிடுகின்றது. ஆகவே, இதனையொட்டி துதிப்பது, சிந்திப்பது ஆகியவைகளால் ஜனிக்கும் இன்பத்தைச் சுகித்துப்பரவசமடைவதிலேயே உங்கள் காலத்தைச் செலவிடக் கருதுகின்றீர்கள்.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உயர்வைப்பற்றி சிந்திக்கவும், அவர்களைத் துதிக்கவும் அளவற்ற கூட்டங்களைக் கூட்டுகின்றீர்கள். அக்கூட்டத்திற் குரியவிடத்தை அலங்கரிப்பதற்காக நீங்கள் வெகு சிரமத்தோடு சம்பாதித்த பொருளை வாரியிறைக்கின்றீர்கள். அழகும் வாசனையுமுள்ள பசுமையான அன்றலர்ந்த புஷ்பங்களால் அவ்விடத்தை அலங்கரித்து ரம்மியப் படுத்துகின்றீர்கள். விலையுயர்ந்த பற்பல வர்ணமுள்ள தீபங்களாலும், மின்சார பிரகாசங்களாலும் அவ்விடத்தை ஜ்வலிக்கச் செய்கின்றீர்கள். அத்தர், பன்னீர், ஊதுவர்த்தி முதலிய அரியவாசனைத் திரவியங்களால் அவ்விடத்தைப் பரிமளிக்கச் செய்கின்றீர்கள். மேற்கூறியவாறு உங்கள் உத்தேசத்திற் கிணங்க வேண்டியவைகளெல்லாம் செய்து முடித்தபொழுது பரிசுத்தமான துதி, புகழ்ச்சி, தரூத், ஸலாம் ஆகியவைகளின் முழக்கத்தினூடே உங்கள் ஹிருதயம் மிகப்பிரீதியோடு கோரி நிற்கின்ற பரிசுத்தமானவர்களைச் சிந்தித்துத் தேடுகின்றீர்கள். அப்பரிசுத்தமானவர்களை யொட்டி நீங்கள் கொண்டிருக்கும் பிரீதியின் முதிர்ச்சியால் உங்கள் ஹிருதயம் சப்தமிடுவதோடு பன்முறை உங்கள கண்கள் நீர் சொரியும் வேளையில் அம் மஹானின் சிந்தனையால் உங்களாத்மா ஜீவனைப் பெறுகின்றது.

வானம், பூமி முதலிய யாவற்றையும் படைத்த அல்லாஹுதஆலாவின் பிரீதிக்குரித்தான நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவ ஸல்லம் அவர்களை நேசிக்கவும், அன்பு கொள்ளவும் முற்படுகின்ற ஹிருதயத்திற்குள்ள க்ஷேமம் சாமானியமானதா? "ஸையிதுல் முர்ஸலீன் வறஹ்மத்துன்லில் ஆலமீன்" என்னும் மகானைத் துதித்துப் புகழுகின்ற நாக்கள் எத்தகையப் பரிசுத்தமும், கீர்த்தியு முள்ளனவாகும்!

(கவியின்சாரம்)

(நண்பர்க ளெல்லோரும் கூடிச் செய்வதே சமயோஜிதமான காரியமென்பதை நான் தெரிந்து கொண்டிருக்கின்றேன். ஆகவே நண்பர்கள் கூடிச் செய்யாத காரியம் வளைந்து போன புஷ்பச் செண்டுக் கொப்பானதாகும்.)

அல்லாஹுதஆலா எந்த மகானை தன்பிரீதிக்கும், அன்புக்கும் இலக்காக்கி மேன்மைப் படுத்தியிருக்கின்றானோ? அம்மகானை நேசித்து அன்பு கொள்ளுவோர் சிரேஷ்டமானவர்களே. அல்லாஹுதஆலாவும், அவனுடைய அமரர்களும், பரிசுத்தமான ஆத்மாக்களும், முக்தியடைந்த ஜீவன்களும் துதித்துப் புகழுகின்ற மகானைத் துதித்துப் புகழுகிறவர்கள் அதிர்ஷ்ட முள்ளவர்களல்லவா?

"நிச்சயமாகவே அல்லாஹுதஆலாவும், (அவனுடைய) மலக்குகளும், நபியின்மீது சலாவாத்துச் சொல்லுகின்றார்கள். (ஆதலின்) ஓ! ஈமானுள்ளவர்களே (இந்நபியின்மீது) நீங்கள் சலாவாத்தும், சலாமும் சொல்லுங்கள்" (அல்குர்ஆனின் வியாக்கியானம்.)

சிருஷ்டிப்பொருள்கள் யாவும் உவக்கத்தக்க உயரியமகான்,

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மீது கொள்ளும் பிரீதியும், அவர்கள் மீதுண்டாகும் அன்பும், அவர்களையுங்கள்மனத்துள் கொள்ளுவதாலேற்படும் பரிசுத்தமான குதுகலமும், உங்களின் உண்மையான இந்நடப்பும், ஆதரவும் நீங்கள் நல்வாழ்வையடைவதற்கு இன்றியமையாத பெரும் பொக்கிஷமாகும். உங்கள் முக்திக்குச் சாதனமான இப்பெரும் பொக்கிஷத்தைக் காப்பாற்றுவதற்காக நீங்கள் எத்தகைய காரியத்தையும் புரிய வேண்டியது அவசியமே. நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மீது நீங்கள் கொள்ளும் அன்பு அல்லாஹுதஆலாவின்மீது கொள்ளும் அன்பை யொட்டிய தாகும். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நேசிப்பது தெய்வீக நேசமாகும். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மீது உங்கள் ஹிருத

யம் கொண்டுள்ள பிரீதியை முன்னிட்டுச் செய்யும் காரியங்கள் மனி தர்கள் முக்தியடையவும், நேரான வழியைப் பெறவும் வேண்டிய சாதனங்களின் ஊற்றுக் கண்களுக்கு அடிப்படையுமாகும். சிருஷ் டிக்கப் பட்டதும், படுவதுமான சகல மனிதர்களுள் எந்த மஹானை அல்லாஹுத ஆலா தன் சகலவித அன்புக்கும், யாவற்றுபிரீதிக்கும் உரித்தானவர்களெனக் குறித்து விட்டானோ, அம்மஹானை நேசித்து அன்பு கொள்ள நீங்கள் முற்பட்டதானது உங்கள் பேரதிருஷ்டமே.

" உலகப் போற்றுதல் என்னும் கிரீடத்திற்குரிய நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உயர்வைச் சிந்தித்துத் துதித் துக் கொண்டிருப்பது சிரேஷ்டமான காரியமே. இவ்வகண்ட பூமி யில் மனிதர்களை யுத்தேசித்து எழுதுவது, நேசிப்பது, விசுவாசிப் பது முதலிய சிரேஷ்டமானவையாவும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கே பொருந்தும். இவைகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவாகளைத் தவிர வேறு எவருக் கும் உரிமையாக முடியாது.

(கவியின் சாரம்)

(" தைரோ ஹரம் " முதலிய விடங்களில் நம்முடைய லக்ஷியம் நம் நேசரைத் தவிர வேறெதுவுமில்லை. ஆதலின் நம் லக்ஷியத்தை யடைவதை யொட்டி "சிஜ்தா" செய்வதற்குப் பலவாசல்கள் உண்டு.)

(உங்களைப் புகழக் கருதி நாங்கள் வரையும் வாசகங்கள் பல வாறுக யிருப்பினும் உங்கள் அழகு ஒன்றே யாகும். ஆதலின் உங் களைப் புகழ்ந்து வரையப்படும் வாசகங்கள் யாவும் உங்களின் ஒரே அழகைத் தான் சாரும்)

அல்லாஹுத ஆலாவின் அடிமை என்னும் முறையில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களடைந்துள்ள பெருமை கீர்த்தி ஆகியவைகளை எவரும் பெற்றிருக்கவில்லை. நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உயர்வு, வன்மை, சிறப்பு ஆகியவைகள் எவருக்கும் கிட்டவேயில்லை. அல்லாஹுதஆலா நாயன் எஜமான் என்னும் முறையில் இணை துணையற்றவனுக யிருப்பது போலவே பக்குவமடைந்தமனு, மாக்ஷிமைபெற்ற உத்தமமான அடிமையென்னும் முறையில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் இணையற்றவர்களல்லவா ?

இமாம் பூசரீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் புர்தாவில் சொல்லியிருக்கும் கவியின் சாரம்:—

(நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இணையற்ற அழகையுடையவர்களாக விருப்பதோடு அவர்களின் இலக்ஷணத்திற் குரியதாகவுள்ள இரத்தினங்கள்யாவும் பங்கு வைக்க முடியததாயு மிருக்கின்றன.)

ஆனதுபற்றியே குர்ஆன் ஷரீபில் மற்ற நபிமார்களை அவர்களின் நாமங்களைச்சுட்டி அழைக்கப்பட்டிருப்பதோடு மற்ற நபிமார்களை யொட்டிய செய்திகளை அவர்களின் நாமங்களைக் குறிப்பிட்டே பிரஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன. ஆனால் பக்குவமடைந்த பரிபூரண மானுஷீகத்தன்மைக் குரியவர்களும், அல்லாஹுத ஆலாவின் இணையற்ற அடியாருமாகிய நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப்பற்றி எடுத்தோதப்பட்டிருக்கும் இடங்களில், அநேகமாய் அவர்களின் நாமத்தைச் சுட்டப்படாமலிருப்பதோடு, வேறுவித புகழ் முதலியவைகளின்றி அடியாரென்று மட்டும் அறிவிக்கப் பட்டிருக்கின்றது.

“ஓர் இரவில் தன்னடியாரை “மஸ்ஜிதெஹராமிலிருந்து, “மஸ்ஜிதெ அக்ஸா” வரை பிரயாணம் செய்வித்த அல்லாஹுத ஆலா எத்தகைபத் தூய்மையான வனும்” [பனீஇஸ்ராயீல்] “ அல்லாஹுதஆலாவின் அடியார் அல்லாஹுதஆலாவைக் கூவி யழைத்தவர்களாய் சத்தியப் பிரசாரம் புரிவதற்கு எழுந்து நிற்கும்போது “காபர்கள்” இவ்வடியார்மீது வந்து விழ சமீபித்து விட்டதைப் போல் அடர்ந்து சூழ்ந்து கொள்ளுகின்றனர்.” [ஜின்] “ தன்னடியார்மீது வேதத்தை இறக்கிவைத்த அல்லாஹுத ஆலாவுக்கே எல்லாப் புகழும் உரித்தாகும்.” [கஹ்பு] “ முழுவுலகத்திலும்பரவியுள்ள வழிகேடுகளை யொட்டி அச்சம் மூட்டுவதற்காகத் தன் அடியார்மீது “ அல்புர்கான் ” என்னும் வேதத்தை இறக்கிவைத்த அல்லாஹுத ஆலா பெரும் தூய்மையானவனும்” [புர்கான்] (அல்குர்ஆனின் வியாக்கியானங்கள்.)

இவ்வாறே “ நஜ்ம் ” “ஹதீத் ” ஆகிய சூராக்களிலும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நாமத்தைக் குறிக்காமல் (அப்துஹு) அடியார் என்று மட்டும் அறிவிக்கப் பட்டிருக்கின்றது. மற்றும் சில நபிமார்களை (அப்துஹு) அடியாரென்று அறிவிக்கப்பட்டிருப்பினும் அந்தந்தநபி மார்களின் நாமங்களையும் சேர்த்தே (அப்துஹு) அடியார் என்று அறிவிக்கப் பட்டிருக்கின்றது.

“மரியம்” என்னும் சூராவில் அடியாராகிய ஜகரிய்யா (அலைஹிஸ்ஸலாம்) என்றும், “சாத்” என்னும் சூராவில் அடியாராகிய

"தாவூத்" (அலைஹிஸ்ஸலாம்) என்றும், அடியாராகிய "ஐயூப்" (அலைஹிஸ்ஸலாம்) என்று மற்றோரிடத்திலும் அல்லாஹுத ஆலா அறிவித்திருப்பவற்றை உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம்.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பெயரைக் குறிக்காமல் அடியார் என்று மட்டும் எடுத்தோதப் பட்டிருப்பதற்குக் காரணம், நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹுத ஆலாவின் அடியாரென்னும் முறையில் பரிபூரணமான பெரும் கீர்த்திக்கு உரித்தானவர்கள் என்றும், இக் கீர்த்தியில் மற்ற எவருக்கும் எவ்வித சம்மந்தமுமில்லையென்றும் எடுத்துக்காட்ட வேண்டு மென்பதல்லவா? ஆனதுபற்றியே புகழுக்குரிய வேறு பதங்களைக் கொண்டன்றி (அப்துஹு) அடியார் என்பதே நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களை அறிவிப்பதற்குப் போதியதாக விருக்கின்றது.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு இணையான அடியார் எவரும் இல்லாதிருப்பதும் இதற்குக் காரணமாகும். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹுத ஆலாவின் இணையற்ற அடியாரென்னும் முறையில் நாயகம் அவர்களுக்கு முழு உலகத்திலும் ஒருவித செல்வாக்குண்டு. அன்றியும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தன் நிகரற்ற பிரீதிக்குரித்தானவர்களென்று அல்லாஹுதஆலா விளம்பரஞ் செய்து முள்ளான்.

அல்லாஹுத ஆலாவின் இரக்ஷிப்பு முழு உலகத்திற்கும் பொதுவாக இருப்பதுபோல நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கிருபை முழு உலகத்தவர் மீதும் பொதுவாக நிலவியிருக்கும்படி ஏற்படுத்தி இருக்கின்றான். அல்லாஹுதஆலா தன்னை "ரஹ்மான்" என்றும் "ரஹீம்" என்றும் கூறி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை "பில்முஃமினீனர ஊபுர் ரஹீம்" என்று தீர்மானித்திருக்கின்றான்.

குர்ஆன் ஷரீபில் அல்லாஹுத ஆலா எவ்விடத்திலும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நாமத்தைக்குறித்து அழைக்கவேயில்லை. ஆனால் "யாஅய்யுஹர்ரஸூல்" என்று மரியாதையாயும், "யாஅய்யுஹல்முஜம்மில்" என்று பிரியத்தோடும் அழைத்திருக்கின்றான். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குச் சங்கைபுரியுங்கள். அவர்களைக் கௌரவியுங்கள்.

அவர்களுக்கு மரியாதை செய்யுங்களென்று பன்முறை கூறி அல்லாஹுத ஆலா தன் அடியார்களுக்குக் கட்டளை யிட்டிருக்கின்றான்.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹுத ஆலாவின் பிரீதிக்கும் நட்புக்கும் உரித்தாகி அவர்கள் பெற்றுள்ள கீர்த்திபெரும் பரிசுத்தமானதே யாகும். பூமி, வானம் முதலிய சகலவற்றிற்கும் எஜமானாகிய அல்லாஹுதஆலா நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வசித்தஊர், நடந்துதிரிந்த வீதி ஆகியவைகள் முழு உலகத்திற்கும் சிரேஷ்ட மானவையென்று தீர்மானித்தான். உதாரணமாக:—"நாம் மக்காவின் பேரில் சத்திய மிடுகின்றோம். ஏனெனின்? அதன் பூமியில் தாங்கள் தங்கியிருந்தீர்கள். வசித்தீர்கள்" (அல் குர் ஆனின் வியாக்கியானம்.)

(கவியின் சாரம்)

("மனிதர்கள் தங்கள் விருப்பத்திற்குரிய வைகளையே தங்களின் மதங்களாக வெண்ணிக் கொண்டாடக் கூடும். ஆனால் ஒரு வீட்டையுடையவர்கள் அவ்வீட்டை நேசிக்கவேண்டு மென்பதே என் சித்தாந்தம்).

எம்மஹானின் பரிசுத்தம் உயர்வு கீர்த்தி ஆகியவைகள் இத்தகைய சிறப்புற்றதாக விருக்குமோ? அம்மஹானைச் சிந்திப்பதில் எத்தனைக் காலம் கழிந்தாலு மென்ன? அம்மஹானின் மீதுள்ள நட்பின் முதிர்ச்சியால் கண்கள் எத்துணை நீர் வடித்தாலு மென்ன? அம்மஹானின் மீது ஹிருதயம் கொண்டுள்ள பிரீதியின் காரணத்தால் எத்துணை சப்தங்கள் வெளியாயினு மென்ன? இத்தகையப் பெரிய மஹானை சிந்தித்து, துதித்துப் புகழ்வதால் நாக்கள் எவ்வளவு வரக்ஷி யடைந்தாலு மென்ன? இவைகள், மானுஷீகத் தன்மையை யளிப்பதும். ஆத்மாக்களுக்கு முக்தியை யுண்டு பண்ணுவதும் ஹிருதயத்தைப் பரிசுத்தப் படுத்தக் கூடியதும் உலக வாழ்க்கையில், நல்லொழுக்கத்தை யளிக்கத்தத் தக்கதும் உலகில் அல்லாஹுத ஆலாவின் உண்மையான நல்லாக்ஷியை ஸ்தாபிக்க வல்லது மல்லவா?

(கவிகளின் சாரம்)

(தான் நாடியவைகளை யடைவதற்கான வழிச் செல்ல முற்படுகிறவன் மட்டுமே அல்லாஹுத ஆலாவை அடைவ தென்னும் அதிர்ஷ்டத்திற்குரிய வனாவான்.

("அல்லாஹ்" "அல்லாஹ்" வென்று மொழிந்து திரிவதோடு மட்டும் நின்று விடாது, அவனைத் தெரிசிக்க முயலுபவன் மட்டுமே பாக்கியவானாகும்).

கிடைத்தவைகளை முன்னிட்டு சந்தோஷமும், இகழ்ந்தவைகளை முன்னிட்டு துக்கமும்.

"ரபீஉல் அவ்வல்" என்னும் சிறப்புற்ற இம்மாதத்தின் கண் மேற்கூறியவாறு பல நற்கருமங்களைப் புரிகின்றீர்கள். இம்மாதத்தில் ஜனனமான மஹானை சிந்தித்துக் கொண்டாடுகின்றீர்கள். இக்கொண்டாட்டத்தின் மத்தியில் உங்களுக்குப் பெரியதொரு விசனமும் வருகின்றதா? அவ்விசனமின்றி, உண்மையில் உங்களுக்கு எச்சந்தோஷமுமில்லை. எந்த மஹானின் ஜனனத்தை முன்னிட்டு நீங்கள் கொண்டாட முற்படுகின்றீர்கள், என்பதன் உண்மையை யொட்டி நீங்கள் எவ்வமயமேனும் ஆராய்ந்ததுண்டா? எந்த மஹானின் ஜனனத்தை யொட்டிய சிந்தனையால் உங்களுக்கு மகிழ்ச்சி, சந்தோஷம் ஆகியவைகள் கிடைத்துள்ளன என்பதை நீங்கள் நோக்கியதுண்டா?

"உங்களுக்கு சகல பாக்கியத்தையு மளித்த மஹான் இம்மாதத்திலேயே தோன்றினார்கள். ஆதலின், இம்மாதத்தின் வருகை உங்களுக்குப் பெரும் சந்தோஷத்தையும், கொண்டாட்டத்தையும் மூட்டத்தக்கதாக இருக்குமாயின், இம்மாதத்தில் ஜனனமான மஹான் நமக்களித்த பாக்கியங்களனைத்தையும் நாமிழந்து விட்ட ஸ்திதியில் இம்மாதத்தைக் காட்டினும் எனக்கு விசனத்தை யுண்டு பண்ணக்கூடிய மாதம் வேறில்லை. ஆ! விசனமே!!

"நாம் பெரும் சன்மானங்களை யடைந்தோமென்னும் ஞாபகத்தை ஒரு புறத்தில் நமக்கு இம்மாதம் ஞாபக மூட்டுவதாக விருப்பினும், மறுபுறத்தில் அச்சன்மானங்களை இழந்து விட்டோ மென்னும் விசனம் தலை தூக்கியாட வேண்டுமல்லவா?"

(கவியின் சாரம்).

(உல்லாசமாய் வாழத்தக்க அழகிய மாளிகையைக் காட்டினும் முக்திக்குரிய நற்செய்தி பெறுவதற்கிலக்கான வனாந்தரக் காடுகள் சிரேஷ்டமானவையே.)

பெருங் கூட்டங்களைக் கூட்டி அதன் மூலமாய் உங்கள் இல்லங்கள் செழிக்க வேண்டுமெனக் கருதுகின்றீர்கள். ஆனால் உங்கள் ஹிருதய மென்னும் நாடு பாழடைந்திருப்பதை யொட்டிய எச் செய்தியாவது உங்களுக்குக் கிடைத்துள்ளதா? விலையுயர்ந்த தீபங்களாலும், மின்சார விளக்குகளாலும் உங்கள் வீடுகளை ஜ்வலிக்கச் செய்கின்றீர்கள். ஆனால் உங்கள் ஹிருதயத்தைப்பீடித்திருக்கும் இருளைப்

போக்குவதற்காக யேதேனும் தீபம் வேண்டுமென்ற கவலையைக் கொண்டீர்களா? அன்றலர்ந்த மலர்ச் செண்டுகளால் உங்கள் இல்லங்களை அலங்கரிக்கின்றீர்கள். ஆனால் உங்கள் நற் செய்கைகளைக் கொண்ட அழகிய புஷ்பங்கள் உலர்ந்து விட்டனவல்லவா? ஆ! விசனமே!! பன்னீர் அத்தர் முதலிய விலையுயர்ந்த வாசனைத் திரவியங்களால் உங்கள் ஆடைகள் பரிமளத்தை யடையும்படிச் செய்கின்றீர்கள். ஆனால் இஸ்லாமிய உயர்வையொட்டிய உங்கள் நற் செய்கைகளின் மூலமாய் வீசிக்கொண்டிருந்த பரிமளத்தை உலகத்திலுள்ள நல்ல ஜீவன்கள் இன்று அடையமுடியாது போயிற்றல்லவா? ஆ! விசனமே!!

உங்கள் கூட்டங்கள் பிரகாச மற்றதாக யிருப்பினும் கல், சாந்து முதலியவைகளால் தயாரிக்கப் பட்டுள்ள உங்கள் வீடுகள் அலங்கார மற்றுப் போயினும், பெரும் கூட்டங்களை நடத்திவைப்பதற்காக இரவெல்லாம் உங்கள் கண்கள் விழித்திராவிடினும், ரபீஉல் அவ்வல் என்னும் மாதத்தில் ஜனனமான மஹானையொட்டிய செய்தியை உங்கள் நாக்களின் மூலமாய் உலகம் செவியுறாவிடினும் பாதகமில்லை. ஆனால் உங்கள் ஹிருதய மென்னும் நாடு நாசமுற்று விடாமலும், உங்கள் ஆத்மாக்கள் செழிப்புற்றதாயு மிருப்பதோடு மறைந்துகிடக்கும் உங்கள் அதிர்ஷ்டம் விழித்திருப்பதே அவசியமானதாகும். உங்கள் ஹிருதயம் உயிர்ப்பித்திருக்குமாயின் உங்களின் நாக்கள் மௌனம் சாதித்திருக்கும் நிலைமையிலும்; நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் "உஸ்வயெஹஸனு" வென்னும் முன் மாதிரியான காரியங்களைப் பின்பற்றிய உங்கள் செய்கை, நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் துதித்துப் பாடும் இராகம் வானத்தை யளாவி நிற்குமல்லவா? (உங்களின் கண்கள் குருடாகவில்லை, ஆனால் சந்தேகமின்றி உங்கள் ஹிருதயங்களே குருடாகிவிட்டன.) ஆ! விசனமே!!

(கவியின் சாரம்)

(ஜீவித்திருக்கும் ஹிருதயமே! நீ மரித்துவிடுவாயோ வென்னும் பயம் எனக்கிருந்து வருகிறது. ஆகவே நீ மரித்துவிடாதே. நீ உயிரோடிருப்பதற்கே ஜீவிப்பென்ற பொருளுண்டு.)

கொண்டாட்டம், சந்தோஷம் முதலிய ஒவ்வொரு நடவடிக்கையிலும் விசனச் செய்தியை சம்மந்தப் படுத்திக்கொள்ள வேண்டியதாக இருந்துவரும் வகுப்புப்பெரும் துரதிருஷ்டத்தைக் கொண்டதே

யாகும். ஆனால் இவ்வகுப்பின் மறதி, அறியாமை ஆகியவைகள் இன்றும் அளவற்றதாக யிருக்கிறதல்லவா? விசனமே! நூற்றுக் கணக்கான விசனமே!!

தம் வாழ்க்கையை யொட்டிய ஒவ்வொரு சிறியகொண்டாட்டத்தினூடேயும் மிகப் பெரியதொரு விசனத்தைக்கொள்ள வேண்டியதாக விருக்கின்ற நிற்பாக்கியமான இவ்வகுப்பார் (மறைந்துபோன) தங்களின் பூர்வ பெருமையைச் சிந்தித்து உணர்ச்சி பெறக்காணோம். அன்றியும் நிகழ் காலத்தின் இடி, மின்னல் ஆகியவைகளின் மூலமாயும் இவ்வகுப்பார் விழிக்கக் காணோம். தங்களினிழிவான நிலைமையை யறியாது நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஜனனமான தினத்தை யொட்டிக் கொண்டாட முற்பட்டிருக்கும் உணர்ச்சி யற்ற இவ்வகுப்பார் வருங்கால இருளைப் போக்கி நல்வழிச் செல்வதற்கான தீபத்தைத் தேடிப்பிடிக்கவும் அவகாச மற்றிருக்கின்றனர். ஆனால் இவர்களின் சந்தோஷத்தை யொட்டிய ஒவ்வொரு காரியத்திலும் இன்று ஏதேனுமோரு விசனம் பிரவேசித்து விட்டது. ஆனால் கண்கள் பார்க்குமாயின், காதுகள் செவியுறுமாயின் மறதி, அஞ்ஞானம் ஆகியவைகள் ஹிருதயத்தின் உணர்ச்சியைக் கைப்பற்றிக் கொள்ளாதிருக்குமாயின் இவ்வுண்மை புலப்படும்.

கருத்து, லக்ஷியம் ஆகியவைகள் தோன்றின.

உலகத்தைப் பிடித்திருந்த துரதிர்ஷ்டம், க்ஷீணதெசை ஆகியவைகளைப் போக்கி அல்லாஹுத ஆலாவின் தயை நிறைந்த உத்திரவு தோன்றியதும், அநியாயம், துர்க்கிருத்தியம், பாபத்தின் இருள், மிருக சேஷ்டை ஆகியவைகள் ஒழிந்து; அல்லாஹுத ஆலாவுக்கும் அவனுடைய அடியார்களுக்கும் மத்தியில் இருந்து முறிந்து போன சம்மந்தத்தைப் பிறகு உண்டு பண்ணியதும், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவைகளை ஸ்தாபித்து, விரோதம், கொடுமை, அவநம்பிக்கை முதலியவைகளைத் ஒழித்து "குப்ரு" வழிகேடு ஆகியவைகளுக்குப் பதிலாய் உண்மை சத்தியம், நியாயம் ஆகியவைகளைக் கொண்ட ஆக்ஷி ஸ்தாபிக்கப் பட்டுள்ளதாகப் பஹிரங்கப் படுத்தியதும் "ரபீஉல் அவ்வல்" மாதத்தையே சார்ந்ததாக யிருக்கின்றன. ஆனது பற்றியே இம்மாதத்தை யொட்டிய ஞாபகம் நமக்குப் பெரும் ஆனந்தத்தை யளித்து நம்மைக்கொண்டாடச் செய்கின்றது.

"அல்லாஹுத ஆலாவின் சமூகத்திலிருந்து உங்கள்பால் நேரான வழியைக் காட்டத்தக்க ஓர் ஒளியும், ஒரு பஹிரங்கமான வேத

மும் வந்தன. அல்லாஹுத ஆலா, அதன் மூலமாய் தன்னுடைய சம்மதத்தைக் கோருகிற வர்களுக்கு அடைக்கல மளித்து, வாழ்க்கைக்குரிய நேரான வழிச் செல்வதற்கு அருள் புரிவதோடு அவர்களுக்கு நல்வழியின் வாயிலைத்திறந்து விடுகின்றான்." (அல்குர் ஆனின் வியாக்கியானம்.)

ஆனால் உலகத்தை முன் பீடித்திருந்த துரதிர்ஷ்டம், க்ஷீணதெசை ஆகியவைகளால் இன்று மீண்டும் உலகம் கஷ்டத்திற்குள்ளாகி யிருக்கின்றது. 'மனிதர்கள் புரியும் குழப்பம், அநியாயம், துர்க்கிருத்தியம் ஆகியவைகளின் இருள் அல்லாஹுத ஆலாவின் பிரகாசத்தை மறைத்துவிடக் கருதி முயன்று வருகின்றது. உண்மை சத்தியம் என்னும் வேளாண்மைக்குரிய ஸ்தலங்கள் பாழாகிவிட்டன. நல் வழியை யறியாத இம் மனுவர்க்க மந்தைகள் பாதுகாப்பாற்றுப் போயினர். அல்லாஹுத ஆலாவுக்கு' மட்டும் உரிமையான பூமியை இதரர்களிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கின்றது. உண்மை சத்தியம் ஆகியவைகளுக்குப் பரிந்து ஆதரவளிப்பவர்களை யின்று உலகம் இழந்துவிட்டது.

"கடல், கரை ஆகிய இருவிடங்களிலும் மனிதர்களின் தீச் செயல்களால் அமைதி யொழிந்து விட்டதோடு பூமியின் க்ஷேமம், அதிர்ஷ்டம் ஆகியவைகள் பாழாகிவிட்டன." (அல்குர்ஆனின் வியாக்கியானம்).

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஜனனமானதை யொட்டிக்கொண்டாடக் கருதி முன் வந்தவர்களே! நாயகம் அவர்கள் தோன்றியதுள் அடங்கியிருக்கும் அரிய லக்ஷியத்தை மறந்து விட்டீர்களா? ஆ! விசனமே!! நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எக்காரியத்தை முன்னிட்டுத் தோன்றினார்களோ? அது அலக்ஷிய மாக்கப்பட்டிருப்பதை யொட்டி உங்கள் ஹிருதயங்களில் ஏதும் புண்கள் ஏற்படவில்லையா? உலகத்தைப் பீடித்திருந்த வழிகேடென்னும் இருள் ஒழிந்ததை முன்னிட்டே அவ்விருள் ஒழிந்த மாதமாகிய "ரபீ உல் அவ்வல்" உங்களுக்கு சந்தோஷத்தை மூட்டத்தக்கதாக இருந்தது. "ரபீ உல் அவ்வல்" மாதத்தில் உண்மை, சத்தியம் ஆகியவைகள் உலகில் ஆரம்பமாகியதை யொட்டியே இம்மாதம் சந்தோஷத்திற்குரிய தாக விருந்தது.

ஆயினும் இன்று உலகில் வழி கேடென்னும் விஷத்தால் நியாயத்தின் விருக்ஷம் காய்ந்து போயிருக்கும் ஸ்திதியில் ஓ! மறதியைப் பூஜிப்பவர்களே!! வஸந்த காலம் ஆரம்பமானதை யொட்டி

நடந்து வந்த கொண்டாட்டத்தை சடங்காக மட்டும் நடத்திவைக்க முற்பட்டிருக்கின்றீர்கள். ஆனால் அவ்வஸந்த காலம் பறிக்கப்பட்டு உலகை அநியாய மென்னும் பஞ்சம் பீடித்திருப்பதை யொட்டி நீங்கள் அழமாட்டீர்களா ?

மார்க்க நெறி யென்னும் "தீ"

தௌராத்தைப் பெற்றிருந்த மஹான் "ஸயீர்" என்னும் மலையிலிருந்த போழ்து அறிவிக்கப் பட்டிருந்ததைப் போல் அல்லாஹுத ஆலாவின் "நீதி" யென்றழைக்கப்படும் மார்க்கநெறியின் "தீ" "பாரான்" என்னும் மலைச்சிகரத்தில் தோன்றியதன் ஞாபகார்த்தமாகவே இம்மாதம் சந்தோஷத்திற் குரியதாக இருந்தது.

அநியாயத்திற் குட்பட்டு அழவும், ஏழ்மைபீடித்து விசனமுறவும், இழிவு, க்ஷீணதெசை ஆகியவைகளால் கஷ்டப்படவும், இம் மார்க்கம் தோன்றவில்லை. ஆனால் உண்மை, நியாயம் ஆகியவைகளின் எதிரிகள் அபஜயமுற்று அழவும், அல்லாஹுத ஆலாவின் விரோதிகள் ஏழ்மையால் பீடிக்கப்படவும், வழிகேடு, துர்க்கிருத்தியம் ஆகியவைகள் இழிவான முறையில் தள்ளப்பட்டு உண்மை, சத்தியம், நல்வழி ஆகிய தெய்வீகம் பொருந்திய ஆக்ஷிக்கு ஜயமேற்பட்டு விட்டதாய்ப் பெரும் ஆடம்பரத்தோடு விளம்பரம் செய்யவுமே இம் மார்க்கம் இறங்கிற்று.

அல்லாஹுத ஆலாவின் காரணக்கரத்தால் ஜ்வலித்த வாளாயுதத்தின் பயங்கரமான வீச்சானது அசத்தியம், துர்க்கிருத்தியம் ஆகியவைகளைக் கொண்டிருந்த ஸ்தாபனங்களை நடுங்கச் செய்ததோடு, சத்தியஆக்ஷி ஜயமுற்றுவிட்டதாய் உலகோருக்குச் சந்தோஷச் செய்தியையும் அறிவித்தது. "வழிகேட்டை யழித்து உலகில் முக்திக் குரிய நேரானவழியை ஸ்தாபிக்கவும் மற்றமார்க்கங்களின் மீது இம்மார்க்கத்திற்கு ஆதிக்கம் ஏற்படவும், தன் ரஸூலை உண்மையான வேதத்தோடு அனுப்பிவைத்தவன் அல்லாஹுத ஆலாவேயாகும். இவ்வேத உண்மையின் சக்தியே கடைசியாய் நீடித்த பொதுவான ஜயத்தைப் பெறக்கூடியதாகும். இவ் வேதத்திற்கு இத்தகைய ஜயமேற்படுவது இணைவைத்து வணங்குகிறவர்களுக்கு கஷ்டமாகத் தோன்றினும் சரியே." (அல்குர்ஆனின் வியாக்கியானம்.)

இவ்வேதம் இழிவைத் தரக்கூடியதல்ல. ஆனால் கொடியவர்களை இழிவுபடுத்தக் கூடிய கர்மாகும். இவ்வேதம் அநியாயத்தால் பீடிக்கப்பட்டு துடிக்கக் கூடியதல்ல. ஆனால் அநியாயத்தை துடிக்

கச் செய்யும் வாளாயுதமாகும். இவ் வேதம் ஏழ்மை, க்ஷீணதெசை ஆகியவைகளைக் கொண்டதல்ல. ஆனால் உலகத்தில் இவ்வேதத்தைக் கஷ்டப் படுத்தியவர்களே இவ்வேதத்தின் மூலமாய்க் கஷ்டமடைந்தனர். இவ்வேதம் துன்பத்தை உண்டு பண்ணக் கூடியதல்ல ஆனால் துன்பமிழைப்போர் தம் அடாத காரியத்தை விட்டு அயர்ந்து கிடப்பதற்கான விரிப்பை யளிக்கத் தக்கதாகும். இவ்வேதம் விசனத்தின் சப்தம், கஷ்டத்தின் கூக்குரல், ஆதரவின்மையின் பரிதாபம், கைகூடாமையின் கண்ணீர் ஆகியவைகளைக் கொண்டுவரவில்லை. ஆனால் நற்செய்தி கொண்டாட்டம், சந்தோஷம், ஜயம், இன்பம் ஆகியவைகளாற் பரவச மடையச்செய்யும் வேதமாகும். இவ் வேதம் தக்க பலத்தோடு அதிகாரம் செலுத்தக் கூடியதாக விருந்தது. இவ் வேதம், நம்பிக்கை, நிச்சயம் ஆகியவைகளை யொட்டிய சந்தோஷத்திற் குரியதாகும். அன்றியும் இவ்வேதம் நல்வாழ்க்கைக்குரிய ஜயம், முடிவற்ற சுகம், ஆகியவைகளை யளிக்கத் தக்கதாகும்.

"உலகத்தின் சகல சக்திகளையும் விட்டு நீங்கி அல்லாஹுதஆலாமட்டுமே எங்கள் நாயன், அவனன்றி எங்களுக்கு வேறு ஆதரவில்லை என்றுகூறி, அவ்வண்ணமே உறுதியோடிருந்து, அல்லாஹுதஆலாவின் வணக்கத்தை ஸ்திரப் படுத்தியவர்களே, அல்லாஹுதஆலாவின் நல்லடியார்களாகும். அவர்கள் ஜயமுறவும், சித்திபெறவும் அல்லாஹுதஆலா தீர்மானித்து விட்டான். ஆகவே அவ் வடியார்களிடம் ஜயத்தைக் கொண்ட மலக்குகளை அனுப்புகின்றான். இம் மலக்குகள் நல்லடியார்களுக்கு ஒவ்வொரு நிமிஷத்திலும் சந்தோஷச் செய்தியை சமர்ப்பிக்கின்றார்கள். அஃதாவது:— உங்களுக்கு (மூமின்களுக்கு) பயம், கவலை ஆகியவைகள் கிடையா. உலக வாழ்க்கையிலும் நீங்கள் அல்லாஹுதஆலாவின் உதவி, கிருபை ஆகியவைகளின் மூலமாய் ஜயமெய்தி சித்தியுறுவதோடு மறுமையிலும் அல்லாஹுதஆலாவின் அன்பு, ஆதரவுக் குரியவர்களாக விருப்பீர்கள். அல்லாஹுதஆலாவின் நன் கொடைகளுக்கு நீங்கள் மட்டுமே உரியவர்களாகும். நீங்கள் கோரும் பாக்கியத்தை அடைவீர்கள். நீங்கள் தேடும் வஸ்துக்களும் உங்களுக்குக் கிட்டும்" என்பதே, (அல்குர் ஆனின் வியாக்கியானம்)

அச்சம், கவலை ஆகியவைகளைக் கொள்ளவேண்டாம்.

"ஜயம், கீர்த்தி, உயர்வு ஆகியவைகளை யளிக்கத்தக்க சர்வ வல்லமையுமுள்ள அல்லாஹுதஆலாவின் சம்மந்தத்தைப் பெறாத

வரே கை கூடாமை, விசனம், கவலை ஆகிய நோயால் பீடிக்கப்படு வர். ஆனால் மனிதர்களின் சக்தி, உலகத்தைச் சார்ந்த பலம் ஆகிய வைகளை வெறுத்து அல்லாஹு தஆலாவின் பரிசுத்தமான சக்தியை மட்டும் விசுவாசித்து சந்தோஷம், ஜயம், நன்மை ஆகியவைகளை யளிக்க வல்ல அல்லாஹு தஆலாவை நேசனாக்கிக் கொண்டவர் விசன மடைவதெங்ஙனம்? அல்லாஹு தஆலாவின் பூமியில் அவனுடைய நேசர்களை எவரும் பகைத்துக் கொள்ள முடியுமா?" என்னும் இச் செய்தியை "ரபீஉல் அவ்வல்" மாதத்தில் தோன்றிய அம்மஹான் பறை சாற்றி யுள்ளார்கள்.

"அல்லாஹு தஆலா மூமின்களின் நேசனும் அவர்களுக்கு உதவி புரிகிறவனும் இருக்கின்றான். ஆனால் அல்லாஹு தஆலாவை மறுத்து விட்ட "காபர்கள்" அல்லாஹு தஆலாவின் அருளைப் பெற மாட்டார்கள். இவர்கள் அல்லாஹு தஆலாவின் நேசர்களாயுமிருக்க முடியாது." (12:48 அல்குர் ஆனின் வியாக்கியானம்.)

ஜீவனுள்ள எப் பரிசுத்தமானவர்கள் அல்லாஹு தஆலாவின் உண்மை, சத்தியம், நியாயம் ஆகியவைகளை யொட்டி ஊழியம் புரி யத் தங்களை அர்ப்பணம் செய்து விட்டனரோ, அன்னவர்கள் எதற்கு மஞ்சார்கள். ஆனால் உலகம் இச்சிரேஷ்டர்களின் வீரம் நிறைந்த காரியங்களைக் கண்ணுற்று நடுக்கமுறவேண்டும்.

"சத்தியத்திற்குப் பகைவர்களாகிய ஷைத்தான்களின் பய முறுத்தலைக் கண்டு அஞ்சவேண்டாம். உண்மையாகவே நீங்கள் மூமின்களாயின் அல்லாஹு தஆலாவையே பயப்படவேண்டும்." (17:3. அல்குர் ஆனின் வியாக்கியானம்.)

ஒன்றுக்கு மற்றொன்று எத்துணை முரண் பட்டதாக யிருப் பினும் அவை யிரண்டும் ஒன்றாய்ச் சேர்ந்து விடலாம். நெருப்பு, ஜலம் ஆகிய இரண்டும் ஒரே யிடத்தில் சேர்ந்திருக்கவும் கூடும். புலி ஆடு ஆகிய இரண்டும் ஒரே துறையில் தண்ணீர் அருந்துவதும் சாத்திய மாகலாம். ஆனால் அல்லாஹு தஆலாவின் "ஈமான்", "மனிதர்களை யொட்டிய அச்சம்" ஆகிய இரண்டும் ஒரே ஹிருதயத்தில் சேர்ந் திருக்க முடியாத அத்துணை முரண் பட்டவையாகும். அல்லாஹு த ஆலாவின்மீது ஈமான் கொண்டிருப்பதாய்க் கூறுவதோடு மனிதர் களைக் கண்டு நடுங்கும் துரதிருஷ்டக் காரர்களை, (வழியைக் கெடுக் கும்) கல், முள் ஆகியவைகளைப்போல் ஒதுக்கித் தள்ளிவிடுங்கள். ஏனெனில்? ஈமானென்னும் உறுதியின் வாடையைப் பெறாத "இக்

கொடியோர்'' வழி நடப்பவர்களுக்கு இடையூறாக விருந்திருக்கும் பொருட்டே.

“நீங்கள் உண்மை மூமின்களாயின் நீங்களே மற்றவர்கள் மீது ஆதிக்கம் பெறும் உயரியவர்களாகும். ஆதலின் நீங்கள் கவலை கொள்ளவேண்டாம். இன்னும் நீங்கள் விசனப்பட வேண்டியதுமில்லை.'' (அல்குர்ஆனின் வியாக்கியானம்.)

அல்லாஹுத ஆலாவின் நேசர்களாயும், அவனைக் கோருகிற வர்களாயும் இருப்பவர்களுக்கு எப்பயமுமில்லை. அன்றியும் அவர்கள் எப்பொழுதும் விசனங்கொள்ள மாட்டார்களென்பதை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.'' (அல்குர்ஆனின் வியாக்கியானம்).

நற்பாக்கியங்கள் பறிக்கப்பட்டுப் போனதேன்?

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஜனனத்தை யொட்டிய தினத்தைக் கொண்டாடும் பொருட்டு கூட்டங்களைக் கூட்டுகிறவர்களே! இன்று உங்கள் நிலைமை எவ்வாறிருக்கின்றது? உங்களுக் களிக்கப்பட்டிருந்த, நற்பாக்கியங்கள் எங்கே? உங்களுக்குச் சன்மான மாக்கப்பட்டிருந்த உயர்வு கீர்த்தி ஆகியவைகள் எங்கே போயின? உங்களுள் புகுத்தப்பட்டிருந்த நல் ஆத்மாக்கள் உங்களை விட்டேகியதேன்? உங்கள் எஜமானனாகிய அல்லாஹுத ஆலா உங்களை ஒதுக்கித் தள்ளிவிட்டானல்லவா? ஆ! விசனமே!! உங்கள் நாயனாகிய அல்லாஹுத ஆலா உங்களை தன் அடிமையாக மட்டும் ஏன் வைத்துக்கொள்ளவில்லை?

“கீர்த்தி, சிறப்பு, பெருமை ஆகியவைகள் உங்களுக்கு மட்டும் உரிமையாக்கப் பட்டுவிட்டன'' என்னும் அல்லாஹுத ஆலாவின் வாக்குறுதியை “ரபீஉல் அவ்வல்'' மாதத்தில் ஜனனமான நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உங்களுக்கு அறிவிக்கவில்லையா? “எல்லா உயர்வுக்குமுரிய வார்சுகள் உலகில் உங்களைத் தவிற வேறு எவருமில்லை'' என்னும் நற்செய்தியை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மூலமாய் நீங்கள் பெறவில்லையா?

“அல்லாஹுத ஆலாவுக்கும், அவனுடைய ரஸூலுக்கும், இன்னும் அவனுடைய மூமின்களுக்கும் கீர்த்தியுண்டு. ஆனால் “நிபாக்'' என்னும் நயவஞ்சகத்தால் பீடிக்கப்பட்டிருக்கும் ஹிருதயங்கள் இவ்வுண்மையை அறியக் கூடவில்லை.'' (அல்குர் ஆனின் வியாக்கியானம்.)

"முஸ்லிம்களுக்கு ஜயம், ஆதரவு ஆகியவைகளை யளிப்பது நமக்கு அவசியமே. ஆதலின் மூமின்கள் அபஜயமுற்று, இதரர்கள் ஜயமடைவது எவ்விதத்திலும் சாத்தியமற்ற காரியமாகும்." (அல் குர்ஆனின் வியாக்கியானம்.)

"உங்களுக்கு ஜயத்தை யளிப்பேனென்று அல்லாஹுத ஆலா அறிவித்திருக்கும் இவ் வாக்குறுதி உங்களுக்குச் சேரவில்லையா? நீங்கள் பெரும் கேட்டிற் கிலக்காகி மேன்மை, கீர்த்தி ஆகியவைகள் உங்களை விட்டு மறைந்து போனதேன்? உங்களுக்கு ஜயத்தை யளிப்பேன்" என்று அல்லாஹுத ஆலா வாக்குத் தத்தம் செய்தி ருக்கும் ஸ்திதியில் நீங்கள் கை கூடாதவர்களாய் தோல்வியுற்று தள் ளப்பட்டிருப்பதற்குக் காரணம் யாது? அல்லாஹுத ஆலாவின் வாக் குறுதி உண்மை யற்றதா? அவன் சொல்லுறுதி யற்றவனா? மனிதர் களின் வாக்குறுதியில் விசுவாசம் (ஈமான்) கொண்டு நீங்கள் அவர் களின் உத்தரவுக்குத் தலை வணங்கி நிற்கின்றீர்கள். ஆனால் "வாக்குறுதி மாறேன்" யென்று அல்லாஹுத ஆலா விடுத்துள்ள செய்தியை உறுதிகொள்ளத் தக்க, சொற்ப நம்பிக்கையேனும் உங் கள் ஹிருதயங்களில் உண்டா? ஆ! விசனமே!!

அல்லாஹுத ஆலா சொல்லுறுதி யற்றவனல்ல. அல்லாஹுத ஆலாவோடு உங்களுக்கிருந்து வந்த சம்மந்தத்தை அறுத்தெறிந்தது அவனல்ல. ஆனால் அந் நல்ல சம்மந்தத்தை நீங்களே முறித்து விட் டீர்கள். இந் நல்ல சம்மந்தம் முறிந்ததற்குக் காரணம்உங்கள் அவிசு வாசமும் துரதிர்ஷ்டமு மல்லவா? உங்கள் ஈமானின் மரணம், உங் களின் துர்ச்செயல் ஆகியவைகளே உங்கள்மீது அல்லாஹுத ஆலா வுக்கிருந்த பிரீதியைப் போக்கிற்று. அல்லாஹுத ஆலாவுக்கும் உங் களுக்கும் மத்தியில் இருந்துவந்த பரிசுத்தமான உறவை, உங்கள் மறதி, உங்கள் தீச்செயல் ஆகியவைகளும், "அல்லாஹ்" அல்லாத வைகளை நீங்கள் வணங்கிய கேடும் பாழாக்கி விட்டன.

"அல்லாஹுதஆலாவால் அளிக்கப்பட்ட நற்பாக்கியங்களை அனுபவிக்கத் தகாதவராகிக் கெட்டுப் போகாதவரை ஏதேனும் ஒரு வகுப்பு அனுபவித்து வந்த நற்பாக்கியத்தை எச் சந்தர்ப்பத்திலும் அல்லாஹுத ஆலா அவர்களிடமிருந்து அப்புறப் படுத்துவதேயில்லை. அல்லாஹுத ஆலா தன்னடியார்களை இம்சிக்கும் அனியாயக் கார னல்ல. ஆதலின் (அல்லாஹுதஆலா) குற்றமின்றி எவரையும் சிக்ஷிப் பதில்லை." (அல்குர் ஆனின் வியாக்கியானம்.)

நீங்கள் அல்லாஹ் அல்லாதவர்களுக்கு உடையவர்களாக விராது, இன்று அல்லாஹுத ஆலாவுக்கு மட்டும் உரியவர்களாக விருக்க கற்றுக் கொள்ளுவீர்களாயின் அல்லாஹுத ஆலாவும் உங்களுக்கேயன்றி இதரர்களுக் கல்லவென்பதை யுணருவீர்களாக.

"நீங்கள் அல்லாஹுதஆலாவின் சத்திய வசனத்திற்கு ஆதரவு புரிவீர்களாயின், அல்லாஹுத ஆலாவும் உங்களுக் காதரவளித்து உங்களுக்குள் உறுதி, பலம் ஆகியவைகளை யுண்டுபண்ணிவிடுவான்." (அல்குர் ஆனின் வியாக்கியானம்.)

சுயேச்சையே ஞாபகார்த்தத்திற் குரியது.

ரபீஉல் அவ்வல் என்னும் மாதத்தில் ஜனனமான மஹானாகிய நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின்மீது நீங்கள் அன்புகொண் டிருப்பதாய்க் கூறுகின்றீர்கள். அவர்களின் ஜனனத்தை யொட்டிக் கொண்டாடுவதற்காக கூட்டங்களைக் கூட்டுவதாகப் பகருகின்றீர்கள். அவர்களைத் துதித்துப் புகழும் உங்கள் சப்தம் வானத்தையளாவி நிற்கின்றது. ஆனால் யார்மீது நீங்கள் அன்புகொண்டிருப்பதாய்க் கூறுகின்றீர்களோ! அந்த மகானை நீங்கள் முற்றும் மறந்து விட்டீர்களென்பதற்கு உங்களின் ஒவ்வொரு செய்கையும் சாக்ஷியாக யிருந்துவரவில்லையா? இவ் விசனகரமான சம்பவத்தை யொட்டி நீங்கள் எப்பொழுதேனும் சிந்தித்ததுண்டா? நீங்கள் எந்த மஹானைத் துதித்துப் புகழ்வதாகச் சொல்லிக்கொள்ளுகிறீர்களோ? அம்மஹானின் கீர்த்தியைக் கெடுக்கும் விகாரமான வடுக்களாக நீங்கள் இருந்து வருகிறீர்களல்லவா? மனிதர்களின் அடிமையாயிருந்த மனிதர்களை மீட்டு அல்லாஹுத ஆலாவின் அடிமையாக மட்டும் இருக்கச் செய்து நேரான வழியில் நடத்தி வைப்பதற்காகவே அம்மஹானாகிய நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உலகில் தோன்றினார்களல்லவா? மனிதர்களின் அடிமைகளாக வைத்திருக்க வேண்டி மனிதர்களின் கால்களில் மாட்டப் பட்டிருந்த பெரும் பளுவான எல்லா விலங்குகளையும் உடைத்தெறிந்து மனிதர்களை மீட்பதற்காக வல்லவா நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் "ரபீஉல் அவ்வல்" மாதத்தில் ஜனனமானார்கள்?

"இஸ்லாமின் நபி தோன்றிய தன் லக்ஷியம் மனிதர்களின் கழுத்துக்களில் போடப்பட்டிருக்கும் விலங்குகளின் சுமையைப் போக்கி, கொடியவர்களால் கட்டப்பட்டிருந்த வீணான கட்டு தடை ஆகியவைகளை விட்டு மனிதர்களை மீட்பதேயாகும்" (அல்குர் ஆனின் வியாக்கியானம்).

" அடிபணிதல் என்னும் வணக்கத்திற்கு அல்லாஹுத ஆலா மட்டுமே உரியவனாகும். ஏவல், உத்திரவு ஆகியவைகளின் மூலமாய் மனிதர்களை ஆக்ஞை புரிவதற்குரிய அந்தஸ்து அல்லாஹுத ஆலாவுக்கு மட்டுமே உண்டு" என்று ரபீஉல் அவ்வல் மாதத்தில் ஜனனமான மஹானாகிய நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உலகோருக்கு அறிவிக்கவில்லையா ?

" அதிகாரம், சக்தி ஆகியவைகள் அல்லாஹுத ஆலாவைத் தவிர வேறு எவருக்குமில்லை" (அல்குர் ஆனின் வியாக்கியானம்).

மனிதர்களிடமிருந்து பறிக்கப் பட்டிருந்த சுயேச்சையை ரபீஉல் அவ்வல் என்னும் மாதத்தில் ஜனனமான நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீண்டும் மனிதர்களுக் களித்துப் பிறகு கூறியதாவது :—" மூமின்கள் அரசர்களின் அடிமைகளாக யிருக்கக் கூடியவர்களல்ல. மூமின்கள் ஜோதிடர்களுக்குப் பணிகிறவர்களுமல்ல. மூமின்கள் மனிதர்களின் எச் சக்திக்கும் தலை வணங்குகிறவர்களல்ல. ஆனால் மூமின்கள் அல்லாஹுத ஆலாவின் சமுகத்தில் மட்டும் வணங்கத் தக்க சிரசை யுடைவர்களாகும். மூமின்களின் ஹிருதயம் அல்லாஹுத ஆலாவின் பிரீதியை மட்டும் கொண்டதாகும். மூமின்களினுடைய கால்கள் அல்லாஹுத ஆலாவின் விலங்குகளுக்கு மட்டும் உரித்தானவையாகும். மூமின்களின் கழுத்து அல்லாஹுத ஆலாவை பணிவதற்கான கயிற்றைக் கட்டுவதற்கே உரிய விடமாகும். ஆதலின் மூமின்கள் அல்லாஹுத ஆலாவின் சமுகத்தில் மட்டுமே தலை வணங்குவார்கள். மூமின்கள் அல்லாஹுத ஆலாவின் சமுகத்தில் மட்டுமே அழுவார்கள். மூமின்கள் நம்ப வேண்டுமோயின் அல்லாஹுத ஆலாவை மட்டுமே நம்புவார்கள். அல்லாஹுத ஆலாவின் சக்தி, பலம் ஆகியவைகளுக்கு மட்டுமே மூமின்கள் பயப்படுவார்கள். மூமின்கள் அல்லாஹுத ஆலாவின் கிருபா கடாக்ஷத்தை மட்டுமே கோருவார்கள், மூமின்கள் (முஷ்ரிக்) இணை வைத்து வணங்கும் சுபாவ முள்ளவர்களல்ல வாதலின் மூமின்கள் அல்லாஹுத ஆலாவுக்குப் பயப்படுவது போல் மனிதர்களுக் கஞ்சமாட்டார்கள். அல்லாஹுத ஆலாவுக்கு மட்டும் உரித்தான சக்தி, பலம் ஆகியவைகள் மனிதர்களுக்கு முண்டென்னும் ஆபாச எண்ணத்தைக் கொண்டவர்கள் மூமின்களல்ல"

"வணங்குவதற்குப் பல நாயன்களை ஏற்படுத்திக் கொள்வது நல்லதா ? அல்லது சர்வசக்தியும், பலமுமுள்ள ஒரே நாயனாகிய அல்லாஹுத ஆலாவை மட்டும் வணங்குவது நல்லதா? நீங்கள்

வணங்குவதற்காகத் தயாரித்துக் கொண்டிருக்கும் எண்ணிறந்த வாசல்களினுடையவும், விக்கிரகங்களினுடையவும் உண்மை யாது? அவைகள் வழிகேட்டின் காரணமாய் நீங்களும், உங்கள் முன்னோர்களும் உங்களுக்குத் தோன்றியவாறு தாமாகவே இயற்றிக்கொள்ளப் பட்டவைகளல்லவா? உங்கள் நீண்ட காலத்து வழிகேடும் அல்லாஹ், அல்லாதவைகளை வணங்குவதென்னும் ஆபாசப் பழக்கமும் அவ்விக்கிரகங்களை யொட்டி உங்களுக்குள் ஒருவித பயத்தை உண்டுபண்ணியிருக்கிறது. அவ்விக்கிரங்களுக்கு அல்லாஹுதஆலா எச் சக்தியையும் அளிக்க வில்லை. அவைகளை விசுவாசிக்கவோ, அல்லது வணங்கவோ அல்லாஹுதஆலா எவ் வுத்திரவையும் அனுப்பவில்லை. உங்களடிமை வாழ்க்கைக்குக் காரணமாய் கற்பனை செய்யப்பட்டிருக்கும் விக்கிரகங்கள் உண்மையில் மதிக்கத் தக்கவையல்லவென்பதை நிச்சயித்துக்கொள்ளுங்கள். அல்லாஹுதஆலாவைத் தவிற உலகில் எவருக்கும் ஆக்ஷி, அதிகாரம் ஆகியவைகள் கிடையா. தன்னைத் தவிற வேறெதையும் வணங்கவேண்டாமென்று அல்லாஹுதஆலா கட்டளை யிட்டிருக்கின்றான். அல்லாஹ், அல்லாதவைகளைத் தவிர்த்து அல்லாஹுதஆலாவை மட்டும் வணங்குவதே இயற்கையான நல்வழியாகும். அல்லாஹுதஆலாவை மட்டும் வணங்கத்தக்க மார்க்கமே நிலைத் திருப்பதற்குரியதாகும்'' (அல்குர்ஆனின் வியாக்கியானம்).

மனிதர்களுக்கு உரிமையான சுயேச்சை உண்மையான நிர்ணயம் ஆகியவைகளை எத்தகைய உதாரணங்களோடு அல்லாஹுதஆலா அறிவுறுத்துகிறானென்பதை நோக்குங்கள்.

'' அல்லாஹுதஆலா ஓர் உதாரணத்தை ஈகின்றான் :—ஒருவன் மற்றொரு மனிதனின் அடிமையாக விருப்பதாய் வைத்துக் கொள்ளுங்கள் (அடிமையாக விருக்கும்) இவனுக்கு சுயமாகவே எதையும் செய்ய உரிமை கிடையாது. இவனுக்குச் சொந்தமான வஸ்துக்களையும் இவனிஷ்டம் போல் வினியோகஞ் செய்ய முடியாது. ஏனெனின்? இவன் தன் எஜமானனுடைய உத்திரவை நோக்கி நிற்கும் அடிமையாகும். ஆனால் இவனுக்குப் பக்கத்திலுள்ள மற்றொரு மனிதன் சுயேச்சை யுள்ளவனாக இருக்கின்றான். இவன் மனிதர்களின் எவ்வித ஆக்ஷிக்கும் உட்பட்டவனல்ல. இவனுக்குரிய சகல வஸ்துக்களிலும் இவனுக்குப் பூரண அதிகாரமுண்டு. இவனுக்கு அல்லாஹுதஆலாவால் அளிக்கப் பட்டிருக்கும் வஸ்துக்களை இரகசியமாயும் பகிரங்கமாயும் நினைத்த

வாறு தவக்க மின்றி செல விடுகின்றான். இந் நிலைமையில் முதலா வதாக அறிவிக்கப் பட்ட அடிமையையும் சுயேச்சையாக விருக்கும் இவனையும் சமமாகக் கருத முடியுமா ? இவ் விருவரின் நிலைமையிலும் வித்தியாச மில்லையா ? வித்தியாசம் இருப்பதாகக் கருதப்படின் அல்லாஹு-த ஆலாவுக்கு மட்டும் அடிமையாக விருக்கும் சுயேச்சை யுள்ளவனும், மனிதர்களுக்குக் கட்டுப் பட்டு நடக்க வேண்டுமென் னும் அடிமை விலங்கைக் கழுத்தில் மாட்டப் பட்டிருப்பவனும் எவ் வாறு ஒரேவித அந்தஸ்தை யுடையவனாக முடியும் ? (16—77 அல் குர் ஆனின் வியாக்கியானம்).

அல்லாஹு-த ஆலாவுக்கு மட்டும்அடிமையாகி மனிதர்களைப் பாதுகாக்கும் தலைவர்களென்னும் பொருப்புள்ள பெரிய பதவியை அல் லாஹு-த ஆலாவின் தர்பாரிலிருந்து முஸ்லிம்களுக்கு வாங்கிக் கொடுத்த சிறப்புற்ற மஹானாகிய நாயகம் ஸல்லல்லாஹு- அலைஹிவ ஸல்லம் அவர்கள் ரபீஉல் அவ்வலில் ஜனனமானார்க ளென்பதை முன் னிட்டே இம்மாதம் கொண்டாடத் தக்கதெனக் கொள்ளப்பட்டது. அல்லாஹு-த ஆலாவின் "பிரதிநிதி" (கலீபா) என்னும் கீர்த்தி, நாய கம் ஸல்லல்லாஹு- அலைஹிவஸல்லம் அவர்களின் மூலமாய் முஸ்லிம் களுக்கு கிடைத்ததை முன்னிட்டே நாயகம் ஸல்லல்லாஹு- அலைஹி வஸல்லம் அவர்களின் ஜனன தினம் முஸ்லிம்கள் கொண்டாடுவதற் குரியதாயிற்று. "ரபீஉல் அவ்வல்" மாத மானது மனிதர்களுக்கின்றி யமையாத சுயேச்சை ஜனன மான மாதமல்லவா? "ரபீஉல்அவ்வல்" என்னும் மாதம் அடிமை வாழ்க்கை மரணமடைந்து அழிந்து போனதை யொட்டிய ஞாப கார்த்தத்திற்குரிய மாதமல்லவா ? இம் மாதம் முஸ்லிம்களுக்கு "கிலாபத்" என்னும் அரிய பாக்கியம் கிடைத்த காலத்தின் ஆரம்ப தினமல்லவா ? இது முஸ்லிம்களே முழு பூமிக்கும் வார்சுகளென்று பஹிரங்கஞ் செய்த முதல் தின மல்லவா? அல்லாஹு-த ஆலாவின் சத்தியமொழியும் நீதியும் உயிர்ப் பித்தது ரபீஉல் அவ்வல் என்னும் இதே மாதத்திலல்லவா ?

"ரபீஉல் அவ்வல்" என்னும் இம்மாதத்திலேயே அல்லா ஹு-த ஆலாவின் முனிவுக்கிலக்கான அநியாயம், அதிக்கிரமம், எதேச்சாதிகாரம், வஞ்சகம், நம்பிக்கைத் துரோகம், பொய், மோசம், வழிகேடு, குப்ரு ஆகிய இருளைவிட்டு அல்லாஹு-த ஆலா வின் பூமி பரிசுத்தமாயிற்று.

என்னருஞ் சகோதரர்களே ! சுயேச்சையை யளித்த இம் மாதத் தின் வருகையை யொட்டியா நீங்கள் கொண்டாட முற்படுகின்றீர்

கள்? சுயேச்சையை யளித்த மாதத்தைச் சிந்தித்தா நீங்கள் கொண்டாடுவதற்கான ஏற்பாட்டைச் செய்கின்றீர்கள்? ரபீஉல் அவ்வல் மாதம் உங்களுக்கும், உங்கள் கொண்டாட்டத்திற்கு முரியதாய் வருவதாக வெண்ணியா இம் மாதத்தை உங்கள் கொண்டாட்டக் காலமாக இயற்றிக் கொண்டீர்கள்? இப் பரிசுத்தமான மாதத்தை நீங்கள் ஞாபகார்த்தமுள்ள மாதமாகக் கருதி கொண்டாட உங்களுக் கென்ன உரிமையுண்டு? அல்லாஹு த ஆலாவை முன்னிட்டு என் கேள்விகளுக்குச் சரியான விடைபகருங்கள்.

ஜீவனுள்ளவைகளைப் போல் கொண்டாடும் உரிமை மரணமடைந்து போன சவங்களுக்கும், அழிந்துபோன சின்னங்களுக்கும் உண்டா? உயிருள்ளவைகள் தாங்கள் ஜீவித்திருப்பதை யொட்டி சிந்தித்து சந்தோஷ மெய்துவதைப் போல் மரணமடைந்த சவங்களும் சிந்தித்து சந்தோஷ முறுமாயின் இச் சவங்களை நோக்கும் உலகத்திலுள்ள அறிவாளிகள் நகைக்கமாட்டார்களா? சூரியனின் பிரகாசத்தை யொட்டி உலகம் சந்தோஷ மெய்துவதுண்மையே. ஆனால் சூரியோதயத்தைக் கண்டு கண்ணுள்ளவர்கள் கொண்டாடுவதைப்போல் குருடர்களும் கொண்டாடுவதழகோ?

நீங்கள் யார்? நீங்கள் அடிமை யென்னும் மந்தைகளல்லவா? நீங்கள் உங்கள் நப்ஸின் அடிமையாயும் உங்கள் மனோ இச்சையின் அடிமையாயும் அல்லாஹ் அல்லாதவைகளின் சம்மந்தத்தை யொட்டிய அடிமையாயும் மிருக்கின்றீர்களல்லவா? அல்லாஹ் அல்லாத சக்திகள் மட்டும் விலங்குகளால் உங்கள் கழுத்து மறைந்து போயிற்றல்லவா? நீங்கள் கற்களின் குவியலைப்போலவே யிருக்கின்றீர்கள். அசைய முடியாத உயிரற்ற சின்னங்களாக விருக்கின்றீர்கள். துண்டு துண்டாய் சிதைந்து போகக்கூடிய தாயும் ஒருவர் மற்றொருவர் மீது எடுத்தெறியத்தக்க வஸ்துவாயு மிருக்கின்றீர்கள். உங்களைக் காற்று அள்ளி வீசக் கருதுமாயின் பறக்கும் தூசியாக விருக்கின்றீர்கள். அல்லது உதை வாங்கி மிதிபட்டு அழியத்தக்கவை யாயிருக்கின்றீர்கள்.

ஓ! மறதியில் சிக்குண்டவர்களே! உணர்ச்சி யற்ற தூக்கத்தால் பிடிக்கப் பட்டிருப்பவர்களே!! மனிதர்களுக்கு சுயேச்சையையும் ஆத்மாக்களுக்கு ஜீவனையும் அளித்து மனிதர்களை ஜயசீலர்களாயும், சிறப்புற்றவர்களாயு மாக்குவதற்கு ஜனனமான நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஜனனத்தைக்

கொண்டாட முற்படுகின்றீர்களா? நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஜனனத்தை யொட்டி நீங்கள் கொண்டாட முற்படுவது உலக மாறுதலுள் அபாரமான பெரும் மாறுதலல்லவா?

அல்லாஹ்! அல்லாஹ்!! உங்கள் மறதி சாமானிய மானதா? அல்லாஹ் அல்லாதவைகளின் அடிமைகளாக யிருப்பதற்கு வேண்டிய விலங்குக ளத்தனையும் உங்கள் கால்களில் மாட்டப் பட்டிருக்கின்றன. மனிதர்களைக் கண்டு நடுங்குவதற்கு வேண்டிய சங்கிலிகளத்தனையும் உங்கள் கழுத்துகளில் போடப்பட்டிருக்கின்றன. அல்லாஹு தஆலாவின் பேரில் கொள்ள வேண்டிய "ஈமான்" என்னும் உறுதியைவிட்டு, உங்கள் ஹிருதயம் வெறுமையாக்கப் பட்டிருக்கின்றது. உண்மை, நல்லொழுக்கம் ஆகியவைகளைக் கொண்ட நற்செய்கையின் பிரகாசத்தை உங்களாத்மாக்கள் பெற்றிருக்கவில்லை. இந் நிலைமையிலா நீங்கள் "ரபீ உல் அவ்வல்" மாதத்தில் ஜனன மான நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஜனன தினத்தைக் கொண்டாட வேண்டும்?

மனிதர்கள் அல்லாஹு தஆலாவுக்கு மட்டுமே அடிமை என்னும் உண்மையை வெளியிட்டு, இவ்வுண்மை ஜயம் பெறவும், மனிதர்கள் அல்லாஹ் அல்லாதவைகளின் அடிமைகளாக யிருப்பதை யொழிக்கவும், உண்மையான சுயேச்சையை பஹிரங்கஞ் செய்யவும், நீதியைக் கொண்ட உண்மையான அரசாங்கத்தின் ஸ்தாபகரத்தை யொட்டிய நற்செய்தியை வெளியிடவும் இம்மாதத்தில் ஜனனமான நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஜனன தினத்தைக் கொண்டாட அல்லாஹ் அல்லாதவர்களின் அடிமைகளாக உள்ள உங்களுக்கு அருகதையுண்டா?

மறதியில் சிக்குண்டிருக்கும் என்மத சோதரர்களே! உங்கள் மறதியை முன்னிட்டு பெரும் விசனமும் எண்ணிறந்த கவலையும் ஏற்படுகின்றன. "ரபீஉல் அவ்வல்" என்னும் மாதத்தின் வருகையை முன்னிட்டு கொண்டாடுவதை யொட்டிய உங்களார்ப்பாடங்களைக் கண்டு நூறுயிர முறையழுதாலுமென்ன? "ரபீஉல் அவ்வல்" என்னும் சிறப்புற்ற மாதத்தின் கீர்த்தியை யொட்டிய உண்மையை நீங்கள் அறியாதிருந்து கொண்டு உங்கள் இல்லங்களின் சுவர்களை பெரும் தீபங்களால் ஜ்வலிக்கச் செய்து நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை வெறுமனே உங்கள் நாவால் மட்டும் துதிக்கக் கருதுகின்றீர்களா? இம்மாதம் இஸ்லாமிய சமூகத்தை யொட்டிய அடிப்படையின் ஆரம்பகாலமாகும். இம்மாதத்திலேயே

அல்லாஹு தஆலாவின் அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்ட தென்னும் முதல் அறிக்கை உலகில் பஹிரங்கமாயிற்று, பூமியின் கிலாபத்தும், தெய்வீக வார்சு உரிமையையும் முஸ்லிம்களுக்குக் கிடைத்த முதலாவது மாதம் இதுவே. தெய்வீகம் பொருந்திய இப்பெரும் அறிக்கை அனுஷ்டானத்திற்கு வரவும், அல்லாஹ் அல்லாதவைகளின் அடிமையாக விருக்கும் மனிதர்கள் சுயேச்சை யடைவதற்கும் இன்றியமையாத நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் முன்மாதிரியான காரியங்களுள் எவ்வடையாளத்தையேனும் தம் "ஈமான்" "அமல்" ஆகியவைகளி னூடே கொண்டிராத எந்த ஜீவனும் நாயகம்ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஜனனத்தையொட்டிய காக்ஷி, துதி, சிந்தனை ஆகியவைகளின் மூலமாய் இன்பமுறுவது ஹராமாகும்.

சத்தியப் பிரசாரகரே ஜயசீலர்.

(இமாமுல்ஹிந்து மௌலானா அபுல்கலாம் ஆஜாத் அவர்கள் எழுதியது.)

நல்லன வற்றையேவிக் கெடுதியை யகற்றுவதென்னும் ஊழியத்தை "குர்ஆன்ஷரீபு" "ஜிஹாதெபீஸபீலில்லாஹ்" என்னும் பொருளடர்ந்த வார்த்தையால் ஞாபகப்படுத்துகிறது. இதுவே இஸ்லாமை நிலைக்கச் செய்வதற்கான அடிப்படையும், முஸ்லிம்களின் வணக்கம், நற்செய்கை முதலிய எல்லாவற்றிற்கும் வித்தாயுமிருக்கின்றது.

ஜிஹாத் என்னும் பதம் "ஜஹ்த்" என்னும் பதத்திலிருந்து வெளியானது. ஆதலின் இதன் பொருள், கஷ்டம், சங்கடம், பிரயாசை ஆகியவைகளாம். ஒரு காரியத்தை யொட்டி பெரும் கஷ்டத்தை ஏற்றுக் கொள்வதற்கும் "ஜஹ்த்" என்றே கூறுவர். ஆகவே ஜிஹாத் என்னும் பதத்தின் அர்த்தம்:—"விரோதியை யடக்குவதற்கு முழு பலத்தோடும் முயற்சி செய்வதாகும்." விரோதி என்றால் அந்தரங்கம், பகிரங்கம் ஆகிய இருவித விரோதிகளுமாகும். எச்சந்தர்ப்பத்திலும் எந்நெருக்கடியான வேளையிலும், நன்மை, சத்தியம், நியாயம், நேர்வழி ஆகியவைகளை உலகில் நிலைநிறுத்தி அசத்தியம், அநியாயம் ஏதேச்சாதிகாரம் வழிகேடு, தீமை ஆகியவைகளை ஒழிப்பதற்காக;

நல்லனவற்றை யேவிக் கெடுதியை யகற்றுவதே இஸ்லாமின் அஸ்திவாரமும், லக்ஷியமுமாகும். சத்தியத்திற்கு எதிரிடையான அசத்தியம், வழிகேடு ஆகிய ஷைத்தானின் சக்தியானது எவ்வுருவத்தைக் கொண்டதாய் வெளிவரினும், அவைகளை அகற்றுவதற்காக அநியாயத்தை எதிர்த்து, நியாயத்திற்காதரவளிப்பதே இஸ்லாமும் அது தோன்றியதன் லக்ஷியமுமாகும். உண்மையை ஸ்திரப் படுத்தி அஸத்தியத்தை யொழிப்பதற்கு எடுத்துக் கொள்ளும் முயற்சியை குர்ஆன் ஷரீபு "ஜிஹாதெபீ ஸபீலில்லாஹ்" என்று கூறுவதையாரும் மறுக்க முடியுமா?

நல்லன வற்றை யேவுவது இஸ்லாமின் லக்ஷியமென்று ஏற்றுக் கொள்ளுவோமாயின் கெடுதியை யகற்றுதவரை நல்லனவற்றை யேவியவர்களாக முடியாது. நல்லன வற்றை யேவுவது என்பதன் கருத்து, ஜனங்கள் நன்மையைச் செய்யும்படி அழைப்பதாயும், கெடுதியை யகற்றுவது என்பதன் கருத்து, ஜனங்கள் கெடுதியில் ஈடுபடாமல் தடுப்பதாயுமிருக்கிறது. ஆதலின் கெடுதியை யகற்றுவதே உண்மையில் நன்மையைச் செய்விப்பதாகும். இருளற்றுப் போவதற்கே பிரகாசமென்று சொல்லமுடியும்; அசுத்தமான கரும் புள்ளிகளை விட்டு காப்பாற்றப்படாத புடவையை சுத்தமானதென்று கூறமுடியுமா? ஆதலின் நன்மையை நிலை நிறுத்துவதற்காக நல்லன வற்றை யேவுவதோடு கெடுதியை யகற்றுவது மிக அவசியமானதே. கெடுதியை யகற்றுவதென்பதன் இரண்டாவது நாமமே "ஜிஹாதெபீஸபி லில்லாஹ்" வாகும்.

அந்தரங்கம், பகிரங்கம் ஆகிய இருவித துர்க்கிருத்தியங்களையும், ஒழிப்பதற்கான காரியத்தை "ஜிஹாத்" என்று இஸ்லாமிய ஆரம்ப காலத்து மகான்களான முன்னோர்கள் கூறியிருக்கின்றனர். ஆதலின் ஆயுதம் தாங்கி நிற்கும் அநியாயங்களையும், ஆபாசக் கொள்கையின் மூலமாய் ஏற்படும் இரகசிய வழி கேடுகளையும் அகற்ற வேண்டியது முஸ்லிம் களின் கடமை என ஏற்படுகின்றது. வழிகேடானது சில சந்தர்ப்பங்களில் பீரங்கியின் மூலமாய் மஸ்ஜிதுகள் "மிஹ்ராப்" கள், பாங்கு சொல்லும் மினாராக்கள் ஆகியவைகளை பகிரங்மாய்க் கைப்பற்றி அல்லாஹுதஆலாவை வணங்குகிறவர்களை அழித்துவிட முற்படுகின்றது. ஆனால் சில சமயங்களில் அவ்வழிகேடானது கெட்ட கொள்கை தவறான அபிப்பிராயம் உபயோகமற்ற நம்பிக்கை ஆகிய இரகசிய ஆயுதங்களின் மூலமாய் இறைச்சலின்றி மனிதர்களின் ஹிருதயங்களைக் கைப்பற்றிக் கொள்ளுகிறது.

வழி கேடானது ஜனங்களைக் கெடுப்பதற்காக ஆயுதம் தாங்கியதாய் மட்டுமின்றி, சில சந்தர்ப்பங்களில் மோசம், சூழ்ச்சி, ஆகியவைகளைக் கைக் கொண்டதாயும் முற்படுகின்றது. வழிகேடானது பீரங்கியின் மூலமாய்க் குண்டு பிரயோகஞ் செய்வதற்கு சில சந்தர்ப்பங்களில் தீப்பொறியைக் கரத்தில் தாங்கிய தாயும், சில சந்தர்ப்பங்களில் விஷம் கலந்த மதுரமான பானத்தைத் தாங்கிய தாயுமிருக்கும்.

ஆகவே ஜனங்களை வழி கெடுக்கும் சக்தி எவ்வுருவத்தைக் கொண்டதாயினும், அது பகிரங்கமாய் வருவதாயினும், அவ்வழி கேடு, அந்தரங்கமாய் ஜனங்களின் கொள்கையைக் கெடுப்பினும் அவை முழுவதையும் எதிர்த்து நிற்பதே "ஜிஹாத்" அல்லவா? வழிகேடு, ஆயுதம் தாங்கி வெளிவரின் அவ்வழி கேட்டை ஒழித்து சத்தியத்தை நிலை நிறுத்துவோரின் கரங்களிலும் ஆயுத மிருக்க வேண்டுமென்று வைத்துக் கொள்ளுவோம். ஆனால் கெட்ட கொள்கை மடமை, அஞ்ஞானம் ஆகியவைகளின் மூலமாய் வழி கேடானது தனக்கு செல்வாக்கை உண்டு பண்ணிக்கொள்ள முயலும் போது ஒவ்வொரு மூமினும், முஸ்லிமும் "நல்லனவற்றையேவுவது" என்னும் ஆயுதத்தைத் தாங்கிய வர்களாய் தங்களின் நா, எழுதுகோல் ஆகியவைகளைக் கொண்டு அவ்வழி கேட்டை ஒழிப்பதற்கு ஜிஹாத் செய்யவேண்டும். ஆகவே இந்த ஜிஹாத் இரகசிய எதிரிகளை ஒழிக்கும் ஜிஹாதென்று கூறுவோம்.

ஜிஹாத் என்னும் பதத்தின் வியாக்கியானம்.

ஷைத்தானையும், நப்ஸையு மெதிர்த்து ஹிருதயமும், நல்லுணர்ச்சியும் புரிகின்ற எல்லா முயற்சிகளையும் ஜிஹாதென்று பலஹதீதுகள் வியாக்கியானம் செய்திருக்கின்றன. உங்கள் பஹிரங்க விரோதிகளை ஆயுதம் தாங்கி எதிர்த்து ஜிஹாத் செய்வதைப்போலவே உங்கள் நப்ஸையுமெதிர்த்து ஜிஹாத் செய்யுங்கள், என்று ஹதீதில் வருகின்றது. உண்மையில் இதுவே பெரிய ஜிஹாதாகு மென்றும் அறிவிக்கப்படுகின்றது.

"அசத்தியத்தைப் பூசிப்பவர்களை எதிர்த்து உங்கள் உயிர், பொருள் இன்னும் உங்கள் நாவு ஆகியவைகளின் மூலமாய் "ஜிஹாத்" செய்யுங்கள்" என்று நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அறிவித்ததாக "நாஸாயீ" "அபூதாவூத்" ஆகிய கிரந்தங்களில் வரையப்பட்டிருக்கின்றது. ஆகவே ஆயுதம் தாங்கிப் போர் புரிவதன் மூலமாய் சில சந்தர்ப்பங்களிலும், பொரு

ளர்ப்பணஞ் செய்வதன் மூலமாய் சில சந்தர்ப்பங்களிலும் நாவால் நல்லனவற்றை யேவிக் கெடுதியை யகற்றுவதன் மூலமாய் சில சந்தர்ப்பங்களிலும் சத்திய பிரசாரத்தை யொட்டி ஜிஹாத் செய்ய வேண்டுமென்னும் கடமை நிறைவேறக்கூடியதாக விருக்கின்றது.

நல்லனவற்றை யேவிக் கெடுதியை யகற்றுவதற்காகவே இஸ்லாம் தோன்றிய தென்போமாயின் நல்லனவற்றை யேவுவது, ஜிஹாத் செய்வது ஆகிய இரண்டும் ஒரே உத்தரவின் இருநாமங்களென்று கொள்ளவேண்டும். ஆகவே சத்தியத்தை முன்னிட்டுச் செய்யும் முயற்சி, உண்மையை, முன்னிட்டுப் பணத்தைச் செலவிடுவது, சத்தியத்தின் நாமத்தால் கஷ்டத்தை ஏற்றுக்கொள்ளுவது, சத்திய வழி செல்லும்போது தேகம், உயிர் ஆகியவைகளுக்கேற்படும் துன்பம், உண்மையை வெளியிடுவதை முன்னிட்டு சிறைச்சாலைக்குச் செல்லுவது, அச்சிறையில் விலங்கையிட்டுக் கொள்வது, உண்மை, சத்தியம் ஆகியவைகளில் கொண்டுள்ள பிரீதியின் முதிர்ச்சியால் தூக்கு மேடைகளை சந்திப்பது, ஆகியவைகள் யாவும் "ஜிஹாதெபீஸபீலில்லாஹ்" தான்.

உயிர், பொருள், நா, எழுதுகோல் ஆகிய ஒவ்வொன்றின் மூலமாயும் சத்தியத்தை முன்னிட்டுப் புரியும் சகல கைங்கரியத்திற்கும் ஜிஹாத் என்றே சொல்லவேண்டியதாக இருக்கின்றது. ஆகவே அல்லாஹுதஆலாவுக்காக உங்கள் பொருளை வாரி இறையுங்கள். உங்கள் கழுத்துகளிலிருந்து இரத்த நதியைஓட்டி வையுங்கள். உங்கள் கழுத்துகளை சங்கிலிகளாலும் உங்கள் கைகால் முதலியவைகளை விலங்குகளாலும் அலங்கரித்துக் கொள்ளுங்கள். உங்கள் நாக்களால் சத்தியத்தைப் பஹிரங்கம் செய்யுங்கள். ஷைத்தானையும், வழிகேட்டையும் இழிவு படுத்துவதற்காக உங்கள் எழுதுகோலை அர்ப்பணஞ் செய்துவிடுங்கள். சத்தியத்திற்கு கௌரவமளிப்பவர்களை கௌரவியுங்கள். சத்தியத்தை இழிவுபண்ணுகிறவர்களை இழிவுபண்ணுங்கள். உலக சம்மந்தங்களை அறுத்துவிடுங்கள். "அல்லாஹ்" அல்லாத யாவற்றையும் ஒதுக்கித்தள்ள அல்லாஹுதஆலாவின் ஊழியர்களாக ஏற்பட்டு விடுங்கள். அவனுக்காக எக்கீழ்ப் பட்டவனையும் நேசியுங்கள். அவனை முன்னிட்டு எப்பெரியவனையும் பகைத்துக்கொள்ள அஞ்சாதீர்கள். நன்மைக்காக உங்கள் சிரசை வணங்குங்கள். ஆனால் அகம் கெடுதி ஆகியவைகளை ஒழிப்பதற்காக நிமிர்ந்து நில்லுங்கள். இவைகள் ஒவ்வொன்றையும் உண்மையில் "ஜிஹாதெபீஸ பீலில்லாஹ்" என்றும், நல்லனவற்றையேவிக் கெடுதியை யகற்றுவதென்னும் நல்

ஊழிய மென்றும் அழைக்கப்படும். ஏந் நல்லதிர்ஷ்டம் உள்ளவர் கட்கு அல்லாஹு—த ஆலா அருள் புரிகின்றனே அவர்களே " முஜா ஹிதெ பீஸபீலில்லாஹ்" என்னும் அரிய பட்டத்திற்குரியவ ராவார் கள்.

ஆனதுபற்றியே ஜிஹாத் செய்யவேண்டு மென்னும் கட்டளை இஸ்லாமைவிட்டுப் பிரிக்க முடியாத பேரங்கமாகச் செய்யப்பட்டிருக் கிறது. "முஜாஹித்" என்னும் நாமம் சூட்டப்படாத எவரும், ஒரே நாயனை வணங்குகிறவ ரென்றும், முஸ்லிமென்றும் சொல்லிக்கொள் ளமுடியாது. "ஜிஹாதெபீஸ பீலில்லாஹ்" என்னும் ஊழியமே முஸ் லிம்களுக்கு உரித்தான இலக்ஷண மென்று "குர்ஆன் ஷரீபு" பல இடங்களில் எடுத்துக்காட்டி இருக்கின்றது.

அல்குர்ஆன் 22-78. ஆயத்தானது நம் கருத்து, பிரசாரம் ஆகியவைகளை மெய்ப்பிக்கும் சாக்ஷியமாயும், சத்தியம் உண்மை ஆகிய வைகளை அலக்ஷியஞ் செய்யும் அநியாயக்காரர்களான நயவஞ்சகர் களை (முனாபிக்குகளை) நாசமாக்கும் வாளாயுதமாயு மிருக்கிறது.

இந்தஆயத்து அறிவிப்பவைகளாவன:—

(1) முழு உலகத்திலும் முஸ்லிம்களுக்கு பெருமை, கீர்த்தி முத லியவைகளை அளிப்பதாக அல்லாஹு—தஆலா இவ்வாயத்தின் மூல மாய் மங்களவார்த்தைக் கூறுகின்றான். இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தங்களின் மனோ இச்சையையும், அரும் புதல்வரையும் அல்லாஹு—த ஆலாவைமட்டும் நேசிப்பது என்னும் வழிபாட்டில் தியாகம் செய்துவிட்டார்கள். ஆதலின் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களையும், அவர்களின் "மில்லதெஹனீபி" என்னும் மார்க்கத் தையும் தழுவி நடக்கின்ற முஸ்லிம்களை அழைத்து ஹஜ்ரத் இப்ரா ஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களைச் சுட்டிக்காட்டி அவர்களின் "உஸ் வயெஹஸனு" வென்னும் முன்மாதிரியான நற்காரியத்தை நோக் கும்படி அல்லாஹு—த ஆலா கட்டளையிடுகின்றான். பிறகு இதே ஆயத்தில் "அகீமுஸ்லாத்த" "வஆத்துஸ்ஸகாத்த" என்று பகர்ந்து தேகம், பொருள்ஆகிய இரண்டையும் அர்ப்பணஞ் செய்யும் படி அல்லாஹு—த ஆலா கற்பிக்கின்றான்.

(தேகபலம், மனோ இச்சை ஆகியவைகளை யடக்கி, அல்லா ஹு—த ஆலாவுக்கு அடிபணித லென்னும் வணக்கத்தில் மூழ்கி அவ னல் அளிக்கப் பட்டிருக்கும் சிரசை அவனுடைய ஸன்னி தானத்தில் பணிவது தொழுகையின் உண்மை யென்றும், மனிதன் தன்னிட

முள்ள பொருள் வருவாய் ஆகியவைகளில் சத்தியம் தர்மம் ஆகிய வைகளுக்குப் பாக முண்டெனச் சதா ஒப்புக்கொண்டு அல்லாஹுத ஆலாவின் வழிபாட்டில் அதை செலவிடுவதே ஜகாத்தின் லக்ஷிய மென்றும் அறியக்கிடக்கின்றது.)

நல்லனவற்றை யேவிக் கெடுதியை யகற்றுவதே முஸ்லிம்களையும் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களையும் இணைத்து வைப்பதற்கு உண்மையான காரணமென்றும், முஸ்லிம்களுக்கு அறிவிக்கப்படுகின்றது. முஸ்லிம்கள் உண்மையைப் பிரசாரம் செய்து உலகோருக்கு சாக்ஷியாக விருக்கவும். முஸ்லிம்கள் நேரான வழியை அடைந்தவர் களென அல்லாஹுத ஆலா வால் அனுப்பப்பட்ட "ரஸூல்" என்னும் உத்தமர்கள் சாக்ஷியாக இருக்கவுமே முஸ்லிம்களுக்கு முஸ்லிம் களென்ற நாமம் சூட்டப்பட்டது. மேற் கூறப்பட்டுள்ள லக்ஷணங் களுக் கருகதையுடைய முஸ்லிம்களே, அல்லாஹுத ஆலாவின் பாதையில் ஜிஹாத் செய்யவேண்டிய முறைப்படி (சிறிதளவும் வழுவாது) ஜிஹாத் செய்யுங்களென்று. 22-78 ஆயத்தின் ஆரம்பத்தில் அல்லாஹுத ஆலா முஸ்லிம்களிக்கு அறிவுறுத்துகின்றான்.

ஆகவே முஸ்லிம்கள் அல்லாஹுத ஆலாவுக்காகவும், உண்மை, சத்தியம் ஆகியவைகளை நிலை நிறுத்துவதற்காகவும் ஜிஹாத் செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இப்பெரும் கடமை நிறைவேறும் பொருட்டு முஸ்லிம்கள் தங்களின் முழு பலத்தையும், சகல சக்தியையும் திரணமாக மதித்து அர்ப்பணஞ் செய்து விடவேண்டும்.

இஸ்லாமின் உண்மை, இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் உஸ்வயெஹஸனா ஆகியவைகளை அடைவதற்கு பற்பல சோதனைக்காளாகி எண்ணிறந்த கஷ்டங்களை அனுபவிக்கத் தான் வேண்டும்.

அல்லாஹுத ஆலாவின் சம்மந்தத்தைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொள்ளுங்கள் என்றும், அவனொருவனே உங்கள் எஜமானனென்றும் 22-78 ஆயத்தின் இறுதியில் அல்லாஹுத ஆலா அறிவித்திருக்கின்றான். ஆகவே மனோ இச்சை, அசத்தியம், வழிகேடு அழிந்து போகும் உலக ஆக்ஷியின் பலம், வீண் பெருமை ஆகியவைகளுக் குட்படாமல் அல்லாஹுத ஆலாவுக்கு மட்டும் உரித்தானவர்களாகி முஸ்லிம்கள் அல்லாஹுத ஆலாவின் உறவை மட்டும் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமல்லவா?

முஸ்லிம் அல்லாதார் உலகில் தங்களுக்கு அநேக எஜமானர்களையும் எண்ணிறந்த தேவதைகளையும் ஏற்படுத்திக் கொண்டனர்.

ஆனால் அவையாவும் முஸ்லிம்களின் தோற்றத்தில் உபயோக மற்ற வெறும் விக்கிரகங்களே யாகும். உலகத்தை அடக்கி ஆளத்தக்க சர்வ சக்தியும் வாய்ந்த நாயன் ஒருவனே முஸ்லிம்களின் எஜமானனுகும். இவ்வெஜமானன் எத்தகைய நல்ல எஜமானனுயும், ஆதரவளிப்பவனுயும் இருக்கிருனென்பதை ஞானமுள்ளவர்கள் அறியாமலில்லை. ஆகவே இவ்வொரே எஜமானனின் மீது பூரண நம்பிக்கை கொண்டவர்களாகி விடின் முழு உலகத்திலும் அஞ்சாதவர்களா யிருக்கலா மென்பது திண்ணம்.

நல்லனவற்றை யேவுவது உண்மையில் ஓர் உயர்தரமான "ஜிஹாதெபீஸபீல்லலாஹ்" வாகும். இஜ்ஜிஹாத் உலகமுடிவு நாள் வரை இடைவிடாமல் தொடர்ச்சியாய் நடைபெற்று வருமென்று அல்லாஹுதஆலா வாக்குறுதி செய்திருக்கின்ருன். அன்றியும் அநியாயம்; அசத்தியம் முதலிய துர்க்கிருத்தியங்களால் எத்தகைய இருள் சூழ்ந்த காலத்திலும் உண்மையை நிலை நிறுத்தும் வகுப்பொன்று முஸ்லிம்களுள் இருந்து வருமென பல உண்மையான ஹதீதுகளும் கூறுகின்றன. இவ்வகுப்பார் சதாபுரியும் சத்தியப் பிரசாரத்தின் மூலமாய் உலகில் "ஷரீஅத்து" ஜீவித்திருக்கும். இவ்வுத்தமர்களின் பிரசாரத்தை அல்லாஹுதஆலா காப்பாற்றி வருவானென்றும், இவர்கள் வழி கெட்டவர்களை அடக்கி ஜயம் பெறுகிறவர்களா யிருப்பார்களென்றும், இவ்வுத்தமர்களின் விரோதிகளான ஷைத்தான்களும், வழிகேடர்களும் இவ்வுத்தமர்களின் பிரசாரத்தைக் கெடுக்கமுடியாதென்றும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பகர்ந்துள்ளார்கள். ஆகவே மேற் கூறப்பட்டுள்ள ஜயம், தோல்வி முதலிய அடையாளங்களே உத்தமர்களைத் தெரிந்து கொள்வதற்கான சாதனங்களென்று கூறுவது மிகையாகாது.

ஷைத்தான்களின் சக்திகளுக்குட்படாது "அல்லாஹ்" அல்லாதவைகளின் சம்மந்தத்தை அறுத்துக்கொண்டு, அல்லாஹுதஆலாவை மட்டும் அடிபணிவதற்கான பானத்தை அருந்தினவர்கள் அல்லாஹுதஆலாவின் பிரீதிக்கு அருகதை யுள்ளவர்களாகி விடுகின்றனர். அல்லாஹுதஆலா இவ்வுத்தமர்களை தன் விசேஷ நன்கொடைக்குப் பாத்திர மானவர்களெனத் தீர்மானித்து விடுகின்ருன். இவ்வுத்தமர்களே அன்பியாக்களென்றும், சித்தீக்கீன்களென்றும், ஷுஹதாக்களென்றும், சாலிஹீன்களென்றும் அழைக்கப்படுவார்கள். அல்லாஹுதஆலாவை மட்டும் அடிபணிகிறவர்கள், அல்லாஹுதஆலாவை மட்டும் நேசிப்பவர்கள்,

அல்லாஹுதஆலாவை மட்டும் வணங்குகிறவர்கள், அல்லாஹுதஆலாவுக்குமட்டும் பயப்படுகிறவர்கள், அல்லாஹுதஆலாவுக்கு மட்டும் கட்டுப்பட்டவர்கள். அல்லாஹுதஆலாவின் உத்திரவைமட்டும் ஏற்றுக்கொள்ளுகிறவர்கள் என்னும் கீர்த்தியை அடைய விரும்புவோர் "அல்லாஹ்" அல்லாதவைகளை அலக்ஷியம் செய்பவர்களாயும், அருவருப்பவர்களாயும், "அல்லாஹ்" அல்லாதவைகளுக்குக் கட்டுப்படாதவர்களாயும், அஞ்சாதவர்களாயும், வணங்காதவர்களாயு மிருக்கக் கடமைப்பட்டுள்ளார்கள்.

நாலுபக்கங்களையும் விட்டுத் தன் முகத்தைத் திருப்பிக்கொண்டவனும் அல்லாஹுதஆலாவை முன் நோக்குகிறவனும், இன்னும் எவன் நற்காரியங்களைப் புரிகின்றானோ அவனும் அல்லாஹுதஆலாவை அடிபணிதலென்னும் கயிற்றை இறுகப் பிடித்துக் கொண்டானென்பது திண்ணம். (அல்குர்ஆனின் வியாக்கியானம்)

நல்லனவற்றையேவிக் கெடுதியை யகற்றுவதென்னும் ஊழியத்தைப் புரிந்து அதன் மூலமாய் "அல்லாஹுதஆலாவையும், அவனின் ரஸூலாகிய நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும் அடி பணிகிறவர்கள்" என்னும் வரிசையில் சேர்ந்துவிடுகிறவர்களை அல்லாஹுதஆலா தன் பிரீதிக்குரியவர்களாக்கிக் கொள்வதோடு இவர்களுக்குப் பற்பல ஜயத்தையும் அளிக்கின்றான்.

உண்மைசத்தியம் ஆகியவைகளை நிலைநிறுத்துவதற்காக "அல்லாஹ்" அல்லாதவைகளின் சம்மந்தத்தை அறுத்துக்கொண்டு, எவர் தங்கள் முழுபலத்தோடும் அல்லாஹுதஆலாவுககு ஈடாகி விடுகிறார்களோ அவர்களை ("என்னுடையஎவ்வடியவன் என்னை அடைவதற்கு ஒரு சாண் முற்படுகின்றானோ அவனை நான் ஒரு முழம் நெருங்குகின்றேன்" என்னும் திருமறையின்படி) அல்லாஹுதஆலா தனக்குடையவர்களாக்கிக் கொள்ளுகிறான்.

ஆகவே அவர்களின் ஒவ்வொரு காரியத்தையும் அல்லாஹுதஆலா தன் கீர்த்தியின் போர்வையால் போர்த்துவிடுகின்றான். ஆதலின் இவர்கள் புரியும் காரியம் இவர்களின் காரியமாக விராமல் சந்தேகமின்றி அல்லாஹுதஆலா புரியும் காரியமாகி விடுகின்றது. இவ்வேலையைப் பூர்த்தி செய்விக்கும் சக்தி, ஜீவன், தேகம் ஆகியவைகள் இவ்வுத்தமர்களுடையதாக விருப்பதில்லை. ஆனால் இதை நிறைவேற்றி வைப்பது அல்லாஹுதஆலாவின் பூரண சக்தி வாய்ந்த கரங்களாக விருக்கின்றன.

இவ்வுத்தமர்களின் தொண்டையிலிருந்து வெளியாகும் "சப்தம்," உண்மை, சத்தியம் ஆகியவைகளைக் கொண்டதாக இருப்பதால் இச்சப்தம் இவ்வுத்தமர்களின் சப்தமாக விருப்பதில்லை. ஆனால் அல்லாஹுதஆலாவின் அழியாத சப்தமே யாகும். இவ்வுத்தமர்கள் அல்லாஹுதஆலாவின் வழியில் போர் புரியும் "முஜாஹித்" களாக இருப்பதால் இவர்களை அல்லாஹுதஆலா தன்சைனியமாக்கிக் கொண்டு, ஜயத்தின் ஆயுதத்தை அளித்து இவர்களின் போரை நடத்தி வைக்கின்றான். இவ்வுத்தமர்கள் தோற்றத்தில் ஐசுவரியம், பலம் கீர்த்தி முதலியவைகள் அற்றவர்களாக விருப்பினும் இவர்களின் ஹிருதயம் அல்லாஹுதஆலாவின் ஒளி, சக்தி ஆகியவைகளின் இல்லமாக விருக்கும். இவ்வுத்தமர்களின் கரங்கள் உலோகத்தால் செய்யப்பட்ட யுத்தக்கருவிகளைக் கொண்டதாக விரா. ஆனால் இவர்களுடைய விரலின் சமிக்கையால் அல்லாஹுதஆலாவின் பேராயுதங்கள் எதிரிகளின் மத்தியில் போய்விழும். இவ்வுத்தமர்கள் சத்தியத்தின் போர்க்களத்தில் ஆதரவற்றவர்களாகத் தோன்றுவார்கள். ஆனால் இவர்களின் வலத்திலும் இடத்திலும் "முஸௌவிமீன்" என்னும் மலக்குகள் அணிவகுத்து நிற்பார்கள். அல்லாஹுதஆலா இவ்வுத்தமர்களின் அடக்கத்தை தன் பெருமையாலும், இவர்களின் ஏழ்மையை தன் கீர்த்தியாலும், இவர்களின் பலஹீனத்தை தன்பலத்தாலும், இவர்களின் ஆதரவற்ற நிலைமையை தன் பெரிய அரசாங்கத்தின் மூலமாயும் மாற்றிவிடுகிறான். ஆகவே இவ்வுத்தமர்கள் பேசவாரம்பித்தால் இவர்களின் வார்த்தையோடு சத்தியத்தின் தொனி இடிமுழக்கத்தைப்போல் இடிக்கவாரம்பிக்கின்றது. இவர்கள்பார்க்க வாரம்பித்தால் இவர்களின் கண்கள் அல்லாஹுதஆலாவின் பேரொளியால் ஜ்வலிக்க வாரம்பிக்கின்றன. இவ்வுத்தமர்களின் சப்தத்தால் ஷைத்தானுடைய சந்ததிகளின் ஆதரவைக்கொண்ட ஹிருதயங்கள் நடுக்கமுறுகின்றன. இவ்வுத்தமர்களின் முன் அசத்தியம் வழிகேடு முதலியவைகள் தலைத் தூக்க முடியாது. ஏனெனில் அல்லாஹுதஆலாவின் சக்தியைக் கொண்ட சப்தம், பார்வை ஆகியவைகளை அல்லாஹ் அல்லாதவைகள் எதிர்க்கமுடியாது.

இச்சந்தர்ப்பத்தில் இமாம் "புகாரீ" அவர்கள் வரைந்துள்ள "ஹதீது குத்ஸி"யை ஞாபகப்படுத்திக் கொள்வது பொருந்தும். அஃதுவருமாறு:—"எவ்வடியாரையேனும் நான் என் நேசனுக்கிக் கொண்ட பொழுது நான் அவனின் செவியாகி விடுகிறேன். (ஆகவே

அவன் என்செவியின் மூலமாய் செவியுறுகின்றான், நான் அவன் கண்ணாகி விடுகின்றேன். (ஆகவே) அவன் என் கண்ணைக் கொண்டு பார்க்கின்றான். நான் அவனின் கையாகிவிடுகின்றேன். (ஆகவே) அவன் என் கையைக்கொண்டு பிடிக்கின்றான். நான் அவனின் காலாகிவிடுகின்றேன். (ஆகவே) அவன் என் காலால் நடக்கின்றான். நான் அவனின் நாவாகி விடுகின்றேன். (ஆகவே) அவன் என் நாவைக்கொண்டு பேசுகின்றான். பிறகு அவன் கேட்பதைக் கொடுக்கின்றேன். அவன் ஆதரவு தேடும்போது அவனை நான் என் பாதுகாவலில் வைத்துக் கொள்ளுகின்றேன்.'' ....

இவ்வுத்தமர்களின் காரிய மடங்கலையும் அல்லாஹுத ஆலா தன்னுடையதாக்கிக் கொள்ளுகின்றான். ஆனது பற்றியே இவ்வுத்தமர்கள் தோற்றத்தில் எவ்வளவு கீழ்பட்டவர்களாயிருப்பினும் இவர்களின் காரிய மடங்கலும் கீர்த்தி வாய்ந்ததாக ஏற்பட்டு விடுகின்றது. இவர்கள் உலகில் எப்பொழுதும் தோல்வி, இபலாமை ஆகியவைகளின் மூலமாய் இழிவுக்காளாக மாட்டார்கள்.

'' நாம் எவ்வடியார்களை உலகில் ஜனங்களுக்கு நேர் வழியைக் காட்டுவதற்காக அனுப்பி வைத்தோமோ அவர்களைப்பற்றி நாம் முன்னமேயே கூறி விட்டோம். அஃதாவது:—நம் உதவியின் மூலமாய் அவ்வடியார்களே சந்தேகமின்றி ஜயசீலராவார்கள். நம் சைனியங்களே எல்லோரையும் மிகைத்துக்கொள்ளுமென்பது திண்ணம்.'' (அல்குர்ஆனின் வியாக்கியானம்).

இவ்வுத்தமர்களுடையும் ஜயம், இவர்களின் பிரசாரம் ஆகியவைகளுக்குக் காரணமாயுள்ள அல்லாஹுத ஆலாவின் உதவியானது பெரும் ஆச்சரியத்தை அளிப்பதாக விருக்கின்றது. உண்மை, சத்தியம் ஆகியவைகளின் சப்தம் உலகில் எக்காலத்திலும், கிரீடம், சிம்மாசனம், கோட்டை, மாளிகை ஆகியவைகளிலிருந்து புறப்பட்டதே இல்லை. ஆனால் பாலைவனம், காடு, குடிசை, மலை, குன்று, குகை ஆகியவைகளிலிருந்தே சதா புறப்படுகின்றது. ஆதரவு, பலம், ஐசுவரியம் முதலியவைகளில்லாத ஸ்திதியையே அல்லாஹுத ஆலா எப்பொழுதும் நேசிக்கின்றான். இதுவும் சொல்லொணாத ஆச்சரியமே. உடைந்து தகர்ந்து போனதும், புண்பட்டிருப்பதுமான ஹிருதயங்களையே அல்லாஹுத ஆலா தன்னில்லமாக்கிக் கொள்ளுகின்றான். முள், கல் முதலியவைகளால் நிரம்பிக் கிடக்கும் தொண்டையின் வழியாகவே அல்லாஹுதஆலா தன் சப்தத்தை வெளியிடுகின்றான்.

கழுத்துகளறுபட்டும், இரத்தம் ஓடிக்கொண்டும், பிணங்கள் துடித்துக்கொண்டும் இருப்பதன் மத்தியிலேயே அல்லாஹு—த ஆலா தன் ஒளியைப் பிரகாசிக்கும்படிச் செய்கின்ருன். இருளடர்ந்த குகைகள், இடிந்துபோன சுவர்கள், கிழிந்த பாய்கள் ஆகியவை களேயே அல்லாஹு—த ஆலாவின் பிரகாசம் நேசிக்கின்றது. கிழிந்த அங்கிக்குள்ளிருந்து வெளியான எளியவர்களின் கரங்கள் அரசர் களின் சிம்மாசனத்தைப் புரட்டியதைப்பார்த்து ஆச்சரியப்படாம லிருக்க முடியுமா? பெரும் சக்தியைப் படைத் திருப்பவர்களுக்கு கட்டுப் பட்டிருந்த கோடிக் கணக்கானவர்களே சில பலமில்லாதவர் களின் மூலமாய் தன்னே வணங்கும் படிச் செய்யும் சக்தி அல்லா ஹு—த ஆலாவுக்கே உரித்தானது.

ஈமான் உள்ளவர்க்குப் பலமுமுண்டு.

(299-வது பக்கத்தொடர்)

(இமாமுல் ஹிந்து மௌலானு அபுல்கலாம் ஆஜாத் அவர்கள் எழுதியது.)

" உலக வாழ்க்கையின் ஏமாற்றத்திற் குட்பட்டு, தம் வேதத் தை வீணுனதாயும், விளையாட்டிற் குரியதாயு மாக்கி கூலி கொடுக் கும் இந்நாள் வருமென்பதை மறந்திருந்தவர்களே அவர்கள் மறந் திருந்தது போலவே இன்று நாமும் மறந்து விடுவோம். அவர் கள் நம் ஆயத்துகளே மறுக்காதவர்களாக யிருந்திருப்பினும் சரியே." (அல் குர் ஆனின் வியாக்கியானம்,)

" தங்களின் கரங்களாலேயே தங்களே கேட்டில் போட்டுக் கொள்ள வேண்டா மென்று " முஸ்லிம்கள் எச்சரிக்கப் பட்டிருப்ப தாய் வியாக்கியானம் செய்யப்படும் ஆயத்து " பகரா " வென்னும் சூராவில் வருகிறது. அஃது வருமாறு:—

" அல்லாஹு—த ஆலாவின் வழிபாட்டில் செலவு செய்யுங்கள், உங்கள் கரங்களால் உங்களேக் கேட்டில் போட்டுக் கொள்ளாதீர்கள். இன்னும் நன்றி புரியுங்கள். நன்றி புரிகிறவர்களே சந்தேகமின்றி அல்லாஹு—த ஆலா தன் நேசர்களாக்கிக் கொள்ளுகின்ருன்." (அல் குர்ஆனின் வியாக்கியானம்).

"அல்லாஹ்" உடைய வழிபாட்டில் செலவு செய்யுங்கள். எந்நிலைமையிலும் "ஜிஹாத்" தடைபட விடாதீர்கள். ஏனெனின்? ஜிஹாதை விடுவதால் தங்களைத் தாங்களே கேட்டில் போட்டுக்கொள்வதாகும்." என்று செய்யப்படும் வியாக்கியானத்தை ஆதரித்து "திர்மதீ ஷரீபில்" ஓர் உண்மையான ஹதீது வரையப்பட்டிருக்கிறது. அஃது வருமாறு:—

"அஸ்லம் பின் அபீ இம்ரான் ரலியல்லாஹு அன்ஹு" அவர்கள் கூறியதாவது, "ரோம் தேசத்தின் பிரதான நகரத்தில் (கான்ஸ்டாண்டி நோபிளில்) நாங்கள் குப்பார்களோடு ஜிஹாத் செய்து கொண்டிருந்தோம். எங்களிடம் போர் புரிவதற்காக ரோமாக்காரர்கள் ஒரு பெரிய சைனியத்தை யனுப்பினார்கள். முஸ்லிம் படையிலிருந்து ஒருவர் புறப்பட்டு அச் சைனியத்தை எதிர்த்து போர் புரிந்து கொண்டே சைனியத்துள் சென்று விட்டார். இதைக் கண்ட ஜனங்கள் (முஸ்லிம்கள்) "சுப்ஹானல்லாஹ், இவர் தம் கரங்களால் தம்மைக் கேட்டில் போட்டுக் கொள்ளுகிறார்" என்று கூவினார்கள். அப்பொழுது "அபூஐயூப் அன்சாரீ" ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் எழுந்து "ஜனங்களே! இஸ்லாமுக்குப் பெரும் செல்வாக்கேற்பட்டு, இஸ்லாமுக்கு எண்ணிறந்த உதவிக்காரர்கள் தோன்றியபின்னர், நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குத்தெரியாமல் இரகசியமாய் சிலர் "இஸ்லாமுக்கு உதவி செய்வதையொட்டி நாம் செலவு செய்து கொண்டேயிருந்ததால் நம் ஐசுவரியம் குன்றிப் போயிற்று. இன்று இஸ்லாமுக்கு செல்வாக்குண்டாகி இதற்காதரவு புரிய பலர் முன் வந்து விட்ட இந்நாளில், குன்றிப்போன நம் ஐசுவரியத்தை மீண்டும் சீர்படுத்துவதற்காக ஏதேனும் வழியைக் கண்டு பிடித்தால் உத்தமமாகும்" என்று யோசித்திருந்தவேளையில் அன்சாரிகளாகிய எங்களுக்கு விடைபகரும் பொருட்டு "அல்லாஹுத ஆலாவின் வழிபாட்டில் செலவு செய்யுங்கள். உங்கள் கரங்களால் உங்களைக் கேட்டில் போட்டுக் கொள்ளாதீர்கள்" என்று அல்லாஹுத ஆலா தன் நபி யாகிய நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது இறக்கி வைத்த ஆயத்திற்கா நீங்கள் இவ்வாறு தாவீல் செய்கின்றீர்கள்? ஜிஹாதை விடுவதும், பொருளை சேகரிக்கும் பொருட்டு பற்பல ஏற்பாடுகளைச் செய்வதுமே "கேடு" என்பதற்கு பொருளாகும் என்று அறிவித்து விட்டுப் பிறகு அபூஐயூப் அன்சாரீ (ரலியல்லாஹு அன்ஹு)

அவர்கள் ஓயாது ஜிஹாத் செய்து கொண்டேயிருந்து கடைசியாய் ஹஜ்ரத் அவர்கள் ரோம் தேசத்திலேயே அடக்கமானார்கள்.'' ''திர்மதீ''

''தங்கள் கரங்களால் தங்களைக் கேட்டில் போட்டுக்கொள்ளாதீர்கள்'' என்பது ளிருக்கும் அழிவு அல்லது ''ஹலாக்'' என்பதற்கு ''நம்பிக்கை இழத்தல்'' என்றும் பொருள் செய்யப்பட்டிருக்கிறது. இப்பொருளை யாதரித்து பன்னிரண்டு ஹதீதுகள் வருகின்றன. இப்பனிரண்டு ஹதீதுகளுள் முக்கியமான ஹதீது:—

''பாவத்தைச்செய்து விட்டுப் பிறகுதனக்கு மன்னிப்பு இல்லையென்றும்: இப்பாவம் காரணமாய் தான் நாச முற்று விட்டதாயும் கருதி நம்பிக்கை இழப்பதைத் தடுப்பதே ''தங்கள் கரங்களால் தங்களைக்கேட்டில் போட்டுக்கொள்ள வேண்டாம்'' என்னும் திருமறையின் வியாக்கியான மென்று ''பராபின் ஆசிப்'' ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ரிவாயத்து செய்திருக்கிறார்கள்.

ஜய மெய்துவோ மென்னும் நம்பிக்கை யில்லாதபோது எதிரிகளோடு ஜிஹாத்செய்ய முற்படுவது ''தங்களைத் தாங்களே கேட்டில் போட்டுக் கொள்வதாகும்'' என்று ஒரு ரிவாயத்து இருக்கின்றது. ஆனால் மற்ற ரிவாயத்துகள் யாவும் இந்த ரிவாயத்தைக் கடுமையாய் எதிர்த்து வருகின்றன.

அல்லாஹுத ஆலாவின் வழிபாட்டில் செலவு செய்யாமல் ஒதுங்கிக் கொள்வதே தங்கள் கரங்களால் தங்களைக் கேட்டில் போட்டுக் கொள்வதாகு மென்பதை ஆதரித்து 25 ஹதீதுகள் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கின்றன. ஹஜ்ரத் அப்துல்லா ஹிப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்கள் ரிவாயத்து செய்திருக்கும் ஒருஹதீது இவ்விருபத்தைந்து ஹதீதுகளுள் மிக சிரேஷ்டமானதாக யிருக்கின்றது. அது வருமாறு:—

''அல்லாதஹு ஆலாவின் வழிபாட்டில் ஈடுபட்டு வெட்டுண்டு போவது அழிவல்ல ஆனால் அல்லாஹுத ஆலாவின் வழிபாட்டில் செலவுசெய்யாமல் ஒதுங்கிக்கொள்வதே அழிவும், நாசமுமாகும்.''

''தங்களைத் தாங்களே கேட்டில் போட்டுக் கொள்ளாதீர்கள்'' என்னும் திருமறையின் வியாக்கியானங்களுள் இக்கடைசீ வியாக்கியானமே மிகச் சிறந்ததென ''இப்னு ஜரீர்'' வரைந்துள்ளார்கள். அஃதாவது ''தங்களைத் தாங்களே கேட்டில் போட்டுக் கொள்ளாதீர்கள்'' என்னும் திருமறையை யொட்டிய வியாக்கியானங்களுள் அல்லாஹுத ஆலா தன் வழிபாட்டில் செலவு செய்யும்படி கட்டளை

யிட்டிருக்கிருன் என்னும் வியாக்கியானமே என்னிடத்தில் சிறந்த தாகும். ....

அல்லாஹு-த ஆலாவின் பேரில் குப்ரான எண்ணத்தை உங்க ளுள் உண்டுபண்ணும் எதிரிகளோடு (இஸ்லாம் ஆதிக்க முற்ற தாவ தற்கு) ஜிஹாத்செய்யுங்கள் என்று அல்லாஹு-த ஆலா உத்திரவிட்டு மேலும் "தங்களைத் தாங்களே கேட்டில் போட்டுக் கொள்ளாதீர் கள்" என்று உச்சரிக்கின்ருன்.

எவன் அடிபணிந்து தன் காரியங்களைப் பிறரிடத்தில் ஒப்புவித்து விடுகிருனே அவனை யொட்டி "அவன் இன் னுனிடத்தில தன் கையைக் கொடுத்து விட்டான்" என்றும் பிறர் தம்மிஷ்டம்போல் வேண்டியவைகளைச் செய்து கொள்ள சந்தர்ப்ப மளிப்போரை "அவன் தானுகவே தன்கையைக் கொடுத்துவிட்டான்," என்றும் அரேபியர் சொல்வதுண்டு.

ஆதலின் இவ்வுதாரணங்களை நோக்கும்போது "தங்கள் கரங்க ளாலேயே கெடுதியில் சிக்குண்டு போகாதீர்கள்" என்பதையொட்டி "கேட்டிற்குமுன் தலைவணங்கி விடாதீர்கள். தங்கள் அதிகாரத்தை பிறரிடம் ஒப்புவித்து விடாதீர்கள். இன்றேல் நீங்கள் அழிந்து போவீர்கள்" என்று விரித்துரை கூறவேண்டியதாக விருக்கின் றது.

அல்லாஹு-த ஆலாவின் வழிபாட்டில் செலவுசெய்யக் கடமை பட்டிருப்போர், தங்கள் கடமையைச் செய்யாதிருந்து விடுவார்களா யின் அவர்கள் உண்மையில் இக்ககடமையை மறுத்து பெரும் கேட் டிற்குத் தலைவணங்கி விட்டார்களென்றே கூறவேண்டும்." (தப் ஸீர் இப்னுஜரீர் 2 வது வால்யூம் 115 வதுபக்கம்.) (தொடரும்)

ஜவாஹிருல் புர்கானின் ஆராய்ச்சி.

சென்னை தாருல் இஸ்லாம் பத்திரிகாசிரியரான ஜனுப். பா. தா வூத்ஷா ஸாஹிபுவால் தமிழில் மொழி பெயர்த்து இத்தென்னுடுகளில் உலவி வரும் ஜவாஹிருல் புர்கான் முதல் வெளியீடு 1-வது பக்கம், (1) சூரா (3)-வது ஆயத்தின் சங்க்ரஹம் "மாலிகி" என்னும் பத வுரையில் ஆண்டவனுக்கும் அடியானுக்கு முள்ள தொடர்பானது உடையவன் உடமைக் கிடையிலுள்ள சொந்தத் தொடர்பைப் போலி ருப்பதால் அவனுடைய நீதியில் மன்னிக்கும் தன்மையும் மிகுதம்

கலந்திருக்குமென்று பொருள் படுத்தி அதன் பொது விளக்கம் 17ம் பக்கத்தில் " மாலிகி " எனும் வியாக்கியானத்தில் "மலிகி—மாலிகி" என்றஇருப்பதும் ஒரே தாதுவிலிருந்து பிறந்ததென்றும் "மலிகி" அரசனையும் அலிபு அதிகப்பட்டதனால் "மாலிகி" எஜமானனையும் குறிக்குமென்றும், "மலிகி" னும் அதிக மேன்மைப் பட்டவன் "மாலிகி" என்றும் (யவ்மித்தீன்) எனுங் காலத்தில் நாயன் "மலிகா" இல்லாமல் "மாலிகா" இருக்கிறான் என்றும், "மலிக்" கை உபயோகப் படுத்தாமல் "மாலிக்" கையே உபயோகப் படுத்தியிருக்கிற தென்றும் விரிவாய் வியாக்கியானம் செய்திருக்கிறார்.

வேத வியாக்கியானிகளின் ஏனைய தப்ஸீர்களுக்கும் இதற்கும் அநேக பொருள் திரிபு பட்டிருப்பதைக் கண்ணுற்றும் அறிவாளிகள் அதி துரிதமாய் தங்கள் மதக் கோட்பாட்டைக் கவனித்து தக்க ஆதாரத்துடன் சுன்னத்து ஜமா அத்துக் கொள்கையின் முன்னூலைக் கொண்டு சரியான மொழி பெயர்ப்பை வெளிப்படுத்தும் படி எச்சரித்தல் அத்தியா வசியமாகும்.

(1)-வது ("மலிகி") என்பதும் "மாலிகி" என்பதும் ஒரே தாது விலிருந்து பிறந்த இரண்டு தனித்தனி பதங்களாகும் என்று (ஜவாஹிர்).

மறுப்பு.

"மலிகி" என்னும் பதம் "முல்கு" எனும் தாதுவில் "லிமனில் முல்குல் யவ்ம" எனும் பதத்தை யனுசரித்தும், "மாலிகி" என்னும் பதம் "மில்கு" எனும் தாதுவில் "யவ்ம லாதம்லிகு" என்ற பதத்தை யனுசரித்தும் அவ்விரு பதங்களும் இவ்வுபய தாதுக்களினின்றும் பிறந்தன (தப்ஸீர்ஜமல்)

இதற்குப் பொருத்தமாக "மலிகி—மாலிகி" எனும் இரண்டு பதங்களும், தனித்தனியே இரண்டு மூலத்தினின்று பிறந்திருப்பதில் அபிப்பிராய பேதமில்லையென (தப்ஸீர் இபுனுஜரீரி) யிற் கூறியுளது.

2-வது "மலிகி" என்பது ஆளக் கூடிய அரசனையும், "மாலிகி" என்பது சொந்தக்காரனாகி யஜமானனையும் குறிக்குமென்றும், "மலிக்" என்னும் பதம் "மாலிக்" காய் மாறியவுடன் அதன் பொருளும் இப்படி அர்த்த புஷ்டியை அடைந்து விடுகிறதென்றும் (ஜவாஹிர்).

மறுப்பு

"மலிகி" எனும் பதத்தில் ஒரு அலிபு அதிகப்பட்டு "மாலிக்" காக மாறவில்லை. "மலிகி" யின் தாதுவாகிய "முல்கை" யொட்டிய

தன் பொருளும், "மாலிகி"யின் தாது வாகிய "மில்கை" யொட்டிய தன் பொருளுமேவிசேஷித்தது.......................அவரின் சொற்படி "மாலிக்" கென்னும் பதத்தில் ஓர் அக்ஷரம் சேர்ந்ததனால் அரசன் என்ற சொல் சக்ரவர்த்தி யென்று விசேஷிக்குமே யல்லாது அரசன் என்ற தாதுவினால் எஜமான னென்று பொருள்பட மூல பதம் சிதை படத்திரிபுற்று நிற்காது.

3-வது "மலிகி" அல்லது அரசன் ஏதோ சில வஸ்துக்களின் மீது ஒருவரை துறையான அதிகாரத்தை மட்டுமே செலுத்தல் முடியும். ஆனால் "மாலிக்" காகிய எஜமானனுக்கு தன்னுடைய உடைமையின் மீது சர்வாதிகாரமு முண்டு. ஆதலின் "மலிகி" னும் அதிக மேம்பட்டவன் "மாலிகி" என்று (ஜவாஹிர்)

மறுப்பு

"மலிகி" என்னும் அரசன் தலைமைத்தனம் தகுதி சிறப்புகளைக் கொண்டு உயர்த்தியாக விருப்பதோடுங் கூட பல எஜமானன்களையும்அடக்கியாளும் அதிகாரத்தினால் மேம் பட்டிருக்கிறான்.

"மாலிகி" எனும் எஜமானன் தன்னுடைய (சராசர) அடிமை, யானை, குதிரை, மண், பொன் முதலிய வஸ்துக்களைத் தொட்டும் மன்னிக்கவும், விற்கவும், தானம் செய்யவும் சுதந்திரனாயிருப்பது கொண்டு மேம்பட்டிருக்கிறான். இப்படி அந்தந்த மூல பதத்தை யொத்து இன்னமு மனேக விசேஷப்படலாம். "மலிகி"ன் பொருளை விட "மாலிகி" யின் பொருள் விசேஷ மென்று சொல்வதெல்லாம் மனித கோடிகளின் விஷயத்திலேயே யன்றி சர்வ சக்தித்துவமுள்ள நாயனில் கூறப்படாது (தப்ஸீர் றாஹுல்பயான்).

4-வது "எவ் மித்தீன்" எனுங் காலத்திற்கு ஆண்டவன் "மலிக்" காயில்லாமல் "மாலிக்" காக இருக்கின்றான். ஆகவே அப்பொழுது "மாலிக்" கேசர்வாதி காரத்துடன் தன் தயாளத்துவத்தைக் காட்டுவான் என்று (ஜவாஹிர்)

மறுப்பு

பரிசுத்த குர் ஆனிலேயே இருலோகத்திற்கும் அவனே "மலிக்" காயும் "மாலிக்" காயு மிருக்கிறான் என்பதைப் பற்றி கூறப்பட்டிருக்கிறது.

இகபரத்தின் அரசையுடையவன் தூய்மையாகி விட்டான். குர் ஆன் 67-2.

இதில் "மலிக்"கை வெளிப்படுத்தியும் இகபரத்தின் (றப்பு) (குர் ஆன். 1. 2.)

இவ் வாக்கியத்தில் "மாலிக்"கை வெளிப்படுத்தியு மிருக்கிறான். றப்பு என்ற பதம் "மாலிக்"கின் பொருளை யுடையது. மேலும் இகபரத்திற்கும் அரசன் எஜமானன் என்ற பதங்களைத் தனித் தனியாகவும் வெளிப் படுத்தி யிருக்கிறான்.

நியாய விசாரணையின் காலத்தில் நீதத்தின் அரசு றஹ்மானுக்கே. (குர் ஆன் 25-27)

என்று அரசனையும் ஒரு வஸ்துவையும் ஒருவன் மற்றொருவனுக் குடைந்தையாகாத காலத்தில் (குர் ஆன் 82-20)

என்று எஜமானனையும் குறிக்கின்றது. இஃது ஆகிரத்துடைய நாளைக்குறித்தது போல் துன்யாவுடைய நாளையுங் குறித்து "மலிக்கின்னாஸ்" மனிதர்களின் அரசன் என்று "றப்பின்னாஸ்" மனிதர்களின் எஜமானன் என்று தனித்தனிப் பதங்களிலும் வருகிறது.

இன்னமும் பரலோகத்தில் நீதம் நடத்தி சன்மானம் தண்டனையளிப்பதைப் பற்றியும் நீதத்தின் தராசுகளை கியாமத்து நாளைக்காக வைத்திருப்பதாயும் (குர்ஆன் 21-48.)

உம் (நபி) யுடைய நாயன் அடிமைகளை அநீதி செய்கிறவனல்ல. (குர்ஆன் 41-46)

அரச நீதியை விளக்கிக் காட்டியிருக்கிறான். அதாவது "மலிக்" காயிருக்கிறான் அதேபோல் உங்கள் பாவங்களை மன்னித்து சுவர்க்கத்தில் புகுத்துவான். (குர்ஆன் 61-13.) என்று மன்னிக்குந்தயாளத்தை விளக்கிக் காட்டுகிறான். அதாவது "மாலிக்" காயிருக்கிறான்.

நிச்சயமாக "அல்லாஹ்" தன்னை இணைவைப்பதை மன்னிக்கமாட்டான். அஃதல்லாததை நாடியவர்கட்கு மன்னிப்பான். (குர் ஆன் 4-45)

இதில் இணைவைப்பதை மன்னிக்கமாட்டானென்பதில் அரசனின் நீதியையும் அஃதல்லாத்ததை நாடியவர்கட்கு மன்னிப்பான் என்பதில் எஜமானனின் தயாளத்தையும் விளக்கி இருக்கிறான்.

அல்லாஹுதஆலா இங்கே "மலிக்"காயும் அங்கே "மாலிக்"காயும் இருக்கிறான் என்றாவது "மலிக்"காயிருக்கும்போது, "மாலிக்"காயில்லை யென்றாவது கிடையாது. அரசன் எஜமானன் என்ற பதம் அவனை விட்டும் எப்போதும் நீங்க மாட்டாதென தப்ஸீர் கபீரில் வரையப்பட்டிருக்கிறது இதற்கு குர்ஆனும் சாட்சி கூறுகின்றது.

உதாரணமாக:—"மாலிக்"காக ஆயிருப்பது கொண்டு பாத்திய மாக்கப் பட்ட அரசன் உயர்த்தியாகி விட்டான். (தப்ஸீர் றூஹுல்ம ஆனி)

5-வது அல்லாஹுத ஆலாவானவன் தன்னுடை நியாயவிசாரணை யில் அடியார்கள் செய்திருந்த பாவத்தை மன்னித்து விடுவாஞயின் அதனுல் அவன் மீது நியாயபங்கம் செய்தான் என்னும் பழிசுமத்தப் படாமலிக்கும் பொருட்டே அரசன் என்று பொருள் படுகிற "மலிகி" என்னும பதம் உபயோகிக்கப்படாமல் சொந்தக்காரனுகிய எஜமான னென்று பொருள் படுகிற "மாலிகி" எனும் பதமே உபயோகிக்கப் பட்டிருக்கிறது. (ஜவாஹிர்)

மறுப்பு

அல்லாஹுத ஆலாயிருபதியிலும் அரசன் எஜமானன் எனும் நீத தயாளத்தை யுடையவன் என்ற சொல்லை நாமெல்லோர்களும் நன்கு அறியவே இந்த (பாத்திஹா) சூராவின் 3-வது ஆயத்தின் முதற் சொல்லை "மலிகி—மாலிகி" என்று சர்வக்கியான முள்ள எம்பெரு மான் முகம்மது நபி (ஸல்) அவர்களும் அவர்களின் உண்மைத் தோழர்களான அபூபக்கர் சித்தீக்கு உமருல் பாரூக் (றலி) அவர்க ளும் திருவாய் திறந்தோதியுள்ளார்கள் (தப்ஸீர்ஜமல்).

குர் ஆனை ஓதும் வகைகளைத் தெரிந்த எழுகாரிகளில் 2 பேர் கள் "மாலிகி" என்றும், மற்ற 5 பேர்கள் "மலிகி" என்றும் ஓதி யிருக்கிறூர்கள். (முகர்றற்)

இன்னும் "ஷாரிஹ்" "ஜஸ்ரி" இருவர்களும் தொழுகையின் 2 ரக் அத்களிலும் "மலிகி" "மாலிகி" என்ற இருபதங்களையும் முறையே உபயோகித் திருக்கிறூர்கள். (முகீதுத் துலபா)

பேரறிவுபடைத்த பெரும்பாலோர் "மலிகி" என்னும் பதத்தை யே உபயோகித் திருப்பதாய் "இப்ரீஸ்"என்னும் கிதாபில் வருகிறது.

குர்ஆனை வலுப்பமாகவும் வலுப்பமாக்கப் பட்டதாகவும், ஓதுங் கள், என்றுபிறந்த (ஹதீது) நபிதிருமொழியைத் தொடர்ந்து"மலிகி" என்னும் பதத்தை மிகுதமாக ஒரு சாரராகும்.

குர் ஆனில் ஒரு அக்ஷரத்தை ஓதினுல் 10 நன்மைகள் கொடுத்து 10 தீமைகளை யழித்து 10 தரஜாவை உயர்த்தப்படும், என்ற (ஹதீது) நபிதிருமொழியைத் தொடர்ந்து"மாலிகி"என்னும் பதத்தை மிகுதமாக ஒருசாராரும் உபயோகித் திருக்கிறூர்கள்.

மேலும் பரிசுத்த குர்ஆனை யோதும் பிரிவு 3 உண்டும் அந்த மூன்றுபிரிவில் "மலிகி, மாலிகி" என்ற வாக்கியங்கள் முந்தின

பிரிவிலுள்ளது. அதன்படி ஓதுவதை நிராகரிப்பவன், காபிர் மாறு பட்டவன் என்று கூறுகின்றது. (தப்ஸீர் இத்கான்)

இத்தியாதி யாதார காரணங்களைக் கொண்டு தொன்று தொட்டு இன்றுவரையிலுள்ள இஸ்லாம் உலகு மணம் நாவு எழுதுகோல் களி லும் "மலிகி—மாலிகி" என்றபதங்களை உபயோகித்து வருகிறார் கள்.

ஆகவே இவ்வாதாரங்களைக் கொண்டு மேற் கூறப்பட்ட ஐந்து ஐட்டங்களும் தவறென ஸ்பஷ்டமாய் விளங்கப்பட்டது.

நஹ்வி செய்யிது அஹ்மது லெப்பை. (அல்ஹிதாயா)

பொருளுடையோர் மீதேன் பொறுமை?

நமதில் வாழ்க்கை இன்பமாய் நடைபெறுவதற்கும் பரத்தில் புனிதனென்று பெயரெடுப்பதற்கும் பொருளே பிரதான மென்பதை யும் அஃதுடையோர் பலதுறைகளில் சிறந்தோரென்பதையும் புத்தி மான்கள் எவரும் ஒப்பாமலிரார்கள்...

ஆனால் பணத்தையே தெய்வமாய்ப் பூஜிக்கும் பேய்களையும், ஏழைகளைக் கண்டால் எரிந்து விழும் ஆஞ்சநேயர்களையும் பணத்திமி ரினால் தன்னையே தெய்வமாய்க் கண்ட மூசா (அலை)வின் பகைவனை பிர் அவ்னின் புத்தி படைத்த பதருகளையும், செல்வச் செருக்கால் அல்லாஹ்வின் ஆக்ஞையை ஏர்க்க மறுத்த காரூனின் குணங்கொண்ட கசவஞ்சிகளையும் யான்புகழ்ந்து கூறத்துணியவில்லை. மேலும்அன்னோ ரின் ஆஸ்திகள் அழிந்தாலன்றி அகமடங்கி அல்லாஹ்வுக்கு வழி பாடு செய்யார்கள் என்பதும் உண்மையே. சங்கை பொருந்திய நம து வேதவாக்கியத்திலும் நாயகவாக்கியத்திலும், ஒரு சில இடத்தில் பணத்தைப்பற்றி இகழ்ந்து கூறப்பட்டிருப்பதன் தாத்பரியமும் அன் னவரைப்போல் அகங்காரங்கொள்ளும் முஸ்லிம்களின் மமதையை யகற்றல் வேண்டியே என்பதை அறிவுடையோர் அறிதல் வேண்டும். எனவே அஃதின்றி இங்கு குறிப்பிடுவதெல்லாம் ஏழைகளைக்கண்டு இரக்கங் கொள்வோரையும் பசித்து வந்தோரை பக்ஷத்தோடு போ ஷிப்போரையும் அண்டினோரை அன்போடு ஆதரிப்போரையும் இன் னும் நம் நபிகள் காலத்தில் கீர்த்தியுடன் காலங்கழித்த அப்துர் ரஹ்மானிப்ன அவ்ப்(றலி) போன்ற எத்தனையோ நாயக நேயர்களின் உத்தம குணங்களை உடைத்தான உச்சிதர்களைப்பற்றிதான் என்பதை

நேயர்களறிதல் வேண்டும். நண்பீர் பொருளுடையோரைக் கொண்டே எண்ணடங்கா ஏழைக்குடிகள் பறணியம் பெற்று வயிறு வளர்க்கவும் யாசகம் வாங்கி ஜீவனம் செய்யவும் ஏது வாகின்றது. மேலும் அவர்களின் சகாயத்தினாலேயே எத்தனையோ பொதுஸ்தாபனங்களும் கலாசாலைகளும் கல்விக் கட்டடங்களும் கட்டப்பட்டிருப்பதை கண்ணால்காண்கிறோம். பெரும்பாலும் சீமான்களின் சந்ததிகளே கல்விக் களஞ்சியமாகின்றனர். தன் ஆயுளில் பெரும் பகுதியை இதர கவலைகளொன்றுமில்லாமல் கடவுள் பக்தியிலேயே தொண்டு வணக்கம் புரிய தனவந்தர்களுக்கே சாத்திய மாகின்றது. அவர்கள் எவ்வளவு உயரமான கோவர உச்ச வாசஞ் செய்தாலும் கடவுள் வரம்பைக் கடவார்கள். மேலும் அல்லாஹ் வுக்கு மிகப்பிரியமும், தன் குணமுமான தர்ம குடையை தாராளமாய்க் கொடுத்து ஆண்டவனின் அளவு கடந்த அன்புக்கு ஆளாகின்றனர்.

நிற்க பாமரர்களை ஏமாற்றி பணம் பரிப்பதைமட்டிலும் பிரதானமாய்க்கொண்டு மார்க்க பிரசாரகர்களென்ற வெளி வேடத்துடன் நீண்ட அங்கியும் பருத்த பாகையும் பளுவான போர்வையும் போர்த்திக்கொண்டு வயிற்றுப் பிழைப்புக்காக ஊரூராய் அலைந்து திரியும் ஒரு சிலபோலி ஆலிம்களன்றி உண்மையிலேயே முஸ்லிம்களின் முன்னேற்றத்தை முழுநோக்கமாய்க் கொண்டு நம் நபிகள் உம்மத்துக்கள் ஒருவரும் நரகத்திற்காளாகக் கூடாதென்ற நல்ல எண்ணத்துடன் காசைக்கிஞ்சிற்றும் பொருட்படுத்தாது பலதுறைகளிலும் பாடுபட்டு தன் ஆயுள் முழுதையும் பிரசாரத்துக்கே தியாகம் செய்யும் (அன்பியாக்களின் அனந்தரர்களான) ஆலிம்களின் குடும்பங்களும் வைதீகத்துடன் லௌகிக விஷயத்திலும் முஸ்லிம்கள் முற்படியிலிருக்க வேண்டும் என்ற மேலான நோக்கத்துடன் அரும்பாடுபடும் பத்திரிகாசிரோன் மணிகளும், முஸ்லிம்களுக்கு மகாமுக்கியமும் தேவகட்டளையுமான மார்க்க கல்விகளை முஸ்லிம் பால் யாவருக்கும் புகட்டல் வேண்டி பாடுபடும் பள்ளியாசிரியர்களான மௌல்விகளும் சீமான்களின் சகாயத்தையன்றோ நாடிநிற்கின்றனர். இத்துணை சிறந்த செய்கையையுடைய தனவந்தர்களின் மீது நந்தமிழ்நாட்டு நண்பர்கள் எவ்வளவுதூரம் துவேஷம் பாராட்டுகிறார்கள் என்பதை நினைக்க நெஞ்சந் துடிக்கின்றது. தானுந் தனந்தேடுவதில்லை. தனவந்தர்களையும் தூஷியாமலிருப்பதில்லை யென்றால் இவர்களின் கபடத்தை கவணையிற் புரண்ட ஞமலிக்கன்றோ ஒப்புக்கூறவேண்டி யிருக்கின்றது. நமது பாரதகண்டம் பொருளாதர விஷயத்தில் ஏனைய புரதேசங்களை விட

வும் அதிபாதாளத்தில் ஆழ்ந்து கிடக்கும் இக்காலத்தில் எங்கேனும் ஒருபக்கத்தில் நூற்றிலொருவன் பணக்காரனாய் இருப்பதைப் பொருந்தாது ஏன் பொறாமைப் படுகின்றீர்கள்? தம்மைப்போல் எல்லோரும் தாழ்ந்த ஸ்திதியிலேயே யிருக்கவேண்டுமென்ற இழிவான நோக்கமிருந்தால் உங்களின் கூற்று வாலறுபட்ட நரியொன்று தமதினத் தனைவரையும் வாலைக் கூழையாக்கிக்கொள்ள வேண்டிக்கொண்ட உபகதைக் கொப்பாகின்றது. அஃதின்றி தாமும் தனவந்தனாக வேண்டுமென்னும் ஆயாச மிருந்தால் ஔவை அம்மை அருளியபடி "திரைகடலோடியும் திரவியம் தேடுவதைத் தடுக்கின்றோர் யார்? சந்நியாசியாய் மடத்திலுருளும் சோம்பேறிகட்கு மாடி வீடு கட்டுவதெங்ஙனம்? இருந்தால் நவாப் இல்லாவிட்டால் பகீர் என்னும் இழிவான பழமொழியொன்றை பாடமிட்டுக் கொண்டு கிஞ்சிற்றும் நாணமில்லாது' கைநீட்டி கேட்குந் தொழிலைக் கைக்கொள்கின்றனர். அதுவும் கொடுப்பவர் கிடைக்காவிட்டால் கன்னக்கோலை கை முதலாய்க் கொண்டு கொலைகளவு செய்யவும் துணிகின்றனர். அந்தோ! வறுமையின் கொடுமையை என்னவென் றெண்ணுகிறீர்கள்? இதனாலன்றோ (வறுமையானது குப்ரை செய்யவும் முடுகும்) என்னும் கருத்துக் கொண்ட ஹதீதை நமதுவள்ளல் (சல்) நவின்றுள்ளார்கள். ஏனைய முஸ்லிம்களும் கிஞ்சிற்றும் கிலேசமின்றி போதுமான திரவியம் பெற்று கடவுள் தொண்டு புரியவேண்டும் என்பதே எமது கோரிக்கை. இறைவனே உனக்கிணை கூறு உனதடிமைகளான ஏழை முஸ்லிம்கள் எங்களெல்லோருக்கும நிறைந்த செல்வத்தையும் நீண்ட ஆயுளையும். ஈன்றருள் வாயாக.

இங்ஙனம்

(மௌல்வி) இ. முகம்மது ஸாதுகமால்

நீடூர். நெய்வாசல்.

குறிப்பு:—தம் கடமையையுணரா போலி உலமாக்களை எச்சரித்து அறிவுறுத்தும் பொருட்டு சில உலமாக்கள் முன் வந்திருப்பது பாராட்டத்தக்கதே. ஆனல் பணத்தையே தெய்வமாய்ப் பூஜிக்கும் பேய், பிர்அவுன், காரூன் போன்ற பணக்காரர்களை சீர்திருத்துவதற்குப் போதிய தைரியமுள்ள பணக்காரர்களுமுண்டா?

காயல் பட்டணத்தில் உலமாக்களின் சபை.

உத்தம சீலர்களாகிய சகோதரர்களே !

நமது தாய் பூமியாகிய காயல் பட்டணத்தில் சென்ற சில வருடங்களுக்கு முன் மகா பெரும் நோக்கத்துடன் எத்துணையோ பொது ஜன சபைகளும், கல்விஸ்தாபனங்களும், சமூகத்தாரால் நிர்ணயிக்கப் பட்டும் மேற்கண்ட ஸ்தாபனங்களின் நோக்கங்களெல்லாம் நிறைவேருது ஊரார்களின் ஒற்றுமையின் மையால் அவை யாவும் க்ஷீணித்துப்போய் விட்டனவே யென்று வாட்ட முற்றிருக்கும் காலை 15-6-25ல் வெள்ளிக்கிழமை கொத்பா மகா சபையில் நம் சுத்த சத்திய சமரச சன் மார்க்கத்தின் உண்மைக் கொள்கைகளை சகல சமூகத்தாருக்கும் நன்கு புலனுகும்படி, துண்டு பிர சுரம், புத்த கரூபம், சஞ்சிகை மூலம் வெளிப்படுத்துவதற்காக சீரிய நோக்கத்துடன் ஒரு உலமா சபை "ஹிதாயத்துல் உலமா" என்று நாமகரணஞ்சூட்டப்பட்டு ஸ்தாபிக்கப் பட்டிருப்பதாக சுதேசமித்திரன் 4-7-25ல் பத்திரிகையின் 21-வது பக்கத்தின் இறுதியில் கண்ணுற்று ஆனந்த மடைந்தேன்.

மேற்கூறிய "ஹிதாயத்துல் உலமா" என்ற ஸ்தாபனம் நிர்மாணிக்கப் பட்டிருப்பின் அஃது முதன் முதலாக கவனிக்க வேண்டிய முக்கிய அம்சங்களைத் தெரிவிக்கின்றேன் :—

நம்மூர் சமூகத்தார்களை ஒற்றுமையுடனும், நற்காரியங்களிலீடுபட்டும் பரஸ்பர அன்புடனு மிருக்கும்படிச் செய்ய முயற்சி எடுக்க வேண்டும்.

எல்லோரும் ஒரே மனதாய் இஸ்லாத்தின் முக்கிய அம்ஸங்களில் ஒன்றுகிய ஏக சகோதரத்துவத்தைக் கைக்கொண்டு, நம் மார்க்கத்திலும் ஹதீதுகளிலும் கூறியுள்ள நேரான வழியைக் கடைபிடித்து ஒழுகவும், வீண் சடங்கு சாங்கியங்களை வேருடன் கெல்லி எறியவும் முயற்சிக்க வேண்டும்.

இறுதியாக சபையோர்களாகிய கனவான்கள் முக்கியமாய் தங்கள் கவனத்தைச் செலுத்தவேண்டிய காரிய மொன்று முன்னேக்கி நிற்கின்றது. அது தான் நம் சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் மார்க்கக் கல்வியும், தாய் பாஷையாகிய தமிழ்க் கல்வியும் போதித்தல். இவ்விரண்டுமே நம்மனோர்கள் முன்னேற்ற மடைவதற் குற்ற சாதனங்களாகும்.

இவ்வூர் வாசிகள் கனதனவான்கள் யாவரும் சகோதர வாஞ்சையுடனிருந்து ஏனைய முன் சபைகளைக் கவனியாது விட்டது போல் பராமுகமாயிராமல் தெய்வாதீனத்தாலேற்பட்ட "ஹிதாயத்துல் உலமா" என்னும் இச்சபைக்கும் சமூக முன்னேற்றத்துக்கும், மற்றைய நற்காரியங்களுக்கும் முக்கிய ஆணி வேராகிய கல்விக்கும் பக்க பல மாயிருந்து வரும்படியான நிதியை ஸ்தாபித்து நம்மவர்கள் முன்னேற்றம் அடையும் படி எல்லாம் வல்ல இரக்ஷகனாகிய அல்லாஹுத ஆலா கிருபை செய்தருள்வானாக. ஆமீன்.

மு. கா. முகம்மது ஸாலிஹ் மரைக்காயர், பம்பாய்.

கம்பளையில் நடந்த இலங்கை முஸ்லிம்களின் மகாசபை.

1925 வருடம் ஆகஸ்டு மாதம் 21ம் தேதி பிரசுரமான கம்பளைடவுன் முஸ்லிம் சங்கத்தாரின் விளம்பரப்படி செப்டம்பர் மாதம் 13ம் தேதி ஞாயிற்றுக்கிழமை பகல் 2-மணிக்கு கம்பளை கோர்ட்டுக்கு எதிரிலுள்ள மைதானத்தில் மகா நாடு கூடியது. இம் மகா சபைக்கு இலங்கையின் நாலு பக்கங்களினின்றும் சுமார் ஐயாயிரம் முஸ்லிம்களும் பல உலமாக்களும் விஜயம் செய்திருந்தனர். முஸ்லிமில்லாத கனவான்களும் மகாநாட்டைச் சுற்றிலும் வீற்றிருந்தனர். சபை மிக ஒழுங்காய், நடைபெற்றது.

கனம் ஏ. எஸ் அப்துல் கப்பார் சாஹிப் அவர்களால் "கிராஅத்" ஓதப்பட்டு சபை ஆரம்பமாயிற்று. உபசரணைக் கமிட்டியின் தலைவர் கனம் ம. செ. ஸையித் முஹம்மத் மரைக்காயர் அவர்கள் சபையோரை வரவேற்ற பிறகு, கனம் ஹானரபிள் எஸ். ஆர். முஹம்மத் சுல்தான் மரைக்காயர் அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். மகாமேன்மை வாய்ந்த ஜனாப் முஹம்மது சுலைமான் ஆலிம் சாஹிப் அவர்கள் ஜனங்கள் மனத்தில் பதியுமாறு ஹதீஸ், தவீல் ஆகியவைகளை ஆதாரமாகக் கொண்டு வெகு இனிமையாய் உபந்நியாசம் செய்தார்கள். பிறகு "நம்தீனுல் இஸ்லாத்தின் ஞானம் முஸ்லிம் சமூகத்தாருள் நாளடைவில் குன்றிவருவதைத் தடுத்து, முஸ்லிம் சகோதரர்களைக் காப்பாற்றி, அவர்களுக்கு மார்க்கக் கல்வியைப் புகட்டி அதன்படி நடக்கச் செய்தும், நம்மார்க்கக் கோட்பாடுகளைக் கெடுத்து ஜனங்களை வழிகேட்டில் இழுக்கத் துணிந்திருக்கும் காதியானிகளைப் போலொத்த சமயவிரோதிகளின் துர்க்கிருத்தியங்களை

நிராகரித்து அவர்களை நேர்வழிக்குக் கொண்டு வரவும் இம்மாதிரி யான ஒரு மகாசபை இலங்கையில் நம் சோதர பிரபுக்களால் பரி பாலிக்கப்பட்டு வரவேண்டுமென இம்மகாநாடு கோருகிறது'' என் னும் தீர்மானத்தை கனம் முஹம்மத்றியால் அவர்கள் பிரேரித்து வெகுநேரம் இங்கிலீஷில் சரித்திர ஆதாரங்களுடன் உருக்கமாகப் பேசினார். மகாகனம் ஜனாப் மௌலவி ஒய். எம். ஹனீப்ஆலிம் சாஹிப் நத்வீ அவர்கள் ஆமோதிக்க இத் தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறிற்று.

பிறகு மிர்ஸாகுலாம் அஹ்மத்சாஹிப் ''நான் ஹிந்துக்களுக்குக் கிருஷ்ணனாகவும், ஆரியர்களுக்கு அரசனாகவும், கிருஸ்தவர்களுக்கு ஏசுவாகவும், சுன்னத் ஜமாஅத் முஸ்லிம்களுக்கு வாக்குச் சொல்லப் பட்ட மஸீஹ், மஹ்தியாகவு மிருப்பதோடு, ஷீயாக்களுக்கு உயி ருள்ள அலீ ஹுஸைன் ஆகவுமிருக்கிறேன். என்னை நம்புவதற்கு எனது முன்னறிக்கைகளே போதிய சான்றாகும். ஆதலின் அவைகள் நிறைவேறினால் நான் மெய்யன். இன்றேல் பொய்யன். சபிக்கப் பட்ட வன்'' என்று மிர்ஸாகுலாம் அஹ்மத்சாஹிப் கூறியிருப்பதையும், ஆத்தம் பாதிரியாரின் மரணத்தைக் குறித்திருந்த முன் னறிக்கைப்படி பாதிரியார் மரணமடையாததால் மிர்ஸா ஸாஹிப் அடைந்த சிறுமைமையும் மகாகனம் ஜனாப் முஸல்மான் ஆசிரியரவர் கள் வெகு தெளிவாக எடுத்துக் காட்டி மிர்ஸா சாஹிபின் புஸ்தகங் களினின்றும் கனம் ஆசிரியரவர்கள் கீழ்கண்ட விஷயங்களைப் படித் துக் காண்பித்தார்கள். அவை பின்வருமாறு:—

1. நாம் ரஸூலாகவும், நபியாகவும் இக்கின்றோம் இதுவே எம்தாவா. (பதுர் 5. மார்ச்சு 1908)

2. நான் ஷரீஅத் துடைய நபியாக இருக்கிறேன். (அர்பயீன் 47 பக்கம்.)

3. நாயகம் அவர்களின் அற்புதங்கள் மூவாயிரம். என்து அற் புதங்களோ மூன்று லக்ஷமாகும். (மக்தூபாதே அஹமதிய்யா நீர் 4, வால்யூம் 3. பக்கம் 49.)

4. நாயகத்துக்குச் சந்திரன் கிரகணமாயிற்று. எனக்கு சந்தி ரன், சூரியன் ஆகிய இரண்டும் கிரகணமாயின. (கஸீதா இஃஜாஸியா, 71 ம் பக்கம்.)

5. நாயகம்அவர்களின் வஹீகளில் அர்த்தம் விளங்காது.(நாய கம் அவர்களுக்கு) தவறுதல்கள் ஏற்பட்டு விட்டன. (இஸால 1182ம் பக்கம்.)

6. நான் ஈஸாவைக் காட்டிலும் மஹா சிறந்தவுன் (தாபி வுல் பலா 13 ம் பக்கம்)

7. ஹஜ்ரத் ஈஸாவின் மாதாவான ஹஜ்ரத் மரியம், விவாகத்திற்கு முன் யூசுப் நஜ்ஜாருடன் கலந்துறவாடி யிருந்ததினால் கர்ப்பமாகி விட்டார். (கிஷ்தீ நூஹ் 16, அய்யா முஸ்ஸுல்ஹு 66-ம் பக்கம்).

8. ஹஜ்ரத் ஈசா அவர்கள் விபசாரப்புத்திரர். சாராயங் குடிப்பார். கெட்ட ஸ்திரீகளின் சவகாஸத்திலிருந்தார். அவரின் அற்புதங்களனைத்தும் ஏமாற்றத் தக்கதாயிருந்தன, அவர் பொய் சொல்லுகிறவரா யிருந்தார். இன்னும் அவர் பொய் சொன்னார். (அஞ்சாமெ ஆத்தம் அநுபந்தம் 7, தாபி உல் பலா கடைசிப் பக்கம். இன்னும் பல புத்தகங்கள்.)

9. ஈஸாவுடைய தாய் தகப்பன் வழியிலுள்ள முறையே மூன்று பாட்டி மார்களும் விபசாரிகளாக விருந்தார்கள். (அஞ்சாமெ ஆத்தம் அநுபந்தம் 7ம் பக்கம்).

10. என்னை மறுத்தவர்கள் காபிர்களாகும். அவருக்குப் பின்னால் தொழக் கூடாது. (ஹக்கீகத் துல்வஹீ 163. துஹ்பா கோரியா அநுபந்தம் 27.)

11. ஆண்டவன் எனக்கு ஹௌதுல் கௌதரைக் கொடுத்திருக்கிறான். அஞ்சாமெ (ஆத்தம் அநுபந்தம் 58.)

12. நான் வஹீயின்றி பேச மாட்டேன்.(அர்பயீன் 3நீர்.44.)

13. ஆண்டவன் மிர்ஸாவைப் பார்த்துக் கூறுகின்றான். உன்னைப் படைக்காவிட்டால் வானுலகத்தைப் படைக்கமாட்டேன். (ஹக்கீகத்துல் வஹீ 99.)

14. குர் ஆனில் சொல்லப்பட்ட அஹ்மத் நானே. (இஸாலா முதற் பதிப்பு 673ம் பக்கம்)

15. நானூறு நபி மார்கள் ஒரு இராஜாவின் ஜயத்தைப் பற்றி முன்னறிக்கைச் செய்தார்கள். அதெல்லாம் பொய்யாகிவிட்டன. ஷைத்தானுடையக் கனவாக யிருந்ததே இதற்குக் காரணமாகும். (ஷஹாதத்துல் குர் ஆன் 45, 90, 91-ம் பக்கம்.)

16. எனக்கு ஒருவரையும் சமமாக்காதீர்கள். குத்பா இல் ஹாமிய்யா 19ம் பக்கம்).

17. நான் முஸ்லிம்களுக்கு வாக்குச் சொல்லப் பட்ட மஸீஹ் ஆகவும், இன்னும் ஹிந்துக்களுக்கு கிருஷ்ணனுகவு மிருக்கின்றேன். (லெக்ஷர் ஸீயால் கோட் 33ம் பக்கம்.)

18. நான் நேர்வழி பெற்ற மஹ்தியாகவும் இன்னும் பல நபி மார்களை விடச் சிறந்தவனுகவு மிருக்கக்கிறேன், (மிஃயாருல் அக்யார் 11ம் பக்கம்)

19. ஈஸாவின் அற்புதங்கள் மெஸ்மரிஸமாகயிருந்தன. அவரி டத்தில் ஏமாற்றத்தைத் தவிறவேறென்றுமில்லை. (அஞ்சாமெ ஆத்தம் அநுபந்தம் 7 முதல்).

20. ஒருவருக்கும் கொடாத சிறப்பை ஆண்டவன் எனக்குக் கொடுத்திருக்கிறுன். (குத்பா இல்ஹாமிய்யா 18 முதல்).

21. குர்ஆன் பூமியிலிருந்து எடுபட்டுப் போய் விட்டது. நான் குர்ஆனை வானத்திலிருந்து கொண்டு வந்திருக்கின்றேன். (இஸாலா 721ம் பக்கம்).

22. குர்ஆன் ஷரீபு அல்லாஹுத ஆலாவின் வேதமாயும், எனது வாயிலிருந்து வந்த வார்த்தைகளாயு மிருக்கின்றது. (ஹக்கீகத்துல் வஹீ 84ம் பக்கம்)

23. நான் மனுமில் என்னை நிச்சயமாக ஆண்டவனென்று கண்டேன். இன்னும் நான் அவனே என்று நிச்சயமாய்க் கூறுகிறேன். அன்றியும் நான் வானத்தையும், பூமியையும் படைத்தேன் (ஆயினுகமாலாத்தே இஸ்லாம் 564ம் பக்கம்).

24. ஆண்டவன் மிர்ஸாவைப் பார்த்துச் சொல்லுகிறுன். ஏ! மிர்ஸா! நீ என்குமாரனைப் போலிருக்கிறுய். (ஹக்கீகத்துல் வஹீ 86ம் பக்கம்).

25. நாம்அவைகளை (ஹதீஸ்களை) இறைவனிடமிருந்து எடுத்தோம், நீங்கள் பிரேதங்களிடமிருந்து ரிவாயத்துச் செய்கிறீர்கள். (இஃஜாஸே அஹ்மதீ 57ம் பக்கம்).

26. நான் ஹஜ்ரத் அபூபக்கர் முதலிய பல நபிமார்களை விட சிறந்த மஹ்தியாகும். அவர்களெல்லாம் எனக்குக்கீழ்ப்பட்டவர்களே. அன்றியும் அபூஹுரைரு மந்த புத்தியுடையவராகும். இப்னுமஸ்ஊத் ஒரு சாதாரண மனிதர். நான் இமாம் ஹுஸைனைவிட மகா சிறப்புப் பெற்றவன். (தாபிவுல்வலா 13ம் பக்கம் இஃஜாஸே அஹ்மதீ 52, 81, முதலிய பக்கங்கள் இஸாலா 596ம் பக்கம் அல்கௌலுஸ் ஸஹீஹ்)

மேற் சொன்ன விஷயங்கள் யாவும் படித்து முடிந்த பின் கனம் ஆசிரியரவர்கள் தொடர்ந்து கூறியதாவது:—இதோ மேஜையின் மேல் அடுக்கி வைக்கப் பட்டிருக்கும் மிர்ஸா ஸாஹிபின் புத்தகங்கள் மூலமாகவே மிர்ஸா ஸாஹிபின் கொடிய கொள்கையை ருஜுபிக்கத்

தயாராக இருக்கிறேன். மிர்ஸாஸாஹிபைச் சார்ந்தவர்களும், சார்ந்தவர்களைப் பின் பற்றியவர்களும் "தீனுல் இஸ்லாம்" என்னும் மார்க்கத்திலிருந்து வருவதாய்க் கனவிலும் நினைக்கவேண்டாம் என்று கூறிவிட்டு, "இக்காதியானீ மதஸ்தர்களைப் பற்றி முஸ்லிம் உலகத்தின் கணக்கற்ற உலமாக்களால் அளிக்கப்பட்டிருக்கும் (பத்வா) மார்க்கத்தீர்ப்பை இந்த மஜ்லிஸில் வீற்றிருக்கும் பிரபல உலமாக்களாகிய உங்கள் முன்னிலையில் வைத்தால் அதை நீங்கள் ஒப்புக்கொள்ளுவீர்களா?" என்று வினவ (ஒப்புக்கொள்ளத் தயார் என்றசப்தம்)

பிறகு கனம் ஆசிரியரவர்கள் "முஸ்லிம் உலகத்தில் முக்கியமாக இந்தியா, மிஸர், றெங்கூன் முதலிய விடங்களிலுமுள்ள உலமாக்களால் "காதியானீ" சம்மந்தமாய்க் கொடுக்கப்பட்டிருக்கும் "பத்வாக்களை" இலங்கைமா நகரின் மேன்மையான உலமாக்களும், கல்விமான்களும் அடங்கிய இம்மகா சபை அங்கீகாரம் செய்து கொண்டது" என்னும் 2-வது தீர்மானத்தை பிரேரித்தார்கள். இதை ஜனுப் முஹம்மது சுலைமான் ஆலிம் சாஹிபவர்கள் ஆமோதித்து "ஹதீது" "தலீல்" ஆகிய ஆதாரங்களைக் கொண்டு "இம்மாதிரியான விசுவாசங்களுடையவர்கள் முர்த்தான கடுங்காபிர்களாகும்" என்றும், "இக் காதியானிகளுடையவும், மற்ற நெறி கேடர்களுடையவும் பிரசுரங்கள் முதலானவைகளை வாசிப்பதால் உங்கள் மனதில் பலவித சந்தேகங்கள் தோன்றுவதற்கு இடங்கொடுக்கும்" என்றும் உபமானங்களுடன் கூறி மீண்டும் "நீங்களினிமேல் காதியானி முதலிய மார்க்க விரோதிகளின் புத்தகங்கள் பத்திரிகைகள், விளம்பரங்கள் ஆகியவற்றை பார்க்கமாட்டோமென்று உறுதி கூறுவீர்களா? அப்படியானுல் கையை உயர்த்துங்கள்" என்று அறிவித்ததும் எல்லோரும் ஏக மனதுடன் "பார்க்க மாட்டோம்" என்ற சப்தத்துடன் தங்கள் கரங்களை உயர்த்தினுர்கள். பின்னர் ஜனுப் முஹம்மது சுலைமான் ஆலிம் சாஹிப் அவர்கள் சந்தோஷத்துடன் சபையோருக்கு ஈமானின் உறுதியுண்டாக துஆச்செய்தவர்களாய் இத்தகைய வழிகேடர்களுடன் நடந்துகொள்ள வேண்டிய முறையைத் தெரிவித்து, முஸ்லிம் அல்லாதாருடன் நாம் நடந்து கொள்வது போலவே முர்த்தத்களுடனும் நடந்து கொள்ளவேண்டும்" எனப் பகர்ந்து இத்தீர்மானத்தை ஆமோதிப்பதாகச் சொல்லி உட்கார்ந்தார்கள்.

ஜனுப் ஏ. எஸ் அப்துல் கப்பார் அவர்கள் தீர்மானத்தை ஆதரித்து மிர்ஸா குலாம் அஹ்மத் ஸாஹிபின் சரித்திர சுருக்கத்

தையும் காதியானி மதம் உண்டான வரலாற்றையும் சுருக்கமாகச் சொல்லி, காதியானிகளுடன் "சாலன்ஜு" க்குத் தயாரென்றும், மேஜையின் மேலிருந்த மிர்ஸா ஸாஹிபின் புத்தகங்களிலிருந்து சில வசனங்களைப் படித்து சபையோருக்கு அவைகளிலுள்ள மார்க்க பேதங்களை எடுத்துக் காண்பித்தார். பிறகு மேற் சொன்ன விஷயங்களை நிரூபிப்பதில் வெகு நேரம் சென்று விட்டதால் அக்கிராசனருடையக் குறிப்பின் பேரில் தனது பிரசங்கத்தைச் சுருக்கி, தீர்மானத்தை தானும் ஆதரிப்பதாகச் சொல்லி முடித்தார். தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டு ஏகமனதாய் நிறைவேறியது.

கம்பளைடவுன் பள்ளிகத்தீபும், கம்பளைடவுன் முஸ்லிம் சங்கத்தின் போஷகருமான மகாகனம் ஜனுப் எம். எல். முஹம்மது தமீம் ஆலிம் சாஹிப் அவர்கள் மிகவும் தேக அசௌகரியமாக யிருந்தும் இச்சபையின் மீதிருந்த வாஞ்சையால் தம் கஷ்டத்தைப் பாராட்டாது, 3 மணி வரை சபையில் வீற்றிருந்ததோடு அக்கிராசனரிடம் உத்திரவு பெற்று மெள்ள மேடைமீது வந்து வெகு உற்சாகத்துடன் ஒரு தலீலைக் கொண்டும், ஹதீஸைக் கொண்டும் இத்தகைய சபையின் உயர்வைப்பற்றி புகழ்ந்துரைத்து, இச்சபையில் நிறைவேறியிருக்கும் தீர்மானத்தை ஒப்புக் கொண்டதற் கடையாளமாக இங்கு வீற்றிருக்கும் மகான்களாகிய உலமாக்கள்மேற் கூறப்பட்டபத்வாவின் கீழ் கையெழுத்திட வேண்டுமென்றும் முதல் தீர்மானத்தில் கண்டுள்ள காரியங்கள் நடைபெறும் பொருட்டு இங்கு கூடியிருப்போர் உடனே ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்கள்.

இதை ஆமோதித்து கம்பளை டவுன் முஸ்லிம் சங்கத்தின் காரியதரிசி "இச்சிறிய கம்பளை டவுனில் உள்ள முஸ்லிம்கள் இப்பெரிய மகா நாட்டைக் கூட்டிச் செய்த முயற்சியைத் தளரவிடாது, இவ்விலங்கை முஸ்லிம்கள் யாவரும் முதல் தீர்மானத்துக்கேற்ப ஒருஸ்திரமான கமிட்டியிருந்து வேலை செய்வதற்கு பக்கபலமாக யிருக்க வேண்டுமென்றும் விபரமாகப் பேசினுர்".

கனம் முஹம்மத்ரியால் அவர்கள் "ஐந்து உலமாக்கள்கொண்ட ஒரு கமிட்டியை தற்சமயம் ஏற்படுத்தி அவர்களுக்குள் ஓர் அக்கிராசனரை நியமித்து இன்னும் தேவையான உலமாக்களை தேர்ந்தெடுத்துக் கொள்ளவும். இச் சபையின் நோக்கங்கள் நிறைவேறவும், நிறைவேறுவதற்கான காரியங்களைச் செய்துகொள்ளவும் அவர்களுக்கு அதிகாரம் கொடுத்து விடவேண்டியது அவசியம்" என்று கூறினுர். மேடைமேலிருந்த உலமாக்களும், மற்றவர்களும் இதை ஒப்புக்கொண்டார்கள்.

(5) உலமாக்களடங்கிய கமிட்டி ஒன்று ஏற்படுத்தப்பட்ட பிறகு வந்தனோபசாரம், துஆ ஆகியவைகளுக்குப் பின் சலவாத்தின் முழக்கத்தினூடே உலமாக்களிடம் கையொப்பம் வாங்கப்பட்டு சபை கலைந்தது என்று இலங்கையைச் சார்ந்த கம்பளைடவுன் முஸ்லிம் சங்கத்தின் பொக்கிஷதார். எம். எஸ். என். உமர்பாஷா எழுதுகிறார்.

பினங்கு நிரூபம்.

....................பத்திராதிபர் அவர்கட்கு

அ. கா. ஹனீபாகம்பெனி செ. அ. முகம்மது ஹனீபா சாய புடைய அஸ்ஸலாமு அலைக்கும். தங்களால் வெளியிடப் பட்டுவரும் "அல்கலாம்" என்னும் மாத சஞ்சிகையை வரவேற்கும் ஒவ்வொரு முஸ்லிமும் அதிர்ஷ்ட சாலி என்பது மிகையாகாது. காதியானி அஹ்மதியாக்களும், அவர்களின் கோஷ்டியாரும் மலிந்து கிடக்கும் காலத்தில் அல்கலாமைப் போன்ற இன்னும் சில பத்திரிகைகள் வெளிவரின் நம் சமூகத்தாருக்கு பெரிய உபகாரமாயிருக்கு மென்ப தில்லையில்லை. தாங்கள் இக்காதியானிகளின் கூற்றை பொது ஜனங் களுக்கு நிதர்சனமாய் எடுத்துக் காட்டிவருவது அவர்கட்கு பெருந் தடையாக யிருப்பதைக் கொண்டு, அவர்கள் "தாருல் இஸ்லாம்" என்னும் மாசிகையில் அல்கலாமையும், சங்கை பொருந்திய உலமாக் களையும், முஸ்லிம்களையும் பற்றி எதிர் முகமாயும், ஜாடையாயும் தங் கள் மனம் போனவாறு வசைச் சொற்களை வரைந்து வருவதை நேயர்கள் கவனித்திருப்பார்க ளென்பதில்லையில்லை.

இன்னும் அவர்களின் இயக்கத்திற்கு "அல்கலாம்" தடை செய் யாதிருக்கின் அவர்களின் நோக்கம் அநேகமாய் கைகூடி எவ்வளவோ முஸ்லிம்களை அந்தகாரமென்னும் காதியானீ அஹ்மதியமதத்தில் சேர்ந்திருப்பார்கள். எத்தனையோ முஸ்லிம்களின் ஈமானைக் கெடுத் திருப்பார்கள். முஸ்லிம்கள் மேற்சொன்ன கெடுதிகளினின்றும் தப் பித்துக் கொள்ள அல்கலாம் பேருதவியாயிருந்ததை முன்னிட்டு அல்லாஹுத ஆலாவைப் புகழ்கின்றேன்.

சிலமாதத்திற்கு முன் பினங்கு,சிங்கப்பூர், மலேயா முழுவதும் பிரயாணம் செய்தவரும் வேதநெறி யறியாத மிர்ஸாகுலாம் அஹ்

மத்காதியானிக் கூட்டத்தில் ஒரு வருமான பா. தாவூத்ஷா என்பவர் நமது அஹ்லேசுன்னத்துவல் ஜமாத்தாரின் உத்தமமான கொள் கையை மருந் திட்டுக் கொல்லவும் பல்வேறு விதமாக கெடுக்கவும் வேண்டு மென்றும் கொண்டுவந்த பிரசாரத்தை "அல்கலாம்," "முஸல்மான்," "தாஜுல் இஸ்லாம்," ஸைபுல் இஸலாம்" ஆகிய பத் திரிகைகளும், மேன்மை தங்கிய வேலூர் கனம் மௌலானா மௌல்வி "ஷர்புதீன்ஸாயபு" அவர்களும் கண்டித்து, உண்மை கொள்கைக்கு ஆதரவளித்து நமது பரிசுத்தமதம் பிரகாசிக்கும்படிச் செய்ததை முன்னிட்டு நாம் உண்மை நாயனைப் பன்முறையும் பணிந்து போற்றுவோம்,

சே. அ. முகம்மது ஹனீபா ஸாஹிப்.

சந்தா நெ. 425

"அல்கலாம்" இனாமாக அனுப்பப்படும்.

சந்தா செலுத்தாமல் இலவசமாய் அல்கலாமை வாசிக்க விரும் பும் உலமாக்கள் இவ்வாண்டு டிசம்பர்மீ முடிவதற்குள் கீழ்க் கண்ட விலாசத்திற்குத் தெரிவிக்கக் கோருகிறோம்.

விலாசம்:—

மௌலவீ, ஷேக் அப்துல் காதிர் சாஹிப்
மத்ரஸயெ ஷம் ஸிய்யா, பண்டார வாடை.

அறிவிப்பு.

1. "திருநபியின் ஜனனம்"

2. "ரபீஉல் அவ்வல் மாதமும் ஓர் அரிய உபதேசமும்" ஆகிய இரண்டு வியாசங்களும் 42 பக்கங்களை யெடுத்துக்கொண்டன. ஆதலின் இச்சஞ்சிகை 72. பக்கங்கள் கொண்டதாய் வெளிவரு கிறது. ஆகவே இச்சஞ்சிகை அக்டோபர், நவம்பர் மாத 10, 11 சஞ்சிகையாகும். அடுத்த சஞ்சிகை இன்ஷாஅல்லாஹுதஆலா டிசம்பரில் பிரசுரமாகும்.

சந்தாதோகை முடிவாகிறது.

செப்டம்பர்மீ'ல் 189, 207, 208, 209; 210, 229.

நவம்பர்மீ'ல் 191 முதல் 203 வரையில். 214 முதல் 219 வரை யில். 230 முதல் 254 வரையில். 226, 227, 228.

டிசம்பர்மீ'ல் 221 முதல் 224, 255 முதல் 363 வரையில்.